
# கோகிலா மகேந்திரன்

# தூவானம் கவனம்



PDF Reducer Demo

கலை இலக்கியக் களம் வெளியீடு-2

# தூவானம் கவனம்

★

கோகிலா மகேந்திரன்

★

கலை இலக்கியக்களம் வெளியீடு - 2

- THOOVANAM KAVANAM
- A novel in Tamil
- By KOHILA MAHENDRAN


- [C] K. MAHENDRARAJAH


- First edition Feb. 1988
- Published by Lyceum of Literary and Aesthetic Studies - Tellippalai
- Printed at Kugan Press, Tellippalai
- Cover Design — Srithar Pichchaiappah
- Offset Plates Kalaimagal Printograph, Jaffna
- Cover Printed at St. Joseph's Catholic Press, Jaffna
- Price Rs. 35/-


# சமர்ப்பணம்

*கலை இலக்கியக் களக் காப்பாளர்*

**பேராசிரியர், கலாநிதி சு. வித்தியானந்தன்**

*அவர்களுக்கு*

# பதிப்புரை

கலை இலக்கியத் துறைகளில் உயர்தர இரசனையைப் பேணுதல், தகுதிவாய்ந்த கலை இலக்கியவாதிகளைக் கௌரவித்தல், புதிய தலைமுறைக் கலை இலக்கியகாரரை வளர்த்தெடுத்தல் ஆகிய நோக்கங்களை முன்வைத்து தெல்லிப்பழையில் 1986-09-05 அன்று கலை இலக்கியக்களம் என்ற இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. மத்தியகுழு உறுப்பினராகப் பன்னிருவரைக் கொண்டமைந்த இக்களத்துக்கு (அண்மையில் அமரரான) பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு பொ. சிவஞானசுந்தரம் (முன்னாள் வட்டாரக்கல்வி அதிகாரி) ஆகியோர் காப்பாளர்களாக அமைந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். வலிகாமம் வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க சமாஜம், மாவை ஆதீனம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகிய நிறுவனங்களும், வர்த்தகப்பிரமுகர்களும் கலை இலக்கிய ஆர்வலர்களும் மனமுவந்துநல்கிய நிதியுதவி, ஆதரவு என்பவற்றால் இக்களம் கடந்த இரண்டரை ஆண்டுகளாகத் தனது நோக்கங்களைச் செப்பமான முறையில் நிறைவேற்றி வருகின்றது. இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளிலும் எல்லாமாகப் பத்தொன்பது நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 1988-07-17 அன்று நிகழ்த்தப்பட்ட 'சிறுகதைநாள்' நிகழ்ச்சி யாழ் மாவட்ட இலக்கியவாதிகள் பலரதும் காத்திரமான பங்களிப்புடன் அமைந்து களத்திற்குத் தனிக் கணிப்பைப் பெற்றுத்தந்தது.

இக்களம் மேற்சுட்டிய நோக்கங்களின் ஒரு கூறாக நூல்களை வெளியிடும் முயற்சியிலும் ஆர்வம் செலுத்தத் தொடங்கியுள்ளது. இவ்வகையில் முதல்முயற்சியாக

**அறுபது வயது இளைஞர் கலைப்பேரரசு** என்ற சிறுபிரசுரம் கடந்த ஆண்டில் வெளிவந்தது. களத்தின் இணைச் செயலாளர்களில் ஒருவரும் நாடகக் குழுத் தலைவருமான கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்களின் மணிவிழா நிகழ்வை ஒட்டி 1988-04-30 அன்று அந்நூல் வெளியிடப்பட்டது. அதனை அடுத்து இப்போது களத்தின் இரண்டாவது வெளியீடாகக் களத்தின் மற்றொரு இணைச்செயலாளரான கோகிலா மகேந்திரன் அவர்களின் **தூவானம் கவனம்** என்ற இந்நூல் வெளிவருகிறது.

கோகிலா மகேந்திரன் அவர்கள் ஈழத்தின் இன்றைய படைப்பாளிகளுள் முதல்வரிசையில் திகழ்பவர். கடந்த ஏறத்தாழப் பதினைந்தாண்டுக்காலப் பகுதியில் இலக்கியத்துறையில் அயராது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பவர். நான்கு சிறுகதைத் தொகுதிகளையும் ஒரு நாவலையும் வெளியிட்டு நூற்பிரசுர முயற்சியிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தி நிற்பவர். அண்மையில் நோர்வே தமிழ்ச்சங்கம் ஈழத்து எழுத்தாளர்கட்கு நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசினைப் பெற்றதன் மூலம் தமது படைப்பாற்றலுக்கு அனைத்துலக ரீதியான கணிப்பை ஈட்டிக் கொண்டவர். ஈழத்து எழுத்தாளர்களுள் இவருக்கு உரிய தனிப் பண்பை இனங்காட்டும் வகையில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள்,

> ''குறிப்பாகச் சமூக நிகழ்ச்சிகளையும் அவற்றினடியாக நிகழும் உணர்ச்சி முனைப்புக்களையும் சித்திரிப்பதைவிட, அவற்றுக்கு அடிப்படையான உளவியற் காரணிகளை விமர்சிப்பதே கோகிலாவை ஏனையவர்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டும் முக்கிய அம்சமாகும். நோய்தீர்க்கும் மருத்துவர் ஒருவர் நோயாளியைப் பகுப்பாய்வு செய்து, நோயின் மூலத்தை இனங்காண முயல்வது போலக் கோகிலா அவர்கள் சமூக நோய்களுக்கான காரணிகளை உளவியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்பவராக அமைகிறார்.''

எனக் குறிப்பிட்டுள்ளமை பொருத்தமான மதிப்பீடாகவே அமைந்துள்ளது. (பார்க்க பின்னிணைப்பு) இத்தகு கணிப்பைப் பெற்ற கோகிலாவின் முதல் நாவல் **துயிலும் ஒருநாள் கலையும்** சிவன் கல்விநிலைய வெளியீடாக 1986 இல் வெளிவந்தது. இந்த இரண்டாவது நாவல் கலை இலக்கியக் கள வெளியீடாக மலர்கின்றது.

இந்த நாவலின் கதையம்சம், அந்நிய நாடுகளின் தொடர்பால் எமது நாட்டுக்கு எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பேரபாயங்களில் ஒன்றைச் சுட்டிக்காட்டும் தொனிப்பொருள் கொண்டது. பிறநாடுகளிலிருந்து இங்கு இறக்குமதியாகக்கூடிய எயிட்ஸ் முதலிய பயங்கர நோய்களே தூவானம் என்ற சொல்லால் சுட்டப்படுகின்றன. சமகாலத்தில் பேரினவாத ஒடுக்குமுறை என்ற பெருமழையில் சிக்கித்தவிக்கும் நாம் இம்மழை ஓய்ந்த பின்னரும் தொடரக்கூடிய மேற்படி தூவானங்கள் பற்றியும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்ற எண்ணக்கருவில் முகிழ்ந்த கதை வடிவம் இது. கல்வியறிவும் கலையுணர்வும் காதலும் நிறைந்த ஒரு குடும்பத்தை மையமாக வைத்துப் புனையப்பட்ட இக்கதையின் சம்பவச் சூழல் 1987 ஜூன் மாதத்திற்கு முற்பட்ட ஐந்தாறு ஆண்டுக்கால யாழ்ப்பாணக் கிராமி

யக்களத்தைப் பகைப்புலமாகக் கொண்டது. பேரினவாதிகளின் இனக்கொலை நிகழ்ச்சிகளின் மத்தியில் கதை நிகழ்கிறது.

சமூக - குடும்பப் பிரச்சினைகள் பலவற்றையும் அறிவுபூர்வமாக அணுகும் திறனும் கலையுணர்வும் மிக்க வீணு என்ற குடும்பப்பெண்ணின் நினைவுகளூடாகவே கதை வளர்த்துச் செல்லப்படுகிறது. பாடசாலையொன்றில் நிகழும் விளையாட்டுப் போட்டியின் தொடக்கம் முதல் நிறைவுவரையான சிலமணிநேர கால எல்லைக்குள் அவளது நினைவுகளில் கதைவிரிகிறது. அந்நினைவுகள் சில ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று பழையவற்றை மீட்பதோடு சில ஆண்டுகள் முன்னோக்கி 1991ஆம் ஆண்டு வரை சென்று எதிர்காலத் தளத்திலும் உலாவுகின்றன.

இந்நாவல் முதலில் ஈழநாடு இதழில் தொடராக வெளிவந்து வாசகர் பலரது கவனத்தை ஈர்த்தது. இப்பொழுது நூல்வடிவம் பெறும் இது ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் தனிக்கணிப்பைப் பெறும் என நம்புகிறோம். இதனைச் செப்பமான முறையில் அச்சேற்றித் தந்த தெல்லிப்பழைக் குகன் அச்சகத்தினருக்கும் அழகிய அட்டை வரைந்துதவிய ஓவியர் ஸ்ரீதர் பிச்சையப்பா அவர்களுக்கும் எம் நன்றி என்றும் உரியது. எமது கலை இலக்கியப் பணிகள் மேலும் தொடர வாசகர்களின் அன்பையும் ஆதரவையும் நாடிநிற்கிறோம்.

தெல்லிப்பழை **கலை இலக்கியக் களத்தினர்**
*1989 - 02 - 06*

# சமுதாய ஓவியம்

***"ஓவியத்துக்கு புகைப்படத்துக்கும் என்ன வித்தியாசம்....."***

**"புகைப்படம் வெளித்தோற்றத்தை மட்டும் காட்டும். ஓவியம் மன நிலை உள்ள உணர்வுகளையும் காட்டும்"**

[ விடை சொன்னவள் வீணு - ''தூவானம் கவனம்'' என்ற இந் நாவலின் முக்கிய பாத்திரம்.

கேள்வி கேட்டவன் வீணுவின் கணவனாக வரப்போகிற - பின்னால் ஆகிவந்த ஜீவன் - நாவலில் உக்கியபாத்திரம். ]

சிறுகதை, குறுநாவல், நாவல் என்கிற படைப்பிலக்கிய ஆக்கங்களில் பல, அதி நவீன எலெக்ட்ரோனிக் சாதனங்களுடன் மிகத் துல்லியமாகப் பெறப்படும் புகைப்படம் போன்றவை; சில, ஓவியம் போன்றவை. இச் சில, வெளித் தோற்றத்தைக் காட்டுவது மட்டுமன்றி, உள்ளாந்தரங்கங்களையும் துல்லியமாகக் காட்டி நிற்பவை.

கோகிலா மகேந்திரன் அவர்களுடைய ஆக்கங்கள் இவ் விரண்டாம் வகையைச் சார்ந்தவை.

**"ஒரு நல்ல கடன இலச நாடகத்திலே இருப்பது போலே, ஒரு நல்ல ஓவியத்திலேயும் ஒரு லயம் இருக்கும்"** — ஜீவன், கோகிலாவின் ஆங்கங்களிலே ஒரு லயம் லயித்திருப்பதை உணர முடிகிறது.

அபூர்வ நிகழ்வுகளைக் கருத்தூன்றி நோக்குவதும், அவற்றின் தொடர்வுகளைத் தொடர்ந்து அவதானிப்பதும்

மனித இயல்பு. கடந்த சில ஆண்டுகளாகக் கோகிலா மகேந்திரனின் சிறுகதைகள், நாவல் என்பவற்றில் அபூர்வங்கள் பல கண்டு வியப்புற்றேன்.

படைப்பிலக்கியங்களில் சமுதாயப் பிரக்ஞை இருக்க வேண்டும் என்பது இன்றைய தாரக மந்திரம். சமுதாயப் பிரக்ஞை என்பது ஏழை—பணக்காரன் — முதலாளி — தொழிலாளி — சாதி — சமயம் — இனம் மொழி என்பவற்றின் முரண்பாடுகளோடு எம்மிற் பலரிடம் நிறைவு பெற்று விடுகிறது. சமுதாயம் என்ற விசுவத்தை நல்ல கண்ணாடியில் விம்பமாக மேற்கண்ட அம்சங்களிற் காட்ட நாம் தவறவில்லை.

சமுதாயம் என்பது இந்த அம்சங்களில் முழுமையாக அடங்கிவிட்டதா? சமுதாயத்தை — சமுதாய வளர்ச்சியை — சமுதாய மேம்பாட்டை — சமுதாய ஆரோக்கியத்தைக் கட்டி அமைக்குங் காரணிகள் இவை மட்டுமா?

கோகிலா மகேந்திரனின் சிறுகதைகள், நாவல்களில் அவர் சமுதாயத்தைத் தம் எழுத்து என்ற சக்தி வாய்ந்த தொலைநோக்கியால் ஆராய்ந்து தமது தரிசனங்களை எமக்கு ஓவியமாகத் தருகிறார்.

சமுதாயம், உயிரியல் — சமூகவியல் — அரசியல் — பொருளியல் — தொழினுட்பவியல் — மொழியியல் — உளவியல் — பாலியல் போன்ற பல்வேறு அறிவியல் துறை சார்ந்த காரணிகளாலும் பாதிக்கப்படுவது, கோகிலா மகேந்திரனின் ஆக்கங்களில் முன்குறித்த அம்சங்களும், இங்கு குறித்த அம்சங்களும் விரவி. சமுதாயப் பிரக்ஞை என்பது நிறைவு பெறுவதைக் காணுகிறோம். இவ்வாறுக நிறைவு பெற்ற சமுதாயப் பிரக்ஞையோடு எழுதுகிற எழுத்தாளருள் கோகிலா மகேந்திரன் முதலாமவர். இரண்டாமவர் இனித்தான் வெளிவர வேண்டும் என எண்ணுகிறேன்.

''தூவானம் கவனம்'' என்ற இந் நாவலின் கதை இன்றைய எமது சமுதாயத்தின் கதை. பல 'இயல்' ரீதியாகவும் சமுதாயத்தை நாம் இங்கு தரிசிக்க முடிகிறது. ஜனரஞ்சக எழுத்து எதுவும் தொட்டும் பார்க்க முடியாத அம்சங்கள் இந் நாவலில் மிகத் துணிச்சலாக — மிக லாவகமாக அமைக்கப் பட்டுள்ளன.

கதையைத் தொடங்குகிற — முடிக்கிற உத்தி அபாரம். கோகிலா மகேந்திரன் இங்கு கையாளும் நனவோடை உத்தி இறந்த காலத்துள் ஒரு கட்டத்திலும், எதிர்காலத்துள் வேறொரு கட்டத்திலும் ஓடிப் பாய்கிறது. இது துணிச்சல் மிக்க புதிய ஒருபரிசோதனை.

கதையம்சங்களைக் காட்டி, நாவலில் வரும் உயிரோட்டமான இடங்களைத் தொட்டு விமரிசனம் செய்வது இங்கு நோக்கமல்ல. ஆயினும் படிப்பு, பணம், பதவி, கல்விக் கூடங்களில் ஓநாய்கள், மனிதநேயம் - — விசுவாசம் என்பது பற்றிய கோகிலா மகேந்திரனின் அணுகல் — கணிப்பீடு — காட்டுகை என்பவற்றை ஓர் அனைத்துலக எழுத்தாளருக்குரிய இலட்சணங்களாகக் காண்கிறேன் என்பதைக் கூறாமலிருக்க முடியவில்லை.

கோகிலா மகேந்திரன் ஈழத்தமிழ் இலக்கிய உலகில் தோன்றி விட்ட ஓர் ஒளிமிக்கதாரகை. அத் தாரகை அகில உலகிலும் பிரகாசிக்கும். அதற்கான காலம் பிறந்து விட்டதற்கான அறிகுறிகள் பல; இந் நாவல் அவற்றுள் ஒன்று.

வாழ்த்துகிறேன்

திருநெல்வேலி
1989 - 02 - 12

இ. ராஜநாயகன்

# நன்றி

- ★ ஈழநாடு வாரமலருக்கு ஒரு நாவல் வேண்டும் எனப் பலதரம் என்னை வற்புறுத்தி நாவலை எழுதத் தூண்டியதோடு, அது பிரசுரமாகி வந்த காலத்தில் உரிய ஆலோசனைகளும் உற்சாகமூட்டல்களும் தந்து வழி காட்டிய புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்களுக்கும்
- ★ நாவலை நல்ல முறையில் பிரசுரித்த ஈழநாடு நிறுவனத்துக்கும்
- ★ புதிய உத்தி முறைகளை நாவல்களில் கையாள்வது பற்றிய சிந்தனைகளுக்கு வலுவூட்டி, நாவல் ஈழ நாட்டில் பிரசுரமான பின்னர் முழுவதையும் சிரத்தையோடு வாசித்துப் பல குறை நிறைகளைக் கூறித் திருத்தச் செய்த பன்மொழிப் புலவர் பண்டிதர் க. உமாமகேஸ்வரன் அவர்களுக்கும்
- ★ அருமையான அணிந்துரை வழங்கிய எழுத்தாளர், பரமரசிகர், நல்ல விமர்சகர் சு. இராசநாயகன் அவர்களுக்கும்
- ★ தகுந்த ஆலோசனைகள் வழங்கி, நாவலை முகத்துக்கு நேரே விமர்சித்துப் பதிப்புரையும் வழங்கிய கலை இலக்கியக் களத் தலைவர் கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்களுக்கும்
- ★ கலை இலக்கியக் கள வெளியீடாக இந்நூலை வெளியிட அநுமதி தந்து, வெளியீட்டு விழாவையும் நடத்துகிற கலை இலக்கியக் களத்தின் மத்திய குழுவினருக்கும்
- ★ வெளிநாட்டு வாழ்வு பற்றிய தகவல்களை நாவல் எழுதுவதற்கெனச் சரியான முறையில் தந்து உதவிய நில அளவையாளர் திரு. ஆ. மகாலிங்கசிவம் அவர்களுக்கும்
- ★ அட்டைப்பட ஓவியத்தை அருமையாய் வரைந்து அன்பளிப்புச் செய்த ஸ்ரீதர் பிச்சையப்பா அவர்களுக்கும்
- ★ அட்டைப்பட ஓவியத்தைப் பெறுவதில் உதவிய புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், திரு. எஸ். ஜெகதீசன் ஆகியோருக்கும்
- ★ அட்டைப்படம் அச்சிடுவதில் உதவிய கத்தோலிக்க அச்சகத்தினருக்கும், கலைமகள் பிரின்ரோகிறுப் நிறுவனத்தாருக்கும்
- ★ நூலை உரிய நேரத்தில் அழகாக அச்சிட்டு உதவிய தெல்லிப்பழை குகன் அச்சகத்தாருக்கும்

என் அன்பு நிறைந்த நன்றிகள்.

*1989-02-14* **கோகிலா மகேந்திரன்**

**கோகிலா மகேந்திரன்**

மழை பெய்துகொண்டிருக்கும்போதே சுள்ளென்று வெயிலடிக்கும் ஒரு கலவை மனஉணர்வு வீணுவுக்குள் ஏற்பட்டது.

பசும்புல் நிறைந்த மைதானத்தைச் சுற்றிக் கல்லூரி மாணவர்களின் அணிநடை அழகுப் பவனியாக நடைபெறுவதைக் கண்டு மனம் அமைதி பெற்றுக் குதூகலிக்கிறது. உள்ளே இருந்து ஒலிக்கும் இசையின் தாளத்திற்கு ஏற்றபடி ஒன்றின்பின் ஒன்றாக நாலு இல்லங்கள் ''லெப்ற் றைற்'' ''லெப்ற் றைற்'' ''லெப்ற்'' என்று லயம் தவறாமல் கால் வைத்துக் கையை வீசி வரும் காட்சி மனதை அள்ளுவதாகவே இருக்கிறது. ஆனால்...?

## 17-6-86

## 1

முன்னால் வருவது பச்சை இல்லம். அந்த இல்லத்தின் தலைவர் பச்சைக்கொடியை ஏந்தியபடி முன்னால் கம்பீரமாக வர அவரைத் தொடர்ந்து முப்பத்திரண்டு ஆண்களும், அதேயளவு எண்ணிக்கை கொண்ட பெண்களும் கொண்ட அணி பச்சை பாஜ், பச்சைறிபன், பச்சை'பெல்ற்' போட்டு வெள்ளை நிறச் சீருடையில் நடந்துவருவது

மிகஅருமையான காட்சியாக இருக்கிறது. இவள் முன்பு இந்தக் கல்லூரியில் படித்தபோது பச்சை இல்லந்தான்!

பழைய மாணவி என்ற முறையில்தான் இவளை மெய் வல்லுநர் போட்டியில் அறிவிப்பாளராக அழைத்திருக்கிறார்கள். பச்சை நிறத்தைத் தொடர்ந்து நீலம். பிறகு சிவப்பு...! இறுதியாக மஞ்சள்!

பிரதம விருந்தினர் ஏறி நிற்கும் மேடைக்கு அருகில் வந்ததும் 'ஐஸ்றைற்' சொல்லி அவர்களைக் கடக்கும்வரை தலையைத் திருப்பிக் கைகளை அசைக்காது மரியாதை செலுத்தி நடந்து அணி அவர்களைக் கடந்து முடிந்தவுடன் மீண்டும் முன்போல நடந்துசெல்கிறார்கள்.

திடீரென அந்த மாணவர்கள் எல்லாம் 'யூனிபோம்' அணிந்த போர்வீரர்களாகிக் கைகளில் துப்பாக்கிகளுடன் அணிநடையில் செல்வதுபோல் மனக்கண்ணில் ஒரு தோற்றம். நிராகரிக்க முடியாத ஏதோ ஒன்று தன்னை அவ்வாறு சிந்திக்க வைப்பதை வீணா உணர்ந்தாள்!

கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்க்கிறபோது நான்கு இல்லங்களும் மைதானத்தைச் சுற்றி வந்து மைதான நடுப்பகுதிக்குச் சென்று 'கிளாஸ் ஹோல்ற்' சொல்லிக் கவனமாய் நிற்கிறார்கள். பச்சைத் தரையில் 'சொக்ஸ்' மட்டும் போட்ட வெள்ளைப் பாதச்சுவடுகள் படிய அவர்கள் நிற்பது பசுமைதான். அவர்களுக்கு 'இலகுவாய் நில்' கட்டளை கொடுக்கப்படுகிறது.

இவளுக்கு மனதினுள்ளே இலகுவாய் நிற்க முடியவில்லை! ''இப்போது முதன்மை விருந்தினர் அவர்கள்





கல்லூரிக் கொடியை ஏற்றி வைப்பார்'' என்று தேனிலும் இனிய குரலில் இவள் அறிவிப்புச் செய்ததைத் தொடர்ந்து முதன்மை விருந்தினர் அதிபர் அருகில் நடந்துவர, கம்பத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றை அவிழ்த்துக் கொடியைப் பறக்கவிடுகிறார். சாரணர் தலைவன் உதவி செய்கிறான்.

உள்ளேயிருந்து கொடிப்பாட்டுப் பாடப்படுகிறது!
''கொடி பறக்குது கொடி பறக்குது கொடி பறக்குது பாரடா. கோலமிக்க கோவில் எங்கள் கொடி பறக்குது பாரடா'' எல்லோரும் எழுந்து நின்று கொடிக்கு மரியாதை செய்கின்றனர்.

எப்போதோ ஒருநாள் 'தனிநாட்டின் கொடி' இவ்வாறு பறக்க விடப்படுகையில் தானும் அதில் கலந்து மகிழவேண்டும் என்ற விருப்பம் தோன்றிய அதே கணத்தில் ''என்னுடைய வாழ்வும் இப்படித்தான் கொடி கட்டிப் பறக்கும் என்று கனவு கண்டேன்'' என்ற நினைவு உள்ளுக்குள் வருவதையும் தவிர்க்க முடியவில்லை.

அவன் ஏன் அப்படி மாறினான்? மாற்றம் என்பது உலகின் மறுக்க முடியாத விதியா? அல்லது நியதியா? மனிதனின் சிந்தனைகளும் செயற்பாடும்கூட மாறாமல் இருக்க முடியாதா?

மனித வாழ்வு எப்படியும் நூறு வருடங்களுக்கு மேல் அமையப்போவதில்லை. அதிலும் இன்றைய சூழ்நிலையில் திட்டமிடப்பட்டு ஒரு இனம் அழிக்கப்பட்டு வருகின்ற நிலையில்...அந்த வயது இன்னும் குறைந்து விடுகிறது. இந்த எண்ணம் இவளுக்குள் ஒரு தற்காலிக உணர்வைத் தோற்றுவித்தது. அதற்குத்தான் எத்தனை

போராட்டங்கள்?

எப்போதிருந்து ஜீவனிடம் மாற்றம் ஏற்படத் தொடங்கியது என்று நினைத்துப்பார்க்க முயன்றாள். மனதுக்குள் காரணம் தெரியாத ஏகாந்த உணர்வு சுழன்றது.

அவனும் அவளுமாகச் சங்கரின் மகன் 'தினேஷ்' உடைய நான்காவது பிறந்ததின விழாவிற்குப் போயிருந்தபோதே முதன்முதலில் அந்த மாற்றம் அவனுக்குள் பிரசவமாகியிருக்கலாம். அல்லது அதற்கு முன்பே மனதிற்குள் உருவாகி அன்றுதான் வெளியேற முயன்றிருக்கலாம். அல்லது அதற்கும் முன்பே குடும்பத்தில் கடைசிப்பிள்ளையாய்ப் பிறந்துவிட்ட காரணத்தால் மிகச் சிறுவயதிலிருந்தே...?

சங்கர் அந்த விழாவிற்குப் பத்தாயிரம் ரூபா வரை செலவழித்திருப்பான்.

''பிறந்த நாள் கேக் டிசைன்'' ''வீணை வடிவத்தில் அமைந்த அதன் ஐசிங்'' அது பற்றியே பல விமர்சனங்கள்! அதற்கு மட்டுமே தனியாகப் பல புகைப் படங்கள்!

வெளியே முற்றத்தில் போடப்பட்டிருந்த அலங்கார வளைவில், மோகன நிலவின் வருஷிப்பில் பாண்ட் வாத்தியக்கோஷ்டியின் பாடல்கள்! அரை மணி நேரத்திற் கொன்றாக ஒவ்வொரு புதிய உடைகளில் தோன்றிய தினேஷின் முகத்தில் அன்று உலக சௌந்தர்யங்கள் யாவும் ஒன்றுசேர்ந்துவிட்ட நிறைவு! விழாவிற்குப் போயிருந்த குழந்தைகளுக்கெல்லாம் பந்தும் பலூனுமாகப் பரிசுப் பொருள்கள்!





பல கமெராக்களின் 'கிளிக் கிளிக்' படமெடுப்புகளுக்கு மேலாக வீடியோ படமெடுப்பு! பிறகு எடுத்த படத்தை அதிலேயே போட்டுக்காட்ட ஒவ்வொருவரும் தன்னைப் பார்த்து மகிழும் பூரிப்பு!

தமிழர் கலாசாரங்களையே குழிதோண்டிப் புதைக்கும் ஆட்டங்கள்! ஒரு ஏகாந்த சோகம் இவளுக்குள் அப்போது அனுபவமானதுதான்!

அந்த விழாவிற்குப் போயிருந்த பபியோ அல்லது பாப்பாவோ ''எங்களுக்கு ஏன் அப்பா இப்படி ''பேர்த்டே'' கொண்டாடுறேல்லை?'' என்று கேட்கவில்லை. கேட்காவிட்டாலும் அவர்கள் மனதிற்குள்ளாவது நினைத்து மறுகக்கூடும் என்ற நினைவு ஜீவனின் சமநிலையைக் குழப்பிவிட்டதா?

ஆனால் அவன் அதைக் கலந்துரையாடித் தீர்த்திருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை. வழக்கம்போலவே உணர்ச்சிவசப்பட்டுவிட்டான். இம்முறை சற்று அதிகமாகவே!

பணம் நிறையவே குவிந்துபோயிருக்கும் சங்கர் வீட்டில் ஒரே ஒரு ஆண்பிள்ளையும், இவர்களுக்கு இரண்டு பெண்பிள்ளைகளும் வந்து அமைந்ததே ஒரு தவறோ? அதையும்கூட யார் தீர்மானித்தார்கள்? ஜீவனுடைய நிற மூர்த்தங்கள் தானே தீர்மானித்தன? இவள் என்ன செய்ய முடியும்!

சிவப்பும் கறுப்பும் கலந்த புள்ளி இறகுகளைக்கொண்ட பெரிய வண்ணத்துப்பூச்சி ஒன்று எங்கிருந்தோ பறந்து வந்து, அறிவிப்பாளர் மேசையில் வைக்கப்பட்டிருந்த பூச்சாடிப் பூ ஒன்றில் அமர முயன்றது. அமருவதும்

உடனே பறந்து செல்வதும் மீண்டும் வந்து அமர முயல்வதுமாய்ச் சிறிது நேரம் போராடிற்று.

இந்த வண்ணத்துப் பூச்சியின் குஞ்சுப்பூச்சி ஆணாக இருக்குமோ அல்லது பெண்ணாக இருக்குமோ என்பதைத் தீர்மானிப்பது தாய்ப்பூச்சியின் புணரிக்கலந்தான் என்ற நினைவு வந்தபோது ''நல்ல காலம் மனிசரிலை அதுஆண் புணரியாலை தீர்மானிக்கப்படுறது. இல்லாட்டி அந்தப் பிழையும் என்னிலை பொறிஞ்சிருக்கும்...,'' என்று நினைத்து ஆறுதல் பட்டுக்கொண்டாள் இவள்.

பபியினுடைய முதலாவது பிறந்தநாளைத்தானும் பெரிதாகக் கொண்டாட இவர்களின் பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை. ஜீவனின் அக்காவின் திருமணத்திற்குக் கொடுத்த அதிக அளவு பணம்...! இவளிடம் நகைகூட அதிகம் இல்லாத நிலை! (புன்னகை தவிர) யாரிடமும் எந்த ஆபத்திலும் கடன் வாங்குவதில்லை என்ற ஜீவனின் கொள்கை (அல்லது வக்கிர உணர்வு) வேறு!

அன்று...

தினேஷின் பிறந்த நாள் கொண்டாட்டம் முடிந்து வீடு திரும்பிய அந்த இரவு! திரும்பும்போதே வீதியை இருள் முற்றாக ஆக்கிரமித்திருந்தது. ஆங்காங்கே கண் சிமிட்டும் ஓரிரு சாலை விளக்குகள் தவிர, வானிலே தேய்பிறை.

வீடு திரும்பிய பிறகும் ஒரே புழுக்கமாக இருந்தது. திடீரென்று காற்றில் எப்படி இவ்வளவுக்கு ஈரப்பதன் அதிகரித்துப்போனது? காற்று வீச மறந்த, கடல் பேசாமல் இருந்த, ஈரப்பதன்நிரம்பிய நிலையை அடைந்துவிட்ட புழுக்கமான அந்த இரவு!





ஜீவனின் முகம் மாறியிருந்தது. வழக்கம்போல ஏதோ கீறிக்கொண்டிருந்தான்.

ஓவியம், நாடகம் இவை இரண்டிலுமிருந்து ஜீவனைப் பிரிக்க முடியாது. இவள் கேட்டாள்,

''ஏன் உங்கடை முகம் ஒரு மாதிரி இருக்கு?''

''ஒண்டுமில்லை''

''என்னட்டை மறைக்கிறதாலை பிரச்சினை தீராது. சொல்லுங்கோவன் என்ன பிரச்சினை?''

அவன் மீண்டும் பேசாமலே இருந்தான்.

'ரெட் பக்சண்டலே' சொல்வதுபோல,

''ஒரு குடும்பத்தில் இளைய பிள்ளையாக வளருகிற போது,

அந்தக் குழந்தை காலம் முழுவதும் சில விடயங்களில் பாதிக்கப்படும். அப்பிள்ளையின் சிந்தனைகள் அக்குடும்பத்தில் ஒருபோதும் காத்திரமாகக் கணிக்கப்பட்டிருக்காது. சிலவேளை அந்தப் பிள்ளையின் கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கும் அல்லது தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டிருக்கும். ஆகவே அக்குழந்தை இயல்பாகவே தன் சிந்தனைகளைக் கலந்துரையாடித் தீர்த்துக் கொள்வதைவிட எழுதி அல்லது கீறியே வெளிப்படுத்தப் பார்க்கும்...'

என்பது ஜீவனைப் பொறுத்தவரை முற்றாகப் பொருந்திவிட்டதோ?

அவளின் பலதர வற்புறுத்தலின்பின்

''நீங்கள்தானே எல்லாத்தையும் கெஸ் பண்ணுவீங்கள். இதையும் 'கெஸ்' பண்ணுங்கோவன்...'' என்றான்.

அந்த நிலையிலும் அவன் அவளுக்குக் கொடுத்து வந்த ''நீங்கள்'' என்ற சமமரியாதை குறைந்துபோகவில்லை.

''என்னுடைய ஊகங்கள்தான் உங்கடை கவலைக்குக் காரணமா?''

''நீங்கள் ஊகம் செய்யிற ஊகம் செய்யாத எல்லாக் காரணமும்தான்...'' அவனுடைய குரலில் முதன் முறையாக ஒரு விரக்தி கலந்த வெறுப்புணர்வினை அவள் உணர்ந்தாள்.

''எனக்குத் தெரியும். எங்கட பபிக்கு நாங்கள் பெரிசா ஒண்டும் செய்யேல்லை...''

''உங்கடை மனச்சாட்சிக்கு எல்லாம் தெரியிறது, பெரிய காரியம் எண்ட அளவிலை திருப்திப்படவேண்டியதுதான்...

அவன் நீண்ட பெருமூச்சை விட்டுக்கொண்டு எழுந்துபோய்ப் படுத்தான்.

''இதுக்கும் என்ரை மனச்சாட்சிக்கும் என்ன தொடர்பு'' தலையணையில் தளர்ந்து கிடந்த அவனது கைகளைப் பிடித்து அவள் கனிந்த குரலில் கேட்டாள்.

''சங்கரின்ரை மனிசிக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசமெண்டு நினைச்சுப் பார்த்தால் தெரியும்...''





அவள் முகத்தில் ரத்தம் குப்பெனப் பிரவாகித்தது.

ஓ! சங்கரின் மனைவி நாலு இலட்சம் இனாம் கொணர்ந்த பெரிய பணக்காரி! அதுவா? அதையா சொல்கிறார் இவர்! அதையேதானா? அதைச் சொல்ல வேண்டிய தேவை வந்துவிட்டதா?

''காசு குடுத்தும் ஒரு பெண்ணை நான் அடைய விரும்பமாட்டன். காசு வாங்கியும் ஒரு பெண்ணை அடைய விரும்பமாட்டன்'' என்று சொன்ன ஜீவன், அந்த வேறுபாட்டை நினைக்கவேண்டியகாலம் வந்து விட்டதா? பணம் உண்மையில் அவ்வளவு முக்கியமானதுதானா?

அவனது கரத்தைப் பிடித்திருந்த கைகள் தானாகத் தளர்ந்து விலகின!

ஆம்! அன்றிலிருந்துதான் அவன் புறத்தில் வேறுபடத் தொடங்கினான்.

வேறுபடத் தொடங்கினான் என்றுகூடச் சொல்ல முடியாது. அவனும் ஒரு சாதாரண மனிதனாக மாறத் தொடங்கினான் என்றுதான் சொல்லலாம்!

''இப்போது பச்சை இல்லத்தின் தலைவர் தமது இல்லக்கொடியை ஏற்றிவைப்பார்...'' என்ற இவளது அறிவிப்பைத் தொடர்ந்து அந்த இல்லத் தலைவர் கம்பீரமாக நடந்துவந்து, செங்கோணமாக வெட்டித் திரும்பித் தமது இல்லக்கொடியைக் கம்பத்தில் ஏற்றப் பச்சைஇல்ல மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்கிறார்கள்.

பச்சைக்கொடி கம்பீரமாகக் காற்றில் அசைகிறது.!
பச்சை ஒரு துணை நிறமாக இருந்தபோதிலும்கூட மன
துக்கு மிக இனிய நிறம். குளிர்மையும் புத்துணர்வும்
ஊட்டுகிற நிறமென்று 'அலக்ஸ்சாண்டர் ஸ்ரொடாட்'
சொல்வார். ஜீவனுக்குக்கூடப் பச்சை நிறத்தில் மிகப்
பிரியம். அவர்களின் திருமண எழுத்தின்போதுகூட
அவன் ஒரு அழகிய மென்பச்சைநிறக் காஞ்சிபுரம்தான்
பரிசாகக் கொண்டுவந்தான்.

''பச்சை, நீலம், கறுப்பு நிறங்கள் மங்கள காரி
யத்துக்கு எடுக்கப்பிடாது தம்பி.'' என்று அவனின்
தாயார் எவ்வளவோ சொல்லியும் அவன் பிடிவாத
மாக அதனையே கொண்டுவந்தான்.

''உலகத்திலை தாவரங்களிலை பச்சையம் இருக்கிற
தாலைதான் நாங்கள் எல்லாரும் உயிர் வாழிறம். உயிர்
வாழ்வுக்கு மூலாதாரமான நிறம் பச்சை! உளவியல்
ரீதியாக மனதுக்கு நிறைவு தாறநிறம் பச்சை. நாடக
மேடைகளிலும் நாங்கள் பச்சையையும் நீலத்தையுமே
குளிர் நிறங்களாகப் பாவிக்கிறம். அன்பு, வசந்தம்
கோடை ஓய்வு இதுகளைப்போலை அற்புதமான விஷயங்
களைக் காட்டவே நாங்கள் மேடையிலை பச்சை ஒளியைப்
பயன்படுத்திறம் பிறகு அது எப்படி அமங்கலமான
நிறமாகும்?'' என்பது அவனது வாதம்! பிடிவாதமும்
தான்!

'அவனது வாதங்களை எவ்வளவு ரசிக்கலாமோ அவ்
வளவு அவனது பிடிவாதங்களால் ஒருவர் பாதிக்கவும்
படலாம்!, என்பதை ஜீவன் எப்போதும் உணர்ந்ததாய்
இல்லை. அப்படியான ஒரு பிடிவாதத்தில்தான் சவூ
திக்கும் போயிருக்கிறுன். அவளையும் இரண்டு வயது





கூட நிரம்பாத பபியையும் மூன்றரை வயதான
பாப்பாவையும் விட்டுப்பிரிந்து...!

அங்கு போய்ச் சில காலத்தின்பின்னர் இவர்களை
யும் அழைத்துக்கொள்வதாய்க் கூறினுன். ஆனுல்...?

...இப்போது நீல இல்லத்தின் தலைவர் தமது இல்
லக்கொடியை ஏற்றிவைப்பார்...''

அவளது அறிவிப்பு ஒலிபெருக்கி ஊடாக வெளி
யில் உரப்பாகக் கேட்கிறது.

## 2

மாலை நேரங்களில் பபியையும் பாப்பாவையும் வைத்து வீட்டில் 'தாக்காட்ட' முடியவில்லை என்றால் கீரிமலைக் கடற்கரைக்கு அழைத்துப்போவாள். மிக அருகில் போக முடியாது! அந்தியேட்டி மடத்திற்கு இந்தப் பக்கம் நின்றுகொண்டு கடலைக் காட்டுவாள்.

பபிக்கு ஒரே குதூகலமாக இருக்கும்!

''அம்மா என்னம்மா?'' என்று கேட்பாள்.

''இதுதான் கடல்...கடல்...''

''என்ன நிறம் அம்மா என்ன நிறம்''

''கடல் நீல நிறம் பபி நீலம்''

''ஏனம்மா நீலம் ஏனம்மா?''

சூரிய ஒளியின் ஏழு நிறங்களில் அதிகம் சிதறும் நிறம் நீலம் என்ற விளக்கத்தை இவளுக்குச் சொன்னால் இவள் புரிந்துகொள்வாளா என்று ஒரு கணம் சிந்திப்பாள். பிறகு சொல்வாள்.

''ஆகாயம் நீலம் அப்ப கடலும் நீலம்''

ஆகாயத்தை காட்டியவுடன் பபி சொல்வாள்,

''பிளேன் அப்பா ஓ!'' கைகள் இரண்





டையும்விரித்துக் காட்டிச் சிரிப்பாள். அப்பா பிளேனில் ஆகாயம் வழியாகப் போயிட்டாராம்!

''நாங்களும் கெதியிலை அப்பாட்டைப் போவம்...'' என்று அவளை அணைத்துக்கொண்டு கொஞ்சுவாள் விணு.

''நாங்கள் எப்ப போறம்?'' என்று கேட்பாள் பாப்பா.

''இப்போது சிவப்பு இல்லத்தின் தலைவர் தமது முல்லைக்கொடியை ஏற்றிவைப்பார்.''

சிவப்பு வீரத்திற்கும் வெற்றிக்கும் உரிய நிறம்!

அபாயமான நிறமுந்தான்; சிவப்பு விளக்குப் பிரதேசம் ஒருவரின் வாழ்வையே அபாயத்தில் தள்ளுகிற பிரதேசம்!

ஜீவன் வெளிநாட்டில் எப்படி இருப்பான்?

இங்கே இருந்த காலங்களில் ஒருநாள்கூட இவள் பக்கத்தில் படுக்காவிட்டால் உறக்கம் வராது என்று சொல்லுகிற ஜீவன்!

அவன் புறப்படும்போது விமான நிலையத்தில் வைத்து இவள் பயத்துடன் கேட்டாள்.

''இஞ்சை ஒரு நாள்கூட என்னை விட்டிட்டுப் படுக்கமாட்டீங்கள், அப்ப அங்கை போய் என்ன செய்யப்போறீங்கள்?''

அது எல்லாம் பழக்கந்தானே? உங்களைப் பார்த்தால்தான் மனம் அப்படிப் பறக்கும். நீங்கள் இல்லாத

இடத்திலே எல்லாம் சரியாகிடும்''

மெதுவாய்ச் சிரித்தான் அவன்.

சவூதி நாட்டுப் பெண்களின் முகத்தையே பார்க்க முடியாது அங்கே! இங்கிருந்து சவூதிக்கு வேலைக்குப் போகிற பெண்களையும் சந்திப்பது கஷ்டம். சவூதியில் சட்டப்படி ஒழுக்கக்கேடுகள் எதுவும் நிகழமுடியாது. இவை வீணுவுக்கு நிம்மதியைக் கொடுத்தாலும்கூட மனதிற்குள் ஏதோ ஒரு பெரும் பயம் இருந்து கொண்டே இருந்தது.

மீண்டும் அவள் கவனம் அந்தச் சிவப்புக் கொடிக்குத் திரும்பியது.

எமது உணர்வுகள் எல்லாவற்றையும் தட்டி எழுப்பும் நிறம்! இரத்தத்திலகம் இடும்போது எமக்குள் பொங்குகிற வீரம். உணவு விடுதியின் சிவப்புச் சுவர்களினுல் எமக்குள் வெடித்துக் கிளம்புகிற பசி. சூடான நிறந்தான்! பிரமுகர்களுக்குச் சூடான வரவேற்புக் கொடுப்பதென்ருல் செங்கம்பள வரவேற்பு! சிவப்பு வெளிச்சங்களின் கீழ் வெடித்துப் பாய்கிற! சீ அப்படியெல்லாம் ஜீவனைப் பற்றிப் பயப்படக்கூடாது! பயப்படச் சந்தர்ப்பமும் வராது சவூதியில்...

ஆனுலும் விரைவில் சவூதிக்குப் போய்விடுவதே நல்லது. நிம்மதியுந்தான்.

யாழ்ப்பாணத்தைவிட்டு இந்த நேரத்தில் புறப்படுவது உண்மையில் வீணுவுக்கு விருப்பமில்லாவிட்டாலும் கூட அவளது குடும்பம் குலைந்து போகாமல் இருப்பதற்காகப் போகவேண்டும். ஒப்பந்த காலம் முடிந்தவுடன் ஜீவனையும் அழைத்துக்கொண்டு திரும்பிவிட வேண்டும்.





ஆனுல்!

சவூதிக்குப் போன புதிதில் வாரம் இரு கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்த ஜீவன் பின்னர் சில காலம் ஒன்ருவது எழுதியவன் இப்போது மாதம் ஒன்ருய்க் குறைந்துவிட்டதை எப்படி விளங்கிக்கொள்ளலாம்?

அவள் எதிர்பார்ப்புக்கள் யாவும் இதழ் உதிர்ந்த காம்பாக வெறுமைப்பட்டு நின்றது ஏன்?

''உங்களை எல்லாம் விரைவில் அழைத்துவிடுவேன்'' என்று ஆரம்பத்தில் எழுதியவன் இப்போது அதுபற்றி எதுவும் எழுதாமலே விட்டுவிடுவது பற்றி...?

அன்பும், பாசமும், அருமையுங்கூடத் தூரத்தினுல் பாதிக்கப்படுகிறதா? நிதமும் கண்டு பேசிப் பழகாத ஒருவரிடம் அன்பு வைப்பது கடினந்தானு? அல்லது...?

நாடகப் பயித்தியமான ஜீவன் இறுதியாக நடித்த ''வீரத்தீ'' என்ற நாடகத்தில் பெரிய போர் ஒன்று நடைபெற்று அதனுல் ஏற்பட்ட அழிவுகளை சிவப்பு ஒளியில் உறை நிலையில் காட்சியாக்கியது வீணுவின் மனதில் படமாகியது.

''இறுதியாக மஞ்சள் இல்லத் தலைவர் தமது இல்லக் கொடியை ஏற்றுகிருர். அவரது கொடி கடைசியாக ஏறினுலும் கூட இதுவரை நடைபெற்ற முடிவுகளின்படி மஞ்சள் இல்லமே முதலிடத்தில் நிற்கிறது. இதோ அவ்வில்லத்தின் கம்பீரமான தலைவர்''

பணத்தின் அளவில் இறுதியில் இருக்கிற குடும்பங்கள் கூட வாழ்க்கையின் வெற்றி என்கிற ஏணியில் முதலிடத்தை அடையலாம்; அடைந்திருக்கின்றன.

அதற்கு எத்தனையோ முறைகள் இருக்கின்றன. ஜீவனும் அதை எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தவன் தான்...

ஆனால் இறுதியில்...!

ஊமை அழுகையாய் அழத் தொடங்கிவிட்டிருந்த உள்ளத்தைத் திருப்பி நிகழ்வுகளில் கவனம் செலுத்தினன் வீணு.

பிரதம விருந்தினர் மூன்று வெள்ளைச் சமாதானப் புறுக்களைப் பறக்கவிட்டார். கல்லூரி விளையாட்டுக்குழுத் தலைவனான மாணவன் முன்னால் வந்து பிரதம விருந்தினர், அதிபர் ஆகியோர் முன்னிலையில் ''தோல்வி வெற்றிகளைச் சமனாக மதித்து நேர்மையுடன் விளையாடுவோம்'' என உறுதி உரை எடுத்துக்கொண்டான்.

திருமணம் என்பதும் இப்படித்தான் - இருவரும் வாழ்விலும் தாழ்விலும் ஒன்றாகச் செல்வோம் என்று உறுதியுரை எடுத்துக்கொள்ளும் ஒரு சடங்கு!

குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்த வீணுவும் கடைசிப் பிள்ளையாகப் பிறந்த ஜீவனும் ஒத்து வாழ்வது உண்மையில் கடினமானதா?

விடிகாலைக்குளிரின் இங்கிதமான சூழ்நிலையில் யாரோ பனிபுலராத ரோஜாப் பூக்களைப் பறிப்பது போல...அவர்களது திருமணம் மிக இனிமையாகத் தான் நடந்தது. காதலிப்பவர்கள் எல்லாம் கலியாணம் செய்துகொள்வதில்லை. மனதிலே வித்திட்டு மனதிலே வளர்ந்து கனவுகளாய்ப் பூத்து, நினைவுகளாய்ப் பழுத்து மனதிலேயே கருகிப் போகின்ற காதல்தான் எமது நாட்டில் சாதாரணம்! அப்படிக் கருகிப் போவதற்கு





காரணமாய் சாதி, சமயம், அந்தஸ்து, சீதனம், பெற்றோர் விருப்பம் என்று எத்தனையோ சங்கதிகள் தலை நீட்டும்!

அந்தச் சங்கதிகளை எல்லாம் கடந்து காதல் வெற்றி பெறுவது ஒரு இன்ப நிகழ்வுதான்! அந்த நிகழ்வு இவனுக்கும் நடந்தது.

ஒரு நாடகம் பார்த்தால் அதைப் பார்த்து முடிய ஒரு அமைதியும், நிம்மதியும், தளர்நிலையும், திருப்தியும் பார்வையாளனுக்கு ஏற்படவேண்டுமே ஒழிய திணறலும் அமைதியின்மையும், பரபரப்பும், பயமும் ஏற்படக்கூடாதென்று ஜீவன் அடிக்கடி சொல்வான். அதுவே நாடகத்தின் வெற்றி என்பான்.

அதேபோல...காதல் திருமணத்தில் முடிந்ததென்றால் அதைத் தொடர்ந்து அவன் வாழ்வில் ஒரு அமைதியும் நிம்மதியும் தளர் நிலையும் வந்திருக்க வேண்டுமே?

ஆனால் தொடர்ந்து அந்த உணர்வில் காலூன்றி நிற்க முடியாமல் இது என்ன?

மேலோட்டமான உணர்வுகள் உள்ள பலருக்கு நடுவே ஆழமான உணர்வுள்ள ஒருவனாக - ஒருத்தியாக வாழ்ந்து அவர்களிலிருந்து மனதால் மட்டும் விலகி வாழ்வது மிகக் கடினந்தான். மேலோட்டமான உணர்வுள்ள பலர்தான் அவனை மாற்றிவிட்டனரா? அவர்களில் முக்கியமானவர் ஜீவனின் மூத்த அண்ணரான திலகர்!

ஒரு நாள்!

மேற்கு வானிலே செம்மைக் கவிப்புத் தெரிந்த 'மைம்மல்' நேரம்! இவளது சினேகிதி லதா வந்திருந்தாள். இவள் வீட்டின் முன்புறத் தோட்டத்திலிருந்து லதாவுடன் கதைத்துக்கொண்டிருக்க, ஜீவன் உள்ளே 'ஹொற் பிளேற்'றில் தேநீருக்கு நீர் கொதிக்க வைத்துவிட்டு வெளியே வருகையில் திலகர் வந்தார்.

அவருடைய பார்வையே ஒரு கேள்வி - அல்ல பல கேள்விகள் கேட்டன.

''என்ன? மனுசியைக் காலுக்குமேலே கால் போட்டுக்கொண்டு கதைக்க விட்டிட்டு நீ தேத்தண்ணி வைக்கிறியோ?'' என்பதே அவர் கேட்காத அந்தக் கேள்வி.

அதற்கு முன்னரும் பல தடவைகளில் அவர் ஜீவனுக்கு ஆலோசனைகள் கூறியதை அவனே வந்து வஞ்சகமில்லாமல் இவளிடம் சொல்லியிருக்கிறான்.

''இனி உங்களுக்கு இரண்டு பொம்பிளைப் பிள்ளையளும் பிறந்திட்டுது. வேறை வேலையளை விட்டிட்டுக் காசு சேர்க்கிற வழியளைப் பார்க்கவேணும்''

''இலட்சியங்களும் புதுமையளும் பேச்சுமேடைக்கும் ஓவியத்துக்கும் நாடகத்துக்கும் சரிவரும். வாழ்க்கைக்குச் சரிவராது.''

''பொம்பிளை வீட்டு அலுவல்களைப் பாக்கவேணும். நீ உழைக்கவேணும். நீ பெட்டைச்சி மாதிரி வேலை பாக்கிறது பெரிய அவமானம்...ஓ''

''நாளைக்கு அடுத்த பிள்ளைக்கு உன்னைப் பால் குடுக்கச் சொல்லிக் கேட்டாலும் கேப்ப. அப்ப அதுக்கும் விடப் போறியோ? சீ...''





''மெய்யோ அடுத்த பிள்ளை நீயே பெறப் போறாய்!'' இப்படி அன்றன்று பலப்பல ஆலோசனைகளும் கிண்டல் பேச்சுக்களும்!

பேச்சற்ற பெரு மௌனமே அப்போதெல்லாம் இவளின் அணிகலனாக இருந்திருக்கிறது. இவற்றால் எல்லாம் ஜீவனை அசைக்கமுடியாது என்ற நம்பிக்கையுந்தான்.

ஆனால் ?

''குடும்பத்தில் மூத்த பிள்ளையின் திறமைகளைத்தான் ஒருபோதும் எட்டிப்பிடிக்க முடியாது என்ற உணர்வைக் குடும்பத்தின் கடைசிப் பிள்ளை பல தடவை பெற்றிருக்கும். ஆகவே திறமைகளை மதிப்பீடு செய்யும் உண்மையான சோதனைகளை அது எப்போதும் தவிர்த்தே வாழப் பார்க்கும்'' என்று எங்கோ படித்த நினைவு!

ஜீவனும் இந்தச் சோதனையை நேரே முகங்கொடுக்கமுடியாமல்தான் சவூதிக்குப் போனானா? 'பணம் சேர்த்தல்' என்பது வெறும் வெளிக்காரணமா? அப்படியும் இருக்கலாம்!

''காசில்லாமல் எங்கடை இலட்சியத்தைக்கொண்டு எப்படி நாங்கள் பறக்கிறது?''

திருமணம் செய்யு முன்னரே பல தடவை இப்படி இவள் ஜீவனிடம் கேட்டிருக்கிறாள்.

''நாங்கள் பறக்கிறதெண்டு தீர்மானிச்சிட்டால் மேகங்களே எங்களுக்குச் சிறகாயிடும் வினு...'' என்று பேசிய ஜீவனைத் திலகர்தான் படிப்படியா மாற்றி விட்டாரா? அல்லது அவனது பதில் உண்மையில் கவிதைக்கும் கற்பனைக்கும் நாடகத்திற்கும் மட்டுந்தான் பொருத்தமானதா?

மாணவர்கள் இப்போது 'எபவுட்டேர்ன்' கட்டளைக்குத் திரும்பி அணி கலைந்து தமது இல்லங்களை நோக்கி ஓடுகிறார்கள்.

தமது வாழ்வும் அணிகலைந்துவிடுமோ அல்லது அணி கலையாமற் காப்பாற்றிவிடலாமோ என்பதே இவளுக்குள்ளே பெரியதோர் கேள்வியாக எழுந்து விரிகிறது.

உலக மாந்தர் முழுப்பேரினது கண்களும் திடீரென ஒரு பெரிய கண்ணாக மாறித் தமது வாழ்வையே பார்த்துக்கொண்டிருப்பது போன்ற ஒரு கற்பனை!

இவர்களுக்குத் திருமணமான புதிதில் கைலாசபதி அரங்கில் நடைபெற்ற நாடகம் ஒன்றுக்கு ஜீவன் இவளை அழைத்துப் போனான். அங்கே அரங்கின் பின் திரையில் ஒரு தனிக்கண் கீறப்பட்டிருந்தது.

''உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது'' என்பதை அவர்கள் அப்படிக் காட்டுகிறார்கள் என்று ஜீவன் விளக்கம் சொன்னான். அப்படி ஒரு கண் இவர்களைப் பார்ப்பதுபோல...!

பக்கத்து வீட்டுப் பொன் தில்லையின் வாழ்வு இப்படி முடிந்துவிடவில்லையா? அவனும் காதலித்துத்தானே திருமணம் செய்துகொண்டான்! பத்துப் பதினைந்து வருடமாய் மணவாழ்வு என்ற வண்டியை ஓட்டிக்கொண்டுவந்து, மூன்று குழந்தைகளும் பெற்றுக்கொண்டபிறகு...அவன் வேலை செய்யும் இடத்திற்குப் பக்கத்தில் ஒரு இருபது வயது இளம் பெண்ணோடு வாழப் போய்விட்டானே?

மனைவியும் மூன்று பிள்ளைகளும் நடுத்தெருவில்





நின்று கதறிக்கொண்டிருக்கிறார்கள்!

தமிழ்ச் சமுதாயத்தின் குடும்பங்கள் 'ஒருவன் ஒருத்திக்கு' என்று திடமாகவும் ஒழுக்கமாகவும் வாழ்ந்த காலம் மலையேறி விடப்போகிறதா? விரும்பிய இடத்தில் விரும்பிய நேரத்தில் 'ஃபிறீ செக்ஸ்' என்ற மேற்கு நாடுகளின் கொள்கை இங்கும் பரவ முயலுகிறதா?

மேற்கு நாட்டில் எழுதப்பட்ட ''பெலிக்கன் புக் சீறிஸ்'' ஒன்று 'செக்ஸ்' பற்றிச் சொல்வதை இவள் நினைவில் கொண்டாள்.

நவீன மனிதனுடைய அறிவு, நுண்மதி ஆகியவை அவனது இயல்பான உடல் தேவையுடன் யுத்தம் செய்கின்றன. அதனால் அவனுக்குள் பல மனத்தடைகள் ஏற்படுகின்றன. இன்னும் விஞ்ஞானபூர்வமாகச் சொல்வதானால் மூளை முண்ணாணுடன் யுத்தம் செய்கிறது. இதனால் ஆரோக்கியமான பாலியல் தெறிவினைகள் தொழிற்படமுடியாமல் தயங்கிப் பயப்படுகின்றன. இந்தப் பயமே தவறுகளுக்கு இடமளிக்கிறது.

இப்படியெல்லாம் போதித்ததோடு இப்படியெல்லாம் நடந்தும் வந்த அசிங்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் தானே இறைவன் ''எய்ட்ஸ்'' என்ற தண்டனையை மனிதனுக்கு வழங்கியிருக்கிறான்.

பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட தமது பிள்ளை எதிர்ப்பால் நண்பர்கள் பலருடன் தொடர்பும் உறவும் கொள்ளாவிட்டால் அப்பிள்ளை ஏதோ குறைபாடு உடைய பிள்ளை எனக் கருதிக் கவலையுற்ற மேற்கு நாடுகளின் பெற்றோர் இப்போதுதான் மெதுவாகக்

மேலைத்தேசப் பண்பாடுகளைப் பற்றி அறிய விரும்பு கிறார்கள். இப்போது பொன் தில்லை போன்ற பலர்!

''இன்றைய மெய்வல்லுநர் போட்டியில் முதல் நிகழ்வாக நூறு மீற்றர் ஓட்டங்கள் இடம்பெற இருக்கின்றன. முதலில் பதின்மூன்று வயதின்கீழ் ஆண் களுக்கான நூறு மீற்றர் ஓட்டம்! இதில் பங்கு பற்றும் இலக்கங்கள் பதின்மூன்று ஏழு, இருபத்தாறு, நாற்பத்து மூன்று, ஐம்பத்தாறு, எழுபத்தெட்டு. ஓட்ட வீரர்கள் உடனே ஆரம்பஸ்தானத்திற்கு அழைக்கப்படுகிறார்கள்.''

இவ்வாறு அறிவித்துவிட்டுத் தொடர்ந்து அறிவிக்கு மாறு இவளுக்குச் சைகைசெய்கிறார் அருகில் இருக்கும் ஆண் அறிவிப்பாளர் வரதன்.





''இந்த நூறு மீற்றர் ஓட்டங்களின் தொடக்குந ராகத் திரு. எஸ். நடராஜா அவர்களும், தீர்ப்பாள ராகத் திரு. எம். முத்துவேல் அவர்களும் நடுவர் களாகத் திரு. ஏ. ஆனந்தராஜா, திரு. ஆர். இராஜ நாயகம், திரு. சி. சுப்பிரமணியம் ஆகியோரும் காலக் கணியராக திரு. வி. 'வைரமுத்து அவர்களும் கடமை புரிவர்.'' என்று இவள் அறிவித்ததைத் தொடர்ந்து நூறு மீற்றர் ஓட்டங்கள் ஆரம்பமாகின்றன.

குதிக்கால் நிலத்தில் படாமல் நுனிக்காலை வைத்து ஓடுகிற மாணவர்கள் காற்றாய்ப் பறக்கிறார் கள். முழுக்காலும் நிலத்தில்பட ஓடுகிறவர்கள். பின் தங்கி விடுகிறார்கள். வாழ்க்கையிலும்.....?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், நாடக அரங்கக்கல் லூரி ஆகியவற்றின் சூழல்களில் ஜீவனைக் காதலித்த நேரங்களில் வாழ்க்கை ஓட்டத்தில் தன் சிநேகிதிகள் பலரையும் விடத்தானே மிக முன்னுக்கு ஓடுவதாய் இவள் உணர்ந்திருக்கிறாள்.

3

இப்போதும்கூட அந்த நினைவுகள் நினைக் குந்தோறும் நினைக்கும்தோறும் இனிப்பாகவே இருக்கின்றன.

காலைச்சூரியனின் மஞ்சள் கிரணங்கள்

தார்ரோட்டைக் கவிந்துகொண்டிருந்த ஒரு காலைப்பொழுதில் நாச்சிமார் கோவிலடிச் சந்தியில் இறங்கி இவள் கிழக்கு நோக்கிப் பல்கலைக்கழகம் சென்றாள்.

அதே பஸ்ஸில் வந்து இவளைத் தொடர்ந்து இறங்கி இவளுக்குப் பின்னே நடந்துவந்த ஒரு வாலிபன்!

ஆனந்தகுமாரசாமி விடுதிக்கு முன்னால் இருவரும் சந்தித்தபோது, இவள் தன்னை விஞ்ஞானபீட மாணவியாக அறிமுகம் செய்ய, அவன் தன்னை ஒரு எஞ்சினியர் என்று கூறிக்கொண்டான். சாதாரண அறிமுகம்தான்.....!

அந்த அறிமுகத்தை அவள் மறந்தும் விட்டிருந்த போது ஒருநாள்.....

பச்சென்று தீப்பிடித்து எரிகிறமாதிரி ஒரு முகம்... தனக்கு மிகவும் தெரிந்தது போன்ற ஒரு முகம். நாடக அரங்கக் கல்லூரியின் நாடகப் பட்டறை வகுப்பில் தனக்கு அருகில் நின்று குரல் எழுப்புவதை இவள் திடீரென்று உணர்ந்தாள்.

சட்டென்று நினைவு வந்தது!

ஒரு நாள் பல்கலைக்கழகத் தெருவில் ஆனந்தகுமாரசாமி விடுதிக்கு முன்னால் எனக்கு அறிமுகமான முகம்.. பெயர் ஜீவன்! ஒரு எஞ்சினியர்!

ஆனால் தான் நாடக அரங்கக்கல்லூரி வகுப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாய் அன்று அவன் சொல்லவில்லையே? கடந்த ஓரிரு வகுப்பில் இவனைக் காணவும் இல்லை.





தாகணந்தரி...ததிகிணதொந்தரி...
தாகணந்தரி...ததிகிண தொந்தரி...

முதலில் வலது காலை உயர்த்தித் தூக்கி முன்னால் வைத்துப் பின்னர் இடதுகாலை அதேபோல உயர்த்தி முன்னால் குறுக்கே வைத்து, அடுத்த இரண்டு தாளத்திற்கும் அக்கால்களைப் பின்னே வைத்து.

தாகணந்தரி...ததிகிண தொந்தரி...
தாகணந்தரி...ததிகிண தொந்தரி...

நாட்டுக் கூத்துக்களில் போர் வீரன் ஒருவன் மேடைக்கு வருகிற பாணியை எல்லோரும் பட்டறையில் பயிலுகின்றனர்,

பயிற்சியை நடத்துகிற கனகசிங்கம் சொல்லுகிறார்.

''எல்லாரும் ஒரேமாதிரிச் செய்யாமல், 'கொன்பிளிக்ற்' வரத்தக்கதாச் செய்யுங்கோ...கரக்ரர் போமேசன்...ஆ..எங்கை...''

இவ்வளவையும் உரப்பாக ஒரு சர்வாதிகாரிக்குரிய மிடுக்குடன் கூறியவர் திடீரென்று குரலை இறக்கி,

''ஓ...கொன்பிளிக்ற் எண்டால் முரண்பாடு. இந்தச் சந்தர்ப்பத்தை, விட்டால் எனக்கும் இங்கிலீசு தெரியுமெண்டு எப்படிக் காட்டிறது. ஆ...செய்யுங்கோ எல்லாரும் தாகணந்தரி, ததிகிணதொந்தரி...''

எனும்போது இவள் பக்கத்தில் நின்று ஆடிக்கொண்டிருந்த ஜீவன் சிரித்தான். உடல் முழுவதும் சிரித்தது!

மனத்தடையற்ற முறையில் இவரால் எப்படி இவ்வளவு சந்தோஷமாகச் சிரிக்க முடிகிறது?

அவனும் சிரித்தான்...ஆனால் அது உதடு விலகாத வெறும் புன்சிரிப்புத்தான். அவனது அந்தச் சிரிப்புத் தான் இவளை முதலில் கவர்ந்தது என்று சொன்னால் தவறில்லை.

அதற்குப் பிறகு, நாடக அரங்கக் கல்லூரியின் ஒவ்வொரு நாடகப் பட்டறை வகுப்பிலும் இவளது பிரக்ஞை அவனை நோக்கி விழித்துக்கொண்டேயிருந்தது என்பதில் சந்தேகமில்லை.

ஒருநாள் ''அரங்கு என்பது என்ன?'' என்பது பற்றி விரிவுரை நிகழ்த்திக்கொண்டிருந்த விரிவுரையாளர் சொன்னார்.

''ஆங்கிலப் படத்தை ஒருபோதும் இரண்டு தரம் பார்க்க முடியாது. ஆனால் தமிழ்ப்படம் எவ்வளவு மோசமாக இருந்தாலும், அதன் குறைகளைச் சொல்லிக்கொண்டே, கமராவின் நிழல் படத்தில் விழுவதையும் சகித்துக்கொண்டே நாங்கள் இரண்டு முறை பார்க்கவில்லையா? ஏனென்றால் நாங்கள் அதில் ஒரு பகுதி. அது எங்கள் கதை. அது எங்கள் மொழி...''

எல்லாரும் அமைதியாக இருந்து குறிப்பெடுத்துக் கொண்டிருக்கையில்,

''என்றாலும் நாங்கள் அத்தகைய மோசமான படங்களை மூன்று தரம் பார்ப்பதால்தான் அவை போன்ற பல தொடர்ந்து வருகின்றன. நாங்கள் தரமற்றதைப் பார்க்கமாட்டோம் என்று பகிஷ்கரிப்புச் செய்ய வேணும்...''

என்று ஒரு குரல்!

எல்லோரும் திரும்பிப்பார்க்கின்றனர்? இவனுந்தான்!





ஜீவன்!

அந்த 'கொன்பிளிக்ற்' கதையோடு இவளை நெருங்கிய ஜீவன்!

''ஒரு நாடகத்திலை கட்டாயம் ஒரு முரண்பாடு இருக்கவேணும். அது ஒரு தனி மனிதனுக்கும் இன்னொரு தனி மனிதனுக்கும் இடையிலை ஏற்படலாம். ஒரு தனி மனிதனுக்கும் அவன் வாழுற சமூகத்துக்கும் இடையிலை ஏற்படலாம்... அல்லது ஒரு சமூகத்திற்கும் இன்னொரு சமூகத்திற்குமிடையிலை ஏற்படலாம்.''

என்று சொல்லுகிற ஜீவன் தனக்குள் தானே முரண்படும் இயல்புள்ளவனாய் இருந்திருப்பதைப் புரிந்துகொள்ள அவளுக்கு நீண்ட காலம் எடுத்திருக்கிறது!

''சிறை உடைக்கும் குயில்கள்'' என்ற மகளிர் அமைப்பொன்றின் மாவட்டச் செயலாளராக அவள் அப்போது இருந்தாள். அந்தக் குழுவில் இருந்த அத்தனை பெண்களும், ''சீதனம் கொடுத்துத் திருமணம் செய்வதில்லை'' என்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்கள்.

முதல்நாள் ஜீவனோடு ஆறுதலாகக் கதைக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டபோதே அதை அவள் அவனிடம் சொல்லியிருந்தாள். பட்டறை வகுப்பில் மதிய இடைவேளை வந்தது. களப்பயிற்சிப் பொறுப்பாளர் சொன்னார்.

''இந்த இடைநேரத்திலை நீங்கள் முன் பின் அறிமுகமில்லாத ஒரு பயிலுநரை முற்றாக அறிஞ்சு கொள்ளலாம். அவரோடை உங்கடை சாப்பாட்டைப் பகிர்ந்துகெள்ளலாம். பயிற்சி முடிஞ்சு வெளியேறேக்கை ஒருத்தரை ஒருத்தர் சகோதர உணர்வோடை புரிஞ்ச நிலையிலை வெளியேற அது உதவும்''

அந்த நேரத்தில் ஜீவன் இவளைத் தேடி வந்தான். இவளுக்கு அருகில் தளர்நிலையில் சப்பாணி கொட்டி அமர்ந்துகொண்டான்.

''உங்களைப்பற்றி எனக்கு என்ன சொல்லப் போறீங்கள்?'' என்று அவன் கேட்டபோது அவள் சொன்ன விடை இதுதான்.

''நான் பல்கலைக்கழகத்திலை இறுதி வருஷம் படிச்சுக் கொண்டிருக்கிறன். அதோடை 'சிறை உடைக்கும் குயில்கள்' அமைப்பிலை செயலாளராய் இருக்கிறன். இந்த இரண்டிலையுமிருந்து நீங்கள் என்னை அறிஞ்சுகொள்ளலாம். வேறை எதுவும் சொல்லத் தேவையில்லை .. ''

உடனே அவன் 'ஓ' என்று பெரிதாகச் சிரித்தான்.

''அப்படியெண்டால் நீங்கள் சீதனம் குடுக்காமல் தான் கலியாணம் செய்வியளா?'' என்று கேட்டான்.

இவள் மிகத்திடமாக ''ஓம் அதிலை என்ன சந்தேகம்?'' என்றாள்.

''ஒரு ஆம்பிளையளும் அப்படி உங்களைக் கலியாணம் செய்ய விரும்பாட்டில்...?''

''நாங்கள் கலியாணம் செய்யாமல் இருப்பம்...''

அவன் புன்னகைத்தான்.

அப்போது அவன் அவளது அந்த இலட்சியத்தைச் சரி என்று ஏற்றுக்கொண்டானா இல்லையா என்று அவளால் அறிய முடியவில்லை. கண்களில் ஒரு இறுக்கம் மட்டும் தெரிந்தது.

இடையில் அவன் எப்படி எப்படி எல்லாம் மாறி





பெண் நிலைவாதத்திற்காகவே பெரிதாகப் பாடுபட்டு... சீதனமின்றியே அவளைத் திருமணம் செய்து மற்ற ஆண்களுக்கோர் முன்னுதாரணம் காட்டி....வீட்டிலே எல்லா விடயத்திலும் அவளுக்குச் சமஉரிமை தந்து,

அப்போதெல்லாம் நிராகரிக்க முடியாத ஏதோ ஒன்று தன்னை மிக இறுக்கமாக அவன்பால் ஆகர்ஷிப்பதை அவள் உணர்ந்திருக்கிறாள்.

இறுதியில்—அந்த பேர்த்டே பாட்டிக்குப் போய் வந்து ..

''சங்கரின்ரை மனுசிக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் எண்டு நினைச்சுப் பாத்தால் தெரியும்...''

என்று சொன்னபோதுதான் அவன் இவ்வளவு காலமும் தனக்குள்தானே முரண்பட்டு நின்றது தெளிவாய்த் தெரிந்தது. கண்களில் அப்போது அந்தப் பழைய இறுக்கமும் தெரிந்தது!

''சங்கரின்ரை மனுசிக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் எண்டு நினைச்சுப் பாத்தால் தெரியும்...''

மீண்டும் மீண்டும் செவியில் அந்த வார்த்தைகள் ஆவர்த்தனமாகி மனதை அலைக்கழித்துக்கொண்டிருந்தன.

அப்படியானால் இவ்வளவு காலமும் அவனுக்குள் அவன் இறந்து வாழ்ந்தானா? இதுதான் ஜீவனின் சுய உருவமா?

அந்த அதிர்ச்சி அவளைப் பயங்கரமாகத் தாக்கிய போது அவள் தனக்குள்தான் இறந்ததுபோல் உணர்ந்தாள்.

இன்னும் அதே இறந்த நிலைதான்!

கனவில் தெரியும் தோற்றம்போலக் கல்லூரி மைதானமும் அதில் விளையாடிக்கொண்டிருக்கும் பிள்ளைகளும் தெரிகிறார்கள். மப்பும் மந்தாரமும் நிறைந்து ஒருவித அசாந்திக்கு ஆட்பட்டிருக்கும் அவள் நெஞ்சம் போலவே அந்த மைதானமும்

இப்போது இருநூறு மீற்றர் ஓட்டங்கள் ஆரம்பமாகின்றன. அதற்கான அறிவிப்பை அவளுக்கு அருகில் இருக்கும் அறிவிப்பாளர் வரதன் செய்துகொண்டிருக்கிறார். இருநூறு மீற்றர் ஓட்டத்தில் பங்கு பற்றுவோருக்கு அவர்களின் ஓட்ட நீளங்கள் சமனாய் இருப்பதற்காக வளைவான ஒரு பாதையின் ஆரம்ப ஸ்தானத்தில் 'டிஃபீற்' கொடுக்கப்படுகிறது.

மனிதர்களின் வாழ்க்கை ஓட்ட நீளங்கள் யாவும் சமமானவையா? மனிதர்களின் வாழ்க்கை ஓட்டச் சுவடுகள் யாவும் சமதடைகள் கொண்டவையா? சிலரது ஓட்டப்பாதைகள் சீராகவும், சிலரது ஓட்டப் பாதைகள் கல்லு முள்ளு நிறைந்ததாயும் இருக்கும் போது யார் வாழ்வில் வெற்றி பெறுகிறார் என்று கணிப்பது அடிப்படையிலேயே தவறு அல்லவா?

யாழ்ப்பாணத்தில் மிக அரிதாகவே நடைபெறும் புகைப்படக்கண்காட்சி ஒன்று அப்போது நடைபெற்றது.

ஒரு ஞாயிறு மாலை!

நாடகக் களப் பயிற்சி முடிந்த பின்னர் ஒரு குழுவினர் அந்தப் புகைப்படக் கண்காட்சிக்குச் சென்றிருந்தனர்.

உடலில் உடைகள் எதுவுமின்றி குந்திக்கொண்டிருக்கும் ஒரு யாழ்ப்பாணக் குழந்தையின் கண்களில்





தெரிந்த அந்தப் புதிய உணர்வு...அது என்ன வேதனையா, விரக்தியா, ஆத்திரமா, அழுகையா, என்னவென்று புரிந்துகொள்ள முடியாத ஒரு கலவை உணர்வு. பெரும்பாலும் எழுபதுகளின் இறுதியில் தோன்றியிருந்த அந்தப் புத்துணர்வு. அந்தப் புகைப்படமும் அதன்கீழ் எழுதியிருந்த ஒரு புதுக்கவிதையும் இவர்களை வெகுவாகக் கவர்ந்தன. ஜீவன் கேட்டான்.

''வீணு! ஓவியத்துக்கும் புகைப்படத்துக்கும் என்ன வித்தியாசம் சொல்லுங்கோ பாப்பம்''

இவள் சொன்னாள்.

''புகைப்படம் வெளித்தோற்றத்தை மட்டும் காட்டும். ஓவியம் மனதிலை உள்ள உணர்வுகளையும் காட்டும்''

''இன்னும் விளக்கமாச் சொல்லுங்கோ''

ஒருவர் தனக்குள்ளே தானே முரண்படுகிற மனிதர் எண்டால், அந்த இயல்பு அவற்றை புகைப்படத்திலை தெரியாது. ஆனால் ஒரு சிறந்த ஓவியன் அவரைப் படத்திலை தீட்டுறபோது சிவப்பும் கறுப்பும் சேத்து ஒண்டை ஒண்டு வெட்டிற கோடுகளாலை அவற்றை உடுப்பை வரைஞ்சு அந்த இயல்பைப் படத்திலை கொணந்திடுவான்.''

இப்படி அவள் சொன்ன கணத்தில் ஜீவனே தனக்குள் தான் முரண்படுகிறவனாக இருப்பான் என்று நினைக்கவில்லை.

''உங்களுக்கு ஓவியத்திலை நல்ல விளக்கம் இருக்குதுறவும் வருமோ?''

என்று அவன் ஆச்சரியப்பட்டுப் போய்க் கேட்

டான், அரை மதிலைத் தாவி ஆடி வந்த மென்காற்றை ரசித்தபடியே.

''வராது'' என்றாள் வீணா.

''ஒரு நல்ல நடன இசை நாடகத்திலை இருப்பது போலை, ஒரு நல்ல ஓவியத்திலையும் ஒருலயம் இருக்கும் ''

''ஆனபடியால் நாடகம் தெரிஞ்சவை ஒரு புகைப் படத்தை அல்லது ஓவியத்தை நல்லா ரசிக்க முடியும் ''

''ஒரு நல்ல ஓவியன் தான் நாடகத்திலை நல்ல ஒப் பனையாளனா அல்லது காட்சியமைப்பாளனா வருவான் ''

'மனித வாழ்க்கையிலை இயல்பாகவே ஒரு லயம் இருக்கு. நாங்கள் நடக்கேக்கை பாருங்கோ...இயல் பாகவே இரண்டு காலுக்கும் இடையிலை சம இடை வெளிதான் வரும். ஓட்டக்காரன் ஓடேக்கை பாருங்கோ. அவன்ரை கால் நிலத்திலை படுற நேர இடைவெளி ஒரே சீராத்தான் இருக்கும் ''

வெளியில் எங்கும் சொல்லத் தோன்றாத ஒரு அபூர்வ பிடிப்பு அவனது உரையாடல்களில் அவளுக்கு ஏற்பட்டமைக்கு இப்படியான உரையாடல்களே காரணம்! மோகன ராகத்தைச் செவிமடுப்பதிலுள்ள ஒரு லயம் போல.

அந்த உரையாடலை நினைத்தபடியே வீணா இரு நூறு மீற்றர் ஓடிக்கொண்டிருக்கும் மாணவிகளின் கால் இடைவெளியைப் பார்த்தாள். சமநேர இடை வெளிகளில்தான் அவை நிலத்தில் பதிந்துகொண்டிருந் தன. அப்படியானால் வாழ்வில் எப்போது இந்த லயம் தவறிப்போகிறது? சமுதாயம் எந்த மூலையில் லயம் தவறி அழுகிப் போய் இருக்கிறது?





## 4

அடுத்து ஞாயிறு விரிவுரைகள் தொடங்க முன் னரே வகுப்பிற்கு வந்துவிட்ட ஜீவன்,

''என்னமாதிரி ஓவியத்திலை லயம் இருக்கிறதெண்டு காட்டிறன் பாருங்கோ'' என்று சொல்லி ஒரு வெண் கட்டியை எடுத்துக் கரும்பலகையில் கீறத்தொடங்கினான்.

'தாம்' என்று சொல்லி ஒரு கோடு.

'தி' என்று சொல்லி இன்னொரு கோடு.

'தாம்' என்று அதை முறித்து வேறொரு கோடு

இப்படியே நாலு முறை 'தாம் தி தாம், தெய் த தெய்' என்று சொல்லிச் சொல்லிப் போட்ட கோடு கள் முடிய..

கரும்பலகைக் கோடுகள் ஒரு கண்டிய நடனக்கார ராகி இருந்தன. ஜீவன் ஒரு சிறந்த நாடகக் கலைஞனாக மட்டுமன்றி நல்லதொரு ஓவியனாகவும் இருந்தது அவளை அதிகம் கவர்ந்தது என்று சொல்லவேண்டிய தில்லை. அந்த உயர்ந்த கலைஞனைப் பற்றி அவள் கண்ட கனவுகள் ஆயிரம்! இன்று எல்லாம் காய மடைந்த கனவுகளாகப் போய்விட்டனவா?

''அடுத்து நடைபெற இருக்கும் பதினேழு

வயதின்கீழ் பெண்களுக்கான நீளம் பாய்தல் நிகழ்வில் பங்குபற்ற இருக்கும் மாணவிகள் மைதானத்தின் தென் கிழக்கு மூலையில் உள்ள மணற்பிரதேசத்திற்குச் செல்லு மாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்கள் ''

விணுவின் வாழ்வு என்ற ஓட்டப்பாதையில் ஒரு பெரிய நீளம் பாய்தல்தான் அவள் ஜீவனைத் திரு மணம் செய்த நிகழ்வு. அதில் எதுவித சந்தேகமு மில்லை. நாடகக் கலைஞன், ஓவியன் என்பதெல்லாம் போகட்டும். ஒரு என்ஜினியர் மாப்பிள்ளை ஒருசதமும் சீதனமின்றி ஒரு தமிழ்ப் பெண்ணுக்குக் கிடைப்பது நீளம் பாய்தல் அன்றி வேறென்ன?

இன்னொரு நாள் நாடகப் பயிற்சி வகுப்பிலே கருத்தூன்றலுக்கான பயிற்சி கொடுக்கப்பட்டது.

இரு பெண்கள் அல்லது இரு ஆண்கள் ஒருவருக்கு முன் மற்றவர் தளர்நிலையில் அமர்ந்து ஒருவரின் கண்ணை மற்றவர் இமைக்காமல் பார்த்தபடி அமர்ந்தி ருக்கும் பயிற்சி! வீணுவுக்கு முன்னே பாமா...அருகில் ஜீவனுக்கு முன்னே மோகன்!

''வாழ்க்கையில் மனச்சாட்சிக்குத் தவறு செய்யாது நடப்பவன் எப்போதும் மற்றவனின் கண்ணைப் பார்த்தே கதைப்பான். பிழை செய்தவன் எப்பவும் நிலத்தைப் பார்த்துக் கதைப்பான். உங்கடை மனங் களின்ரை 'பியூரி'ட்டியை, 'ரெஸ்ற்' பண்ணவும் இது ஒரு பயிற்சி! எங்கடை ஊரிலேயும் சொல்லிறவை...' 'எங்கை ஒருக்கா என்ரை முகத்தைப் பார்த்துச் சொல்லு பார்ப்போம்' எண்டு. பாருங்கோ...எவ்வளவு நேரம் உங்களாலை மற்றவரின்ரை கண்ணை நேருக்கு நேர் பாக்க முடியுதெண்டு பாப்பம்...''





நல்ல தமிழில் சொல்லத் தொடங்கிப் பழக்க தோஷத்தால் பேச்சுத் தமிழில் முடித்தார் பயிற்சி யாளர்.

திடீரென ஜீவன் தன் கண்களை மோகனின் கண் களில் இருந்து விலக்கி வீணுவின் கண்களைப் பார்க்கத் தொடங்கினான். அவன் அப்படிப் பார்க்கிறான் என்ற உணர்வு ஏற்பட்டவுடன் அது தனக்கு விடுக்கப்பட்ட ஒரு சவால் போல வீணு உணர்ந்தாள். உடனே தானும் தனது கண்களைப் பாமாவின் கண்களிலிருந்து விலக்கி ஜீவனைப் பார்க்கத் தொடங்கினாள்.

பார்த்துக்கொண்டே இருந்தாள்! கண் இமைக்க வில்லை! கண்களைத்துக் கண்ணீர் பெருகி முதலில் கண் களை விலக்கிக்கொண்டது ஜீவன்தான்!

அன்று மாலைதான் அவன் அவளிடம் சொன்னான்.

''நீங்கள் என்னை வின் பண்ணிட்டீங்கள் வீணு...''

''என்னுடைய லட்சியங்கள்...?'' இவள் சிரித் தாள்.

''அவை எல்லாத்துக்கும் நான் பணிஞ்சு போயிடு றன்...''

தான் அன்று கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் ஒரு போராட்டமாகவே ஜீவன் அவளுடன் வாழ்ந் தான் என்று இப்போது தோன்றுகிறது. அதை நினைக் கிறபோதுதான் காலின் கீழ் பூமி விலகிவிட்டது போல வீணு உணர்ந்தாள்.

இவர்களது காதலைப்பற்றி அறிந்தபோது ஜீவனின் வீட்டில் அதை உக்கிரமாக எதிர்த்தவர் அவரது மூத்த அண்ணர் திலகர்தான்.

''சினிமாவிலே பிழை விட்டால் திருப்பி எடுக்கலாம். நாடகத்திலே பிழைவிட்டால் எடுக்கமுடியாது. ஆனபடியால் நாடகக் கலைஞன் வாழ்க்கையிலேயும் பிழைவிடமாட்டான். பிழைவிட விரும்பமாட்டான். ஒரு பெண்ணைக் காதலிச்சு அவளைக் கைவிட்டுப் பிறகு இன்னொருத்தியை அடையிற கோழைத்தனம் அவனிட்டை இருக்காது'' என்று திலகருக்கு நேரே கூறி அவன் நிமிர்ந்தபோது திலகரும் இறங்கி வந்து ஒற்றுமையாக அவர்களின் திருமணத்தை நடத்தியது உண்மைதான்.

ஆனால் அதற்குப் பிறகு...வாழ்வில் பெரும்பாலும் ஜீவன் பொறுப்பு எடுத்துக்கொள்ளாதவனாகவே வாழ்ந்து வந்தான். பபிக்கோ, பாப்பாவுக்கோ வருத்தம் வரும் நேரங்களில்கூட 'எந்த வைத்தியரிடம் கொண்டுசெல்லவேண்டும்' என்பது போன்ற முக்கிய தீர்மானங்களை வீணாவே எடுக்கவேண்டும். அவன் இன்னும் குடும்பத்தின் கடைசிப் பிள்ளையாகவே இருந்துவிட விரும்பினான்.

வீணாவின் வாழ்வு ஒரு போராட்டமாய் அமைந்ததற்கு அதுவும் ஒரு காரணமா?

ஒவ்வொருவருடைய வாழ்வுமே அவர்கள் அவர்களின் 'இமேஜ்ஜை'க் காப்பாற்றிக்கொள்ளும் ஒரு போராட்டந்தானா?

எப்போதோ கேட்ட இலங்கை வானொலி நாடகம் ஒன்று வீணாவுக்கு இப்போது நினைவுக்கு வருகிறது.

ஒரு விதவை! சமுதாயத்தில் மிக ஒழுக்கமாக வாழ்ந்து வரும் விதவை!





'செக்ஸ்' பற்றி அதிக சிந்தனை இல்லாமலே வாழ்ந்துவிடக்கூடியவள்தான். சிறிது காலத்தின்பின் அவள் மனதில் மெல்லிய மாற்றம் ஏற்படுகிறது. தான் மறுமணம் செய்துகொள்வதில் பிழை இல்லை என நினைக்கிறாள்.

இந்த நினைப்புச் சமுதாயத்திற்குத் தெரியவருகிறபோது சமுதாயம் அதை வரவேற்கவில்லை.

''நல்லது தானே அவளது மனம் இப்படி மாறியது!'' என்று கூறவில்லை. மாறாக,

''அவளா? அவளா இப்படி மனம் மாறினாள்?''

''அவளா திருமணம் செய்ய விரும்புகிறாள்?''

''அவள் தன் முந்திய கணவனை மறந்தே போய் விட்டாளா?'' என்று பல கேள்விகளை எழுப்புகிறது. சமுதாயத்தில் தனது 'இமேஜ்' உடைந்துவிடப்போகிறதே என்று பயந்த அந்த விதவை மீண்டும் தனது ஓட்டிற்குள் புகுந்துகொள்கிறாள்.

ஆக, ஒவ்வொரு வாழ்வும் இந்த இமேஜைக் கட்டிக் காக்கும் போராட்டந்தானா?

''அவை எல்லாவற்றிற்கும் நான் பணிந்துவிடுகிறேன்'' என்ற ஜீவனின் வார்த்தையைக் கேட்டதிலிருந்து அவளுக்கு ஒரு புதிய வாழ்வு அறிமுகமாயிற்று.

கொதிக்கும் வெய்யில்கூடக் குளிர்மழையாய் விழும் பொழிவு! உலகத்துப் பூக்கள் யாவும் வீணாவின் முகத்தில் நிறைந்துவிட்டது போன்ற ஒரு மலர்வு! ஒவ்வொரு நாளும் அவள் புதிதாக இருந்தாள்.

''நாங்கள் வடிவென்று சொல்வது யாரை? எங்களைப் போன்ற இன்னொருவரை! ஒருபோதும் இன்

ஞெரு நாட்டவரிடத்தில் நாம் அதிக வடிவைக் காண்பதில்லை. அதுபோலத்தான் நாடகமும். அது எமது வாழ்வைக் காட்டவேண்டும். அப்போதுதான் அதில் எமக்குத் திருப்தி வரும்...''

விரிவுரையாளர் சொல்லிக்கொண்டே போகிருர். ''நீங்கள் இதுவரை சந்திச்ச பெண்களிலை யாரை அதிகம் அழகு எண்டு சொல்லுவீங்கள்?'' வீணு ஜீவனிடம் கேட்டாள்.

''அதைச்சொன்ஞ நீங்கள் பொருமைப்படுவீங்கள்.''

''இல்லை. நிச்சயமா நான் பொருமைப்படமாட்டன். சொல்லுங்கோ!''

''தாவரங்கள் கூடப் பொருமை அடையுமாம். தெரியுமோ உங்களுக்கு? தாவரங்களோடை 'கல்வஞேமானி' என்ற உபகரணத்தை இணைச்சு வைச்சுவிட்டு ஒரு தாவரத்துக்குப் பக்கத்திலை நிண்டு, ''அழகாய் இருக்கிருய்'' எண்டு சொல்லிவிட்டு இன்ெஞண்டுக்குப் பக்கத்திலை போய் நிண்டு ''நீ வடிவில்லை'' எண்டு சொன்ஞல் இரண்டாவது தாவரத்தோடை இணைக்கப்பட்ட கல்வஞேமானியிலை ஒரு கூர்மையான 'சிக்னல்' விழும். தெரியுமே உங்களுக்கு?'

அவள் உண்மையில் வியந்துதான் போஞள். ஒரு விஞ்ஞான மாணவியாக இருக்கும் தனக்குத் தெரியாத, தான் கேள்விப்பட்டேயிராத பல விடயங்கள் எஞ்சினியரான அவனுக்குத் தெரிந்திருப்பது குறித்து அவள் வெட்கப்பட்டாள்.

அதஞல் அவனிடத்தில் இவளுக்கு ஒரு 'ஹீரோ வோர்ஷிப்' ஏற்பட்டது என்றும் சொல்லலாம்.





''இவரைப்போலை நாஞும் அறிவுபெற வேணும்...'' அவள் மனதிற்குள்ளே சபதமெடுத்துக்கொண்டது காற்றுக்குக் கேட்டிருக்கும்.

''என்ன முணுமுணுக்கிறியள்?''

''இல்லை. இதை எங்கை வாசிச்சீங்கள் எண்டு யோசிக்கிறன்...''

''எங்கையோ வாசிச்சன். சரியா ஞாபகமில்லை. பக்ஸ்ரர், சோவின், ஜப்பானிய ஹசிமோட்டா எண்டு பல விஞ்ஞானியள் இதைப்பற்றி ஆராஞ்சிருக்கினம்...''

ஒரு தாவரத்தை அழித்தால் அருகில் உள்ள மற்றத் தாவரம் அதிர்ச்சியைக் காட்டும் என்பது தெரிந்தவருக்கு...தன்னை வளர்க்கும் மனிதன் அதிக சந்தோஷம் காட்டிஞல் அது தாவரத்திற்குத் தெரியும் என்பது தெரிந்தவருக்கு... தனக்குத் தண்ணீர் தரப்படுவது தான் புதிய இடத்திற்கு மாற்றப்படுவது எல்லாம் தாவரத்திஞல் உணரப்படும் என்பது தெரிந்தவருக்கு... தனது மனைவியும் பிள்ளைகளும் எவற்றை எப்படி உணர்வார்கள் என்று தெரியாமல் போய்விட்டதா?

''நாடகத்திலை எப்பவும் நடிகன் டி. சியிலை நிக்கிறதுதான் நல்லது. அப்ப அவனை எல்லோருக்கும் தெரியும். அதைப்போல வாழ்க்கையிலையும் அவன் மறைச்சுச் செய்யிறதுக்கு எதுகும் இருக்காது...'' என்று சொல்லுகிற ஜீவன் இப்போது எதையோ அவளிடம் மறைக்க முற்படுகிருஞ? இல்லாவிட்டால் இவர்களைச் சலூதிக்கு அழைப்பது பற்றி ஏன் இப்படி மௌனம் சாதித்து மறைந்துகொள்ள வேண்டும்?

''இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நீளம் பாய்தல் நிகழ்வு முடிவடைந்ததும் இடைவேளை தொட

ரும். இடைவேளையின் முடிவில் வினோத உடைப்போட்டி நிகழும்...'' என்ற அறிவிப்பைத் தொடர்ந்து பார்வையாளர் பலர் எழுந்து சென்றனர்.

''என்ன பிள்ளை வினா! எப்படி சுகநயங்கள்?'' என்று கேட்டபடி ஆசிரியர் நல்லையா அருகில் வந்தார். அந்தக் கல்லூரியில் யாரை மறந்தாலும் நல்லையா மாஸ்டரை மறக்கமுடியாது.

ஆறும் வகுப்பில் அவளுக்கு வகுப்பாசிரியராக இருந்தவர். வசதிக்கட்டணங்களை அப்போது வகுப்பாசிரியரே சேர்த்துக் கிளாக்கிடம் கட்டுவது வழக்கம்.

இவளது காசு உட்பட வகுப்பில் பல மாணவர்களின் வசதிக்கட்டணங்களை வாங்கி விழுங்கி ஏப்பம் விட்டவர் இவர்!

பற்றுச்சீட்டை உடனே கேட்டுப் பெறவேண்டும் என்ற விபரம் புரியாத ஆறும் வகுப்புப் பருவம்!

அடுத்த தவணை அதிபர் கொப்பியுடன் வந்து இவர்களை எல்லாம் எழுப்பி,

''ஏன் போன தவணைக்காசு கட்டேல்லை!'' என்று கேட்டபோது இவள்,

''அது சேரிட்டைக் கொடுத்திட்டம்'' என்றாள்.

நல்லையர் மிகச் சாதாரணமாக அதிபரிடம் சொன்னார்.

''இந்தப் பிள்ளையள் இப்படித்தான் சேர். எல்லாம் பொய்யும் பித்தலாட்டமும். இனி என்ன செய்கிறது? இரண்டு அடியைப் போட்டிட்டு விடுவம்...'' என்று கூறி அவளுக்கு இரண்டு அடி வாங்கித் தந்த நிகழ்வு! அவ்வளவு சுலபமாக மறக்கப்படத்தக்க நிகழ்வு அல்ல!





அண்மையில் நல்லையா மாஸ்டரின் மூத்த மகன் கொழும்பில் தற்கொலை செய்துகொண்டதாய் இவள் கேள்விப்பட்டிருந்தாள். எவ்வளவு நேர்மையற்ற மனிதனாக அவர் இருந்தபோதிலும் அவருக்கு ஒரு துன்பம் நேர்ந்தபோது துன்பம் விசாரிப்பதே மனிதப்பண்பு என்று நினைத்துக்கொண்டு இவள் கேட்டாள்.

''சேர்...,உங்கடை மகன்ரை விஷயம் அறிஞ்சு கவலைப்பட்டன். என்ன பிரச்சினை? என்ன நடந்தது சேர்...?''

''அது...அதா...சரியாத் தெரியாது பிள்ளை...அவன் கொஞ்சம் தீவிரமான ஆள். ஆரும் சிங்கள ஆக்கள் தான் ஏதும் செய்திருப்பினம்.''

இவள் ஒருகணம் அதிர்ந்தாள்! தற்கொலை செய்த மகனைப் பற்றி...இவர் ஏன் இப்படி? ஓ...! இதிலும்கூட உண்மையை மறைத்துத் தன் மகனைத் திடீர்த் தியாகியாக்க முனைகிறாரா மாஸ்டர்?

உண்மை அன்பும் விசுவாசமும் இல்லாதவர்களிடத்தில் துக்கம் விசாரிப்பதுகூடத் தேவையற்றது என்று திடீரென்று தோன்றியது இவளுக்கு! சிலநிமிட நேரம் நடிக்கும் தொந்தரவை ஏன் அவர்களுக்குத் தர வேண்டும்?

நல்லையா மாஸ்டரை ஒரு விநாடி கண்ணுக்குள் பார்த்தாள். ஒரு விநாடிதான்! ஒரே ஒரு விநாடிதான்! அது, 'சீ...நீ ஒரு மனிதனா?' என்று அவரைக் கேட்டிருக்கலாம். பின்னர் தன் பார்வையை விலக்கி அப்பால் சென்றாள்.

இடைவேளைத் தேநீர் முடிவடைந்த பின்னர் மீதி

யாக உள்ள இடைவெளி நேரத்தை அலங்கரிப்பதற்காக ஒவ்வொரு இல்லத்திலும் இருந்து மும்மூன்று விநோத உடைப் போட்டியாளர்கள் வருகிறார்கள். அவர்களில் பலர் இயல்பான ஒப்பனையே செய்திருக்கிறார்கள்.

வேலாயுதத்துடன் தோன்றும் அழகான முருகன்.

ஆத்திசூடி பாடி வரும் ஔவைப்பாட்டி.

'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என முழக்கமிட்டு முறுக்கிய மீசையுடன் கம்பீரமாக வரும் பாரதி.

ஒரு பாதி ஆணும் மறுபாதி பெண்ணுமாக நேர்த்தியாக ஒப்பனை செய்யப்பட்ட அர்த்தநாரீஸ்வர வடிவம்.

இவர்கள் எல்லாரையும்விட அடுத்து குறியீட்டு ஒப்பனையுடன் வந்துகொண்டிருந்த இரு உருவங்கள் வீணாவின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தன.

அந்தக் குறியீட்டு ஒப்பனைகளை மதனராஜா மாஸ்டர்தான் செய்திருப்பார்.

நல்ல ஒப்பனையாளர் என்ற முறையில் ஜீவனையும் மதனராஜா மாஸ்டருக்குத் தெரியும்.

ஜீவனுடன் இவளை அவர் சந்தித்த பல வேளைகளில் இவளைப் பார்த்துச் சிரிக்க முயன்றும் இவள் சிரிக்காமலே விலகிவிட்டதுபோன்று இன்றும் கல்லூரியில் இவள் அவரைப் பார்க்காதது போலவே இருந்து விட்டாள். அவரது பார்வை வெளியிலும் இவள் முகத்திலுமாக ஊஞ்சலிட்டதை உள்ளுணர்வாக இவள் உணர்ந்தாள்.





சவூதி நாட்டு 'பீச்'சின் நெடுமணற்பரப்பில் அமர்ந்திருந்தான் ஜீவன்.

நீலக்கடலில் சங்கமித்து நிற்கும் தொடுவான் விளிம்பின் மங்கிய காட்சி அருமையாகத்தான் இருந்தது.

''காய்த்த குலையோடஞ்சு காற்றில் நடமாடும்...''

இந்த வரியும் யாரோ ஒரு இலங்கைக் கவிஞர் எழுதிய வரிபோல் இருக்கிறது. அதற்குமேல் ஒரு வரியும் மனதில் இல்லை.

சவூதிக்கு வந்து ஓவியமும் நாடகமும்தான் போய் விட்டன என்றால்...ஒருவரி கவிதை எழுதத் தமிழுமா வராமல் போகவேண்டும்?

## 17 - 1 - 87

தனக்குள்தானே எல்லாவற்றையும் மெதுமெதுவாக இழந்து வருவதுபோல் ஒரு உணர்வு.

# 5

''மோகன்...மனச்சாட்சி உள்ளவனுக்கு... தொடர்ந்து தவறு செய்யிறது தானடா தண்டனை...'' திடீரென ஜீவன் இவ்வாறு சொல்வதைப் புரிந்துகொள்ளாமல் அவனை

நிமிர்ந்து பார்த்தான் மோகன்.

சில மாதங்களாகவே ஜீவன் மகிழ்வற்றிருப்பது மோகனுக்குத் தெரியும். அவனுக்கும் அதேநிலைதான்.

சொந்த வீட்டை, சொந்த மண்ணை, சொந்த முகங்களை விட்டுப் பிரிந்திருக்கும் சோகம் உண்மையில் பெரியதுதான்!

வீட்டிலிருந்து கடிதம் வரும்போதும் ஆயிரம் றியால் சம்பளம் வாங்கும்போதும் ஏற்படும் மகிழ்வு இந்த அடிப்படைச் சோகத்தை அசைக்காது.

இந்த அடிப்படைச் சோகம் மட்டுந்தான் சோகம் என்பதுமில்லை. இன்னும் எத்தனையோ சோகங்கள்!

வீணுவின் விருப்பத்தை மீறிக் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்து 'குவெய்த் ஏயர்வேய்ஸ்'இல் ஏறி அமரும்போதுகூட இப்படியான சோகங்களை எல்லாம் அவன் எதிர்பார்க்கவில்லை!

ஆங்கிலமும் அராபிய மொழியும் பேசுகிற—நீல நிறத்தில் அவர்களது நாட்டுச் சின்னம் பொறிக்கப் பட்ட உடை அணிந்த விமானப் பணிப் பெண்களின் உப சாரம்கூட அவன் எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லை!

இருக்கையின் 'பெல்ற்'றுக்களைப் பூட்டிக்கொள்ள வும் தளர்த்திக்கொள்ளவும் தெரியாத, விமானத்தின் 'பாத்ரூமை' உள்ளிருந்து பூட்டவும் திறக்கவும் தெரியா மல் அறைக்கு வெளியே இன்னொரு பயணியைக் காவல் வைக்கிற, விமானம் மேல் எழுகையிலும் கீழ் இறங்கை யிலும் கூடச் சிகரெட் குடித்துக்கொண்டிருக்கிற...பல தரப்பட்ட இலங்கைப் பயணிகளைப் பார்த்துப்





பார்த்து...அவர்களிடத்தில் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவே...பணிப்பெண்களின் உபசாரம்கூடக் குறைந்துவிட்டதை உணர அவனுக்குச் சற்று நேர மெடுத்தது.

இவனது இருக்கைக்கு அருகிலிருந்த ஒரு தமிழ்ப்பெண், தான் சவூதிக்கு 'ஹவுஸ் மெயிட்'டாகப் போவதாகத் தன்னை அறிமுகம் செய்துகொண்டாள்.

''என்ரை பேர் பவானி...நீங்கள்...?''

''நான் ஜீவன்...என்ஜினியர். ஜாக் கொம்பனியிலை வேலை கிடைச்சுப்போறன்''

''அங்கே போய் 'விக்கர்' இல்லாமல் இருக்கிறது உங்களுக்குக் கஷ்டமாயிருக்கும்...''

''இல்லை நான் இங்கேயே குடிக்கிறதில்லை...''

ஒரு என்ஜினியர் குடிக்காமல் இருப்பதை நம்ப முடியாது என்பதுபோல் விநோதமாகப் பார்த்தாள் பவானி.

இயந்திரத்தனமான இந்தச் சவூதி வாழ்விலும் இது போன்ற சம்பவங்களை நினைத்துப் பலமுறை சிரிக்க முடியும்.

இங்கு வந்து வாழத் தொடங்கிய பிறகுதான் ஒரு உண்மை தெரிந்தது.

இங்கு குடிப்பது சட்டப்படி குற்றந்தான். ஆனால் இங்கு யாருமே குடிப்பதில்லை என்றும் சொல்லமுடியாது.

வெள்ளையர்கள் பலர் குடிப்பார்கள். அது கண்டும் காணாததுபோல் மறைக்கப்பட்டுவிடும். ஆனால் கறுப்பர் கள் யாரும் குடிப்பது காணப்பட்டால் குற்றமாகக் கொள்ளப்படும்.

''வெள்ளையனுக்கு ஒரு நீதி கறுப்பனுக்கு இன்னொரு நீதி'' என்ற தன்மையே ஒரு சோகந்தான்.

இது ஜீவனை எந்த வகையிலும் தனிப்படப் பாதிக்காதபோதிலும் இந்த அநீதியைப் பார்க்க அவனுள் இனம் பொங்கும்.

இலங்கையில் மட்டுந்தான் சிங்களவனுக்கு ஒரு நீதி தமிழனுக்கு ஒரு நீதி என்பதல்ல... எங்குமே இப் பிரச்சினை உண்டு. இது ஜீவனைப் பாதிக்காதசோகம்!

அவனைப் பாதித்த சோகங்கள் இந்நாட்டில்பல!

ஆம்! இப்போது ஜீவனின் இதயப்பூவணையில் ஆழ் துயிலில் இருந்த சோகக் குழந்தைகள் பல ஒவ்வொன்றாய்க் கண்மலர்ந்து தேம்பித்தேம்பி அழ ஆரம்பிக்கின்றன.

அவன் அந்த வெண்மணற்பரப்பில் நீட்டி நிமிர்ந்து படுக்கிறான். சவூதியின் விமான நிலையத்தில் அவன் இறங்கியபோது 'ஜாக்' என்று பெரிதாக எழுதப்பட்ட அட்டையுடன் காணப்பட்ட ஒருவன் இவனை உடனே கம்பனிக்கு அழைத்துச் சென்றான்.

அங்கே ஒருவெள்ளைக் கடதாசியை இவனிடம் நீட்டிக் கையெழுத்திடுமாறு கேட்டுக் கொண்டனர். இவன் முதலில் தயங்கினான். அவர்கள் வற்புறுத்தினர். நாட்டிலிருந்து இவ்வளவு தூரம்வந்து கம்பனியுடன் கொழுவிக் கொண்டுதிரும்பமுடியாதென நினைத்து அவன் கையெழுத்திட்டுக்கொடுத்தான்.

''எனக்கு ஃபமிலி அக்கொமடேசன் தாறதாக் கொழும்பிலே புரொமிஸ் பண்ணினவை...'' இவன் பண்புடன் ஆங்கிலத்தில்கேட்டான்.





''தருவம். கொஞ்சம் வெயிற்பண்ணுங்கோ...''

கம்பனிக்குச் சொந்தமான குவாட்டர்ஸ் இல் இவனுக்கு ஒரு அறை வழங்கப்பட்டது. அதுவும் கூடத்தனி அறை அல்ல. மோகனுடன் அதைப் பங்கிட வேண்டியிருந்தது.

ஆனால் வேறு யாருடனும் 'ஷெயர்' பண்ணுவதைவிட மோகனுடன் ஷெயர் பண்ணுவது பரவாயில்லை.

மூன்று அடிநீளம் மட்டுமே கொண்ட அறைகளில் தமிழ் இளைஞர் பலர் இருக்கும் நேரத்தில்... தனக்கு இது பரவாயில்லை என்று நினைத்தபோது சிரிப்பு வந்தது உண்மைதான்.

கொழும்பில்வைத்து இரண்டாயிரத்து ஐநூறு றியால் சம்பளம் தருவதாய் வாக்குப் பண்ணியவர்கள் ஆயிரம் றியாலுக்கு ஒப்பந்தம் எழுதவே தன்னிடம் வெள்ளைக் கடதாசியில் கையொப்பம் வாங்கினர் என்று தெரிந்தபோது... இவனுக்குவெடித்த உணர்வைவிபரிப்பது கடினம்! ஆனாலும் அவன் அந்தச்சோகத்தை மனதிற்குள்ளேயே தாங்கிக்கொள்ளவேண்டியிருந்தது.

பண்டா-செல்வா ஒப்பந்தம் போல்தான் இதுவும்...?

வீணாவுக்கும் எழுதமுடியாது!

அவள் ஆரம்பத்திலேயே 'நாட்டை விட்டுட்டுப் போகாதேங்கோ' என்று கூறியவள்! மணலில் நடந்து வந்து மீண்டும் மோகனுக்கு அருகில் அமர்ந்தான்.

''வியட்னாம் சீன நாடக அரங்குகளில் நடிகர்கள் வட்டமாக நடந்து வந்நால் அடுத்தகாட்சி ஆரம்பமாக இருப்பதாகக் கருதப்படும்...'' என்று தனக்குள் நினைத்துக்கொண்டான்.

அவன் மனதிற்குள் அடுத்த சோகக்காட்சி உருவாயிற்று. முதல்நாளே அவன் கேட்ட 'ஃபமிலி அக்கொமடேசன்' அவனுக்கு இன்னும் வழங்கப்படவில்லை, எப்போதும் ஏதோசாட்டுச் சொல்லி சொல்லித் தள்ளிப் போட்டுக்கொண்டுபோகிறது கம்பனி! இந்த அவனது நிலையை வீணு நம்பவில்லைப் போல் இருக்கிறது. அவளது கடிதங்களில் இப்போதெல்லாம் முந்தியளவு அன்பில்லை. இதனுல் அவனும் கடிதம் எழுதுவதைக் குறைத்துக் கொண்டான். இது ஜீவனை உள்ளுக்குள்ளே மிகவும் சோகப்படுத்தியது!

வீடுதான் இல்லை. சொந்தவாகனமாவது கொடுத்தார்களோ என்றுல் அதுவும் இல்லை.

கம்பனி வாகனம் காலையில் வந்து அவனை அழைத்துப்போய் வேலைத்தளத்தில் விடும். சூழல் வெப்பநிலை 48°C ஆகஇருந்தாலும் சரி 5°Cஆக இருந்தாலும்சரி இவன் மாலைவரை வேலைத்தளத்தில் நிற்கவேண்டும்.

இவனைப் போன்ற தராதரம் உடைய வெள்ளையன் சிமித்... 'அமெரிக்கன் பாஸ்போட்' வைத்திருப்பதால் மாதம் பத்தாயிரம் றியால் சம்பளம் எடுக்கிறுன். அவனுக்குச் சொந்தமாக வாகனமும் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

மூன்று வேலைத்தளங்கள். அவன் மூன்றில் எதிலும் காணப்படமாட்டான். அவனைப் பிடிக்கமுடியாது.

ஜீவன் ஒருநாள் வேலைத்தளத்தில் நின்ற போது திடீரென மணற்புயல் வீசத்தொடங்கியது. வனாந்தரங்களில் இருந்து காற்று அள்ளிக்கொட்டிய மணலில் இருந்து தப்ப எதுவித பாதுகாப்பும் இல்லை. அப்போதுதான் அவன் நினைத்தான்.





''கஞ்சியைக் குடிச்சாலும் சொந்த நாட்டிலை இருக்கிறது நல்லதுதான். பசி, பாப்பாவோடை கதைக்கிற சந்தோஷமாவது கிடைச்சிருக்கும்''

காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரை வேலை. இன்னும் ஓரிரு மணி நேரம் அதிகம் வேலை செய்தால் 'ஓவர்ரைம்' கிடைக்கும். அதையும் செய்து கொள்வான் ஜீவன். வந்ததே காசுக்காக! பிறகு அதைச் சேர்ப்பதில் ஏன் குறை வைக்கவேண்டும்?

குவாட்டர்ஸுக்குத் திரும்ப இரவு எட்டு மணியாகிவிடும். இவ்வளவு யந்திர வாழ்க்கையின்பின் அறையில் வந்து விரும்பியபடி ஒரு கறி வைத்தாவது சாப்பிடலாம் என்றுல் அதுவும் முடியாது.

அறை பழுதடைந்துவிடும் என்று ஹொற்றறில் சமைக்க விடமாட்டார்கள். கன்ரீனில்தான் சாப்பிடலாம்.

ஆனுல் மோகன் ஏதும் களவாகச் சமைத்துவிடுவான். அதில் இவனுக்கும் கிடைக்கும்.

உண்மையில் சவூதி ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலை என்றே சொல்லலாம்.

தனிமை... தனிமை... தனிமை !

மனிதனைக் கொல்ல இது ஒன்றே போதும்!

இந்தத் தனிமைத் துயரில் இருந்து விடுபடச் சற்றேனும் உதவுகிறவன் மோகன்தான்.

பவானி ஒருநாள் 'ஃபோன்' பண்ணினுள். விமானத்தில் சந்தித்த தன்னை நினைவிருக்கிறதா என்று கேட்டாள். குறிப்பிட்ட ஒரு இடத்தில் தன்னைச் சந்

திக்கும்படி சொன்னார். தனது உடன்பிறந்த சகோதரர் என்று சொல்லித்தான் தன் எஜமானிடம் அனுமதி பெற்றிருப்பதாயும் கூறினாள்.

''போகலாமா? விடலாமா? ஜீவனால் தீர்மானிக்க முடியாதிருந்தது. ஆனால் அன்று அவன் போகவில்லை,

மோகன் சொன்னான்.

''நீ நினைப்பதுபோலை இது தவறான அழைப்பாகத் தான் இருக்கவேணுமெண்டதில்லை. ஹவுஸ் மெயிட்ஸ்க்கு இஞ்சை எத்தனையோ பிரச்சினை. அதுகள் தெரியாமல் வந்து மாட்டிக்கொள்ளிறது. சிக்கல்களிலை இருந்து விடுபட உண்மையிலை உன்னட்டை ஏதும் உதவி கேக்கவும் பவானி உன்னைக் கூப்பிட்டிருக்கலாம்''.

இப்படி மோகன் சொன்ன பிறகு ஜீவனுக்குப் பவானியிடம் ஒரு பரிதாப உணர்வும் தோன்றியிருந் தது. ஆனால் அவன் அன்று போகவில்லை.

இன்று போகலாம் என்று மோகன் சொல்கிறான். 'தானும் வருகிறேன்' என்கிறான்.

இன்று வெள்ளிக்கிழமை ஓய்வு நாள்! 'ஓவர் ரைம்' செய்யவும் போகலாம். இருவரும் 'பீச்'சுக்கு வந்திருக் கிறார்கள்.

''பவானிக்கு என்ரை ரெலிபோன் நம்பர் எப்படித் தெரிஞ்சுது?'' திடீரென்று கேட்டான் ஜீவன்.

இது பெரிய விஷயமே! யாரும் உன்னைத் தெரிஞ்ச யாழ்ப்பாணத் தமிழ் ஆக்கள் சொல்லியிருப்பினம். இஞ்சை எத்தனை பேர் இருக்கினம்...''





''அவளுக்கு அப்படி என்னபிரச்சினை வந்திருக்கும்?''

''எனக்குத் தெரியுமே? சும்மா சொல்லிறன். இஞ்சை ஹவுஸ் மெயிட்ஸுக்கு வருத்தம் வந்தால் டொக்ரரிட்டைப் போறதே கஷ்டம்...''

மோகன், ஜீவன் வர ஓரிரு வருடங்களுக்கு முன் னரே வந்தவன். அவனுக்கென்று இப்போது ஒரு வாகனமும் கொடுத்திருக்கிறார்கள். பெரும்பாலும் அந்த வாகனத்தில் ஜீவனையும் அழைத்துச் செல்வான்.

சிறிது நேரம் பேசாமல் இருந்த ஜீவனைப் பார்த்து மோகன் மீண்டும் கேட்டான்.

''அப்ப வா, காரிலை அப்படியே போட்டுவருவம்...''

''இந்த நேரம் காரிலை உந்த ரோட்டுகளிலை போறதே பயம்...'' ஜீவன் மீண்டும் தயங்கினான்.

சவூதியில் விபத்துக்கள் அதிகம் நடப்பது உண்மை தான். சில வாகனங்கள் இருநூறு மைல் வேகத்தில் பறந்துகொண்டிருக்கும். அத்துடன் அரேபியர்கள் பொதுவாக வீதி ஒழுங்குகளையும் கவனிப்பது குறைவு என்றே சொல்லவேண்டும்.

வீதி ஒழுங்கைக் கவனிக்கும் பொலிசார் வீதியில் நின்றுகொண்டிருப்பார்கள். ஆனால் பெரும்பாலும் அதீத வேகம் பற்றி அதிக அக்கறை கொள்ளாமல் விட்டுவிடுவார்கள்.

உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று ஜீவன் சொன்னது உண்மையேயாயினும் அவன் வேறும் எதற்கோ பயப்படுவதாய்த் தோன்றியது.

''மோகன்...உனக்குத் தெரியுமே...நான் ஒரு நாடக

நடிகன். நாடகம் என்றது சில சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு விளையாடுற ஒரு விளையாட்டு. அந்தச் சட்டதிட்டங்களை என்ரை வாழ்க்கையிலேயும் போட்டுக் கொண்ட நடிகன் நான்...''

மோகன் பெரிதாகச் சிரித்தான்.

''உப்படிச் சொன்னவை கனபேர்...எனக்குத் தெரியும். பிறகு படிப்படியா மாறிவிடுவினம். என்ன செய்யிறது? மனிதனுக்கு இயல்பாக வாற உணர்ச்சியளை எப்படி வர விடாமல் பாக்கிறது?''

கதைத்துக்கொண்டே வாகனத்தை 'ஸ்ராட்' செய்தான் மோகன். பொதுவாக மோகனின் ஆளுமைக்குள் அடங்கிப்போவதே இங்கு வந்தபின் ஜீவனின் இயல்பாக இருக்கிறது. வீணு இல்லாததால் ஏற்பட்ட வெறுமையை நீக்க மோகன் சிறிது உதவினுன் என்றும் சொல்லலாம்.

காரினுள் ஏறிக்கொண்டே ஜீவன் கேட்டான்.

'மேற்கு நாடுகளிலை மனிசன் தனிச்சுப்போயிட்ட படியாலைதான் அங்கை நாடகம் ஒரு வலிமையான கலையாக இருக்கிறதாய்ச் சொல்லுவினம். அதைப் போலை நாங்களும் இஞ்சை தனிச்சுப் போயிட்டம். அடுத்த மாதம் இஞ்சை இருக்கிற தமிழ் ஆக்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு நாடகம் போடுவமே?''

''ஓ அதுக்கென்ன? அதிலை ஏதும் பெண் பாத்திரம் வந்தால் பவானிக்குக் குடுப்பம்...''

ஒரு வீட்டில் ஹவுஸ்மெயிட்டாக இருக்கும் பெண் இவர்களுடன் சேர்ந்து நாடகம் நடிப்பது சாத்திய





மில்லை என்பது இருவருக்கும் தெரிந்திருந்தும்கூட மோகனின் அந்தப் பதில் அவன் இன்னும் ஆழமாகப் பவானியைப் பற்றி அக்கறைப்படுதலைச் சுட்டியது.

நாடகப் பட்டறை வகுப்பிலே ஒவ்வொரு குழுவினரும் சேர்ந்து ஒரு விடயத்தைக் காட்சியாக்கும்போது ஜீவனும் வீணுவும் ஒரே குழுவில் வந்து அமைந்தால் பொதுவாக வீணுதான் அதை நெறிப்படுத்துவாள்.

வீணுவின் நினைவு ஜீவனுக்குள்ளே பூதாகாரமாய் எழுந்து ஆடியது.

களைத்துவிழுந்து மாலை ஐந்து மணியளவில் வேலையில் இருந்து திரும்பிய வீணாவை ஒரு விநாடி மென்மையாகப் பார்த்தாள் அம்மா. அன்புகள் எல்லாவற்றிலும் தாய் அன்பு பெரியதுதான்! அதனால்தான் அந்த மென்மையான பார்வை!

குழந்தை பபியைத் தன்னருகில் இருத்தி வைத்துக் கொண்டு தன் இளமைக்காலம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள் அம்மா.

## 11 - 2 - 87

''அப்ப கோவிந்தசாமிப்பிள்ளை என்றவர் பிரபலமான நடிகர். அவர் 'மேக்அப்' அறைக்குள்ளை நுழைஞ்சு கொஞ்ச நேரம் 'டிங்கினனே...' எண்டு ஆலாபனம் செய்வார். சபையிலை இருக்கிற சனம் ஒண்டும் விளங்காமல் 'ஆ' வெண்டு கேட்டுக்கொண்டிருக்கும். கொஞ்சம் 'மேக்அக்' முடிஞ்சாப்பிறகு...பிடுங்கினனே...என்டு பாடுவார். பேந்தும் ஒரு அரை மணித்தியாலம் பொறுத்து...மலையைப் பிடுங்கினனே என்ற பாட்டுக் கேக்கும். கடைசியிலை 'மேக்அப்'பும் முடிய அவர், அனுமான் மலையைப் பிடுங்கினனே எண்டு பாடிக்கொண்டு மேடைக்குவர அரைவாசிச்சனம் நித்திரையாப்போடும்...''

6





அம்மாவின் காலத்தில் நாடகம் நடைபெறும் முறையை இப்படி அம்மா சொல்ல பபியும் பாப்பாவும் சுவாரசியமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

''அம்மம்மா...இன்னொண்டு கதை...அம்மம்மா'' என்று அம்மாவின் நாடியைப் பிடித்துக்கொண்டு செல்லமாகக் கேட்டாள் பபி.

''ஒருக்கா ஒரு நாடகத்தைப்பற்றி நோட்டீஸ் அடிச்சுவிட்டினம். அதிலை கடைசியிலை 'கதிரை ஒரு ரூபா' எண்டு அடிச்சினம். நாடகம் பார்க்கப்போன ஒருவர் நாடகம் முடியக் கதிரை எல்லாத்தையும் வண்டில் கொண்டுபோய் ஏத்தத் தொடங்கியிட்டாராம்.

''என்னண்ணை ஏன் கதிரை ஏத்திறியள்?'' எண்டு நாடகக்காரர் போய்க் கேட்க, ''நான் கதிரை இவ்வளவும் வாங்கப்போறன். நல்ல மலிவான விலை ஒரு ரூபா...'' எண்டாராம். அதுக்குப்பிறகு அவை நோட்டீஸ் அடிக்கேக்கை கதிரையில் இருந்து பார்ப்பதற்கு ஒரு ரூபா எண்டு அடிப்பினமாம்''

அம்மா அடுத்த கதை சொல்லி முடித்துச் சிரிக்க பபியும் பாப்பாவும்கூடச் சேர்ந்து சிரிக்கிறார்கள்.

வீணா உடை மாற்றிக்கொண்டு தேநீர் வைக்கப் போனாள். அம்மாவும் குசினிக்குள் வந்தாள்! ஒரு விநாடி சிந்திய மென்மையான பார்வை இப்போது மாறியிருந்தது.

தன் வழமையான முறையீடுகளைச் சொல்லத் தொடங்கினாள். வயது போய்விட்ட இயல்புதான்!

''எனக்கு இண்டைக்குப் பழையபடி கைகால் எல்

லாம் நடுங்குது. என்னாலை சமைக்கவும் முடியேல்லை. எல்லாம் அப்பிடி அப்பிடியே கிடக்குது. அதுதான் நான் தேத்தண்ணியும் போடேல்லை...''

வீணா இதற்குப் பதில் சொல்ல முதலே அம்மா அடுத்த முறைப்பாட்டிற்குத் தாவினாள்.

''உன்ரை பிள்ளையள் ரண்டும் என்னைப் படுத்திற பாடு..,ஒண்டு கிணத்தடிக்கு ஓடுது எண்டு பின்னாலை போறதுக்கிடையிலை மற்றது கிளாசைப் போட்டு உடைச்சுப்போட்டு நிக்குது...''

வீணா போட்டு முடித்த தேநீரைக் கோப்பைகளில் ஊற்றி எடுத்துச்சென்று குழந்தைகளிடம் கொடுத்து விட்டு வந்து நிலத்தில் குந்திக்கொண்டு அடுத்த பிரச்சினையைச் சொன்னாள் அம்மா.

''அதுசரி..,ஹொஸ்பிடலிலை வந்து சடுபுடு எண்டு கட்டுத்தள்ளுற நேரம்...நான் என்னெண்டு இந்தக் குஞ்சு குருமானுகளைக் காப்பாத்திறது? நீ போடுவாய்... உனக்கென்ன? இதுகளுக்கு ஒண்டு நடந்தால் பழி என்னிலை...கடவுளே மத்தியானம் நான் பட்டபாடு.''

இதையும் சொல்லி முடித்து மீண்டும் எழுந்து சென்று தனது மருந்துக் குளிகைகளையும் தேநீரையும் எடுத்துக்கொண்டு வந்து அடுத்த முறைப்பாட்டைச் சொல்ல அம்மா ஆயத்தமானாள்.

அநேகமாக இது தினமும் நடைபெறும் நிகழ்வு என்பதால் வீணா உணர்ச்சிவசப்படவில்லை.

அம்மாவுக்கு மனதில் நிறைவில்லை. வீணாவுக்கு பத்து வயதாக இருக்கையில் நல்ல பதவியிலிருந்த





அப்பா திடீரென ஒரு நாள் இதயநோய் தாக்கி மரணமானதில் இருந்தே அம்மா உளவியல் சமநிலையை இழந்துவிட்டிருந்தாள் என்று சொல்லலாம்.

அப்பா இருக்கும்போது அம்மா வெறும் பொம்மை தான்! வீட்டுப் பிரச்சினைகள் தொடர்பான சிந்தனைகள் தீர்மானங்கள் யாவும் அப்பாவாலேயே எடுக்கப்படும். அப்பாவின் தீர்மானங்களை அப்படி அப்படியே நிறைவேற்றுகிற வெறும் 'கட்டுப்பெட்டி' அம்மாவாக இவள் இருந்தாள்.

பெண் விடுதலை பற்றி உரப்பாகச் சிந்திக்கிற வீணா போன்றவர்களுக்கு அம்மாவின் நிலைப்பாடு கசப்பாக இருக்கலாம். ஆனால் அம்மாவைப் பொறுத்தவரை அது மிகச் சுலபமாக இருந்தது என்றே சொல்லவேண்டும். 'மனத்தாக்கம் எதுவுமற்ற நிம்மதியான வாழ்வு,

பிள்ளைகளுக்கு வருத்தம் வரட்டும், பணப்பிரச்சினை உருவாகட்டும். அல்லது உலகமே அழியட்டும்.,.அம்மா அதுபற்றிக் கவலைப்பட்டதே கிடையாது. எல்லாம் அப்பா சரியாகச் செய்துமுடிப்பார் என்று அம்மா நம்பினாள். ஆகவே தளர்நிலையில் 'அமைதியும் மகிழ்வு'. மாக இருந்தாள்.

அப்பா இறந்தபின் அம்மாவினால் 'அட்ஜஸ்ட்' பண்ணமுடியவில்லை என்று சொல்லலாம்.

''இண்டைக்குக் காலமை என்ன சாப்பாடு சமைக்கிறது...'' என்பது போன்ற சின்ன அலுவல்கள் முதல் ''வீணாவுக்கு எப்படிச் சீதனம் சேர்க்கிறது?'' ''வீணாவுக்கு எங்கை மாப்பிள்ளை தேடுறது?'' ''வீணாவின் தம்பி கோபியை என்னத்துக்குப் படிப்பிக்கிறது?''

போன்ற பெரிய விடயங்கள் வரை எல்லாமே அம்மா வுக்குத் தீர்க்கமுடியாத சிக்கல்களாய் மனதை அரிக்கத் தொடங்கின.

ஆனால் அந்தச் சிக்கல்களில் பெரியவை பல அம்மா சற்றும் எதிர்பார்க்காமலே தாமாக விடுவிக்கப்பட்டன.

வீணா ஜீவனைக் காதலித்துச் சீதனம் எதுவும் இன்றியே திருமணம் செய்துகொண்டாள். 'கோபியை எப்படிப் படிப்பிக்கிறது?' என்று சிந்திப்பதற்கான சிரமத்தை வைக்காமலே அவன் ஏ.எல்.படித்துக்கொண்டிருக்கும்போதே பாதையை மாற்றிக்கொண்டான்.

ஜீவன் வெளிநாடு போனபின் வீணாவின் பிள்ளைகள் இருவரையும் பகல் நேரத்தில் பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பும், பாப்பாவை நேசரிக்குக் கூட்டிக் கொண்டு போய்த் திரும்ப அழைத்து வரும் பொறுப்பும் அம்மாவின் தலையில் விழுந்தன. அம்மாவினால் அதைச் சீராகச் செய்யவும் முடியவில்லை. செய்யாமல் விடவும் முடியவில்லை.

வீணா விரும்பியிருந்தால் ஒரு வேலைக்காரனையோ அல்லது வேலைக்காரியையோ அமர்த்தியிருக்கலாம். ஆனால் அம்மா புறுபுறுத்தாலும் கூட, சின்னப்பிள்ளைகளை நம்பி ஒப்படைப்பதற்கு முன்பின் தெரியாத ஒரு புது முகத்தை விட அம்மா திறம் என்றே வீணா நம்பினாள்.

ஆனால் அம்மாவின் கஷ்டங்களும் மனோநிலைகளும் வயதினால்வரும் தொல்லைகளும் வீணாவுக்குப் புரியும். அதனால் அம்மா எவ்வளவு சத்தம் போட்டாலும் வீணா எதுவும் கதைப்பதில்லை. தானே கொட்டி ஓயட்டும் என்று விட்டு விடுவாள்.





இன்றும் அப்படியே அம்மா கொட்டியவற்றை மௌனமாக உள்வாங்கிக் கொண்டு பபியையும் பாப்பாவையும் அழைத்துக்கொண்டு குளிர் நிழலை ஈகின்ற தென்னை மரங்களின் கீழே சாய்கதிரைகளைப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

காலையில் வந்திருந்த ஜீவனின் கடிதத்தை அம்மா கொண்டு வந்து கொடுத்தாள்.

''அப்பாவின்ரை லெட்டர் வந்திருக்குப் பாப்பா...''

''உடைச்சு வாசியுங்கோ அம்மா''...

கடிதத்தை உடைத்துப் படித்தாள்.

''நீங்கள் அதிகமாய் நினைப்பதுபோல் சவூதி முழுவதும் பாலைவனம் அல்ல. இங்கு அப்பிள், பீற்றுட்போன்ற மரங்கள் நன்கு வளரும். யூலை, ஆகஸ்ட் மாதங்களில் வீசும் அனல் காற்று மட்டுந்தான் ஒரு பாலைவனத்தில் வீசுவது போலச் சூடாக இருக்கும்.''

''இங்கும் ஈழவிடுதலைக்காகக் காசு சேர்க்கிறார்கள். காசு சேர்த்துக்கொடுக்கும் முக்கிய வேலையை என் அறை நண்பன் மோகனே செய்கிறான். நானும் இம்மாதம் ஒரு கணிசமான தொகை இதற்காகக் கொடுத்தேன்.

என்னுடைய 'பாஸ் போட்டை' கம்பனி வாங்கி வைத்திருக்கிறது. ஆகவே நான் நினைத்தவுடன் நாடு திரும்பமுடியாது'' போன்ற விடயங்கள் கடிதத்தில் இருந்தன. அந்தக் கடிதம் சில தகவல்களைத் தருகின்ற ஒரு புதினப் பத்திரிகைபோல் இருந்ததேயன்றி ஒரு கணவனிடமிருந்து மனைவிக்கு அல்லது ஒரு அன்புத் தந்தையிடமிருந்து பிள்ளைகளுக்கு எழுதப்பட்ட உணர்வு பூர்வமான கடிதமாய் அமையாதது வீணாவுக்குப் பெரும் ஏமாற்றமாய் இருந்தது.

அவளை அவன் காதலித்த வேளைகளில்

''மேற்கு வான நங்கையின் பஞ்சுப் பாதங்களின் எழிலார்ந்த விரல்கள் மீது கதிரவனின் செம் பஞ்சுக் குழம்பு நீந்தி நிற்கும் வேளையில் நாம் சந்திப்போம் வீணா''

''நீலமணிப் புருவத்தின் கீழ் நெடு வேலும் வாளுமாய் அமைந்த உன் நீள்விழிகள் என்னைக் குத்திப் பரிதவிக்க வைத்துவிட்டனவே...'' என்றெல்லாம் கவிதை போல் எழுதிய ஜீவன்... இப்போது பத்திரிகை எழுதுகிறான்.

கடிதத்தை மடித்து உறையில் இட்டாள்.

அந்தி சாயும் வேளையில் நீலவானம் மப்பும் மந்தாரமுமாய்த் தொங்கித் துயின்றது.

''அம்மா... அணில்... அம்மா... அணில் அங்கை...''

பபி தென்னை மரத்தின் மேலிருந்த அணிலைக் கண்டுவிட்டாள்.

''அணில் என்ன செய்யுது பபி?''

''இளநி குடிக்குது...''

''ஆ... இளநி குடிக்குது... என்ன? வேறை என்ன இருக்குது தென்னை மரத்திலை?''

''வண்டுகள் கனக்க இருக்குது அம்மா...'' என்றாள் பாப்பா.

''வண்டுகள் என்ன செய்யுது?''

''பாட்டுப்பாடுது...''

பபி இப்படிச் சொன்னவுடன் வீணாவுக்குத் தான் அண்மையில் வாசித்த காரை சுந்தரம்பிள்ளை அவர்களின் கவிதை வரிகள் சில நினைவு வந்தன.





''சரி அப்ப... நாங்களும் பாடுவம்...''

''ஓம் அம்மா... பாடுவம்...''

''இளநீரை உண்கின்ற அணில் தாளம் போடும்.

''இனிதானவரிவண்டிராகங்கள் பாடும்...''

நல்ல மோகன ராகத்தில் இப்பாடலை அமைத்து வீணா சொல்லிக்கொடுக்க பபியும் பாப்பாவும் குதூகலித்துக் கைதட்டிப் பாடினார்கள்.

சிறிது நேரம் போனவுடன் பபிக்கு அலுத்துவிட்டது.

''அம்மா கதை சொல்லுங்கோ... கதை... அம்மம்மா சொன்ன மாதிரிக்கதை'' குழந்தைகள் பொதுவில் எவ்வளவு விரைவாக ஒரு நிகழ்வுடன் ஒன்றிவிடுகிறார்களோ அவ்வளவு விரைவாக அதிலிருந்து விடுபட்டும் விடுவார்கள்.

''சரி நானும் உங்கடை அம்மம்மா காலத்திலை நடந்த ஒரு நாடகக் கதை சொல்லுறன்...'' என்றாள் வீணா.

அவர்கள் இருவரும் சந்தோஷமாக ஆமோதித்தனர்.

''அப்ப நாடக நடிகர்கள் ஒவ்வொரு ஆக்கள் ஒவ்வொரு ஊரிலை இருந்து வருவினமாம். அரிச்சந்திரா நாடகம் எண்டால் அரிச்சந்திரனா நடிக்கிறவர் அச்சுவேலியிலை இருந்து வருவார். சந்திரமதிக்கு நடிக்கிறவர் மானிப்பாயிலை இருந்து வருவார். ஒத்திகை பாக்காமலே நடிப்பினம். அப்பவிரும்பினபடி வசனங்கள் சொல்லலாம்...''

''ம்...''

''அந்தக் காலத்திலை சாதித்தடிப்புகளும் கனக்க... சிலவேளை மேடையிலை வைச்சே சாதியைச் சொல்லிச்

சண்டை பிடிப்பினம். வேடிக்கையா இருக்கும்.''

''எப்பிடி''

என்று பாப்பா கேட்கும்வரை யோசித்துக் கொண்டிருந்த பபி.

''சாதி எண்டால்...?'' என்றுகேட்டாள்.

பபியின் கேள்விக்குப் பதில் சொல்லாமலே வீணா தொடர்ந்தாள்.

''ஒருக்கா ஒரு நடிகர் மற்றவருக்கு வசனம் பேசினாராம்... நானெல்லே ராத்திரி ஒரு தொன்னை தச்சன் எண்டு... பின்னை மற்றவர் விடுவரே,.. அவர் சொன்னாராம்... உன்ரை கைக்குள சித்திரம் எனக்குத் தெரியுந்தானே... ஓ... எண்டு...''

சொல்லிவிட்டு வீணா மெதுவாகச் சிரித்தாள்.

பின்னர் ''எப்பிடி இந்தக்கதை?'' என்று கேட்டாள், ஆனால் இக் கதையின் ரசனை குழந்தைகளுக்கு அவ்வளவு பிடிபட்டதாய்த் தெரியவில்லை.

''அம்மம்மா சொன்னதுதான் நல்ல கதை'' என்றார்கள் அவர்கள். பபிக்கும் கதைகேட்டு அலுத்துப் போய் விட்டது.

''அம்மா கடல் பார்க்கப்போவம். அம்மா கடல் பார்க்க...'' என்று கரைச்சல் கொடுத்தாள்.

கீரிமலைக் கடற்கரைக்குப் போகின்ற சூழ்நிலை இப்போது இல்லை என்பது பபிக்குப் புரியாமல் இருக்கலாம். நேற்று மாதகல் கடற்கரைப் பக்கம் ஹெலி தாழப் பறந்து சுட்டிருக்கிறது. ஆனாலும் குழந்தைகள் எந்நேரமும் வீட்டில் அடைபட்டுக் கிடப்பதை வெறுக்





கிறார்கள் என்றும் வெளியே போய்வர விரும்புகிறார்கள் என்றும் வீணா உணர்ந்தாள்,

''சரி வெளிக்கிடுங்கோ... கொஞ்சநேரம் எங்கையும் போய் உலாத்திக்கொண்டு வருவம்...'' என்று கூறி அவர்களுக்கு உடை மாற்றித்தானும் உடை மாற்றிக்கொண்டு புறப்பட்டாள்.

தான் கற்ற கல்லூரிக்கே குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு போனாள். கறுப்புத்தார் ரோட்டில் ஆறு பாதச்சுவடுகள் பதிந்து நடந்தன.

''இதுதான் அம்மா படிச்ச பள்ளிக்கூடம், பபி பாப்பாவும் இங்கைதான் படிக்கிறது... என்ன சரிதானே?'' என்று அறிமுகம் செய்து உள்ளே போனாள்.

சென்றவருடம் விளையாட்டுப் போட்டிக்கு வந்து இடையில் ஓடியபின் இன்றுதான் அவள் இக் கல்லூரியின் உள்ளே வருகிறாள்.

அந்த நினைவுகள்...!

எப்போதுமே இந்த மதனராஜாவிடம் இவளுக்கு எந்தவிதமான மரியாதையும் கிடையாது. கல்லூரியில் எப்போதும் அவரைச் சுற்றி ஒரு மாணவியர் கூட்டம் நிற்கும். அவர்களோடு,

''என்னடி... உன்னை நேற்றுச் சந்தியிலை கண்டன்... என்ன சுருட்டே வாங்கினனி கடையிலை,..?'' என்பது போல் செல்லம் கொட்டியபடி நிற்கும் அவர்!

இவரது பலவீனத்தை நன்கு பயன் படுத்திக் கொள்ள விரும்பும் சில மாணவியர், அவர் ஏதும்

சொன்னவுடன், வாயை நீட்டிக் கண்ணை உருட்டி, நெளித்துச் சிரித்து,

''சேருக்கு ஆகலும்...'' என்று சிணுங்குவதைப் பார்க்க இவளுக்கு எப்போதுமே கோபம் மிக உயர்வுப் புள்ளிக்கு ஏறும்.

படிக்கும் காலத்திலேயே அவரைச் சுற்றி நிற்கும் கூட்டத்தில் இவள் நிற்கமாட்டாள்.





# 7

ஓ.எல். வகுப்பில் இவளுக்கு மதனராஜா மாஸ்டர் தமிழ் கற்பித்தபோது ஒரு நாள் இவளது கட்டுரைக் கொப்பியைத் திருத்திவிட்டுத் திருப்பிக் கொடுக்கும்போது இவளது கையில் அவரது கைபட்டது தற்செயல் நிகழ்வாக இவளுக்குத் தோன்றவில்லை.

கண்களிலும் முகத்திலும் இவளுக்கு அதீத கோபம் தெரிந்ததை அவர் அன்றே கவனித்திருக்கலாம். அதன் பிறகு கல்லூரி வாழ்வுக்காலத்தில் எப்போதுமே வீணுவுக்கும் மதனராஜாவுக்கும் நல்லுறவு இருந்ததென்று கூறமுடியாது.

''அரசன் கூடக் கலைஞனுக்கு வெத்திலை மடிச்சுக் குடுக்கிறபண்பு பாண்டிய மன்னன் காலத்திலை தமிழ் நாட்டிலை இருந்தது. திரும்பவும் அந்த நிலையை நாங்கள் வரச் செய்ய வேணும்..'' என்று ஒரு நாள் ஜீவன் சொன்னபோது இவள் மதனராஜா மாஸ்டரையே நினைத்துக் கொண்டாள்.

''கலைஞன் மதனராஜா மாஸ்டரைப்போலை இருந்தா அரசன் வெத்திலை மடிச்சுக் குடுக்கிறதுக்குப் பதிலா பொலிடோல் போட்டு மடிச்சுக் குடுக்க வேணும்...'' என்று இவள் சொன்னபோது,

''உங்கடை மனம் கொடுமையான மனம்'' என்ருன் ஜீவன். அப்படியானுல் ஜீவனுக்கும் மதனராஜா மாஸ்டர் மீது ஒரு பரிதாப உணர்வு இருந்திருக்கின்றது. ஏன்?

ஒரு மாணவன் வெறும் காற்சட்டையுடன் உடல் முழுவதும் கறுப்புப் பூசி, அதன் மேல் வெள்ளைப் 'பெயின்ற்' இஞல் முள்ளுக்கம்பி போன்ற சதுரக் கோடுகளை வரைந்து கொண்டு வந்தான்.

இரு கைகளையும் பக்கத்தில் அசையாது வைத்துக் கொண்டு முகத்தையும் அசைக்காமல் அவன் மெதுவாக நடந்து வந்த முறை... இந்த ஒப்பனையுடன் சேர்த்துப்பார்க்கையில் எந்தவித சுதந்திரமுமற்று ஏதோ ஒரு சிறையில் அடைபட்டுப் போன மனிதன் என்பதைத் தெளிவாக வெளிக்காட்டிற்று.

அன்றைய ஒவ்வொரு தமிழனின் நிலையையும் அது மிக அற்புதமாகச் சித்தரித்ததால் அந்த மாணவன் பார்வையாளர் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தான்.

இவனுக்கு அருகில் இன்னொருவன் உடலில் எலும்புகள் வெளித் தெரியும் பகுதிகளை எல்லாம் வெள்ளைமையினுல் பூசி, ஏறத்தாள ஒரு எலும்புக்கூடு போலத் தோற்றமளிக்க வந்தான். அவனது உடல் வறுமையை- பொருளாதார வறுமையை - உள வறுமையை எல்லாம் அந்த எலும்புக்கூடு தெளிவாக உணர்த்துவது போலிருந்தது.

இயல்பான ஒப்பனைகள் எவ்வளவு சிறப்பாக அமைந்த போதிலும்கூட இந்த இரு குறியீட்டு ஒப்பனையாளர்களும் சுலபமாகப் பரிசைத்தட்டிக்கொண்டு போகப் போகிருர்கள் என மனதில் நினைத்த வீணு,





இவர்களைப் பற்றிய சுவாரசியமான வர்ணனைகளை அறிவிப்புச் செய்யலாம் என எண்ணி ஒலி வாங்கியை நோக்கித் திரும்பியபோது தான்,

ஒரு ஹெலிகொப்டர் திடீரென வடக்குப் புறமிருந்து பேரிரைச்சலுடன் வந்தது. அது மைதானத்தைக் கடந்து செல்லும் என அவள் எதிர் பார்த்திருக்கையில் தாழப் பதிந்து பறந்து வந்தது... திடீரெனப் படபடவெனச் சுடத் தொடங்கியது.

மைதானத்தில் நின்ற மாணவர் ஆசிரியர் பெற்ருேர் எந்தப்பக்கம் ஓடுவது என்று தெரியாமல் தலை தெறிக்கத் திசை கெட்டு ஓடினுர்கள்.

அவன் மைதானத்தில் ஏதோ பயிற்சி நடைபெறுவதாய் நினைத்துப் பயந்திருப்பான். பாம்பும் பயந்து தான் கடிக்கிறதாம்!

வீணுவும் வீட்டை நோக்கி ஓடினுள்.

தலைக்கு மேலே சன்னங்கள் பறந்தன.

அவள் தொடர்ந்து ஓடினுள்!

அன்று ஹெலியின் சூடு பட்டு மூன்று கல்லூரி மாணவிகள் மரணித்தது மறக்கமுடியாத நிகழ்வு!

அதன் பிறகு இன்றுதான் கல்லூரிக்குள் வருகிருள்!

கல்லூரியின் உள்ளே பல மாற்றங்கள் தெரிந்தன.

பாடசாலை நேரத்தில் படைகள் ஹெலிகொப்டர் மூலம் வந்து மைதானத்தில் இறங்கிப் பாடசாலையில் நிற்கும்பல நூற்றுக்கணக்கான பிள்ளைகளையும் ஆசிரியர்களையும் பணயம் வைத்துக்கொண்டு மினிமுகாங்களை

அமைக்க முயற்சிக்கலாம் என்ற அச்சம் காரணமாகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

முக்கியமாக வகுப்பறைகளுக்கு முன்னால் கிறந்த பதுங்கு குழிகள் வெட்டப்பட்டிருந்தன. சில பதுங்கு குழிகள் ஆழம் குறைவாய் இருந்தன. சில மிக ஆழமாக இருந்தன. ஆழம் குறைந்த பதுங்கு குழிகளின் முன்னால் இருந்த வகுப்புகள் பாலர் வகுப்புகளாய் இருக்க வேண்டும்.

''இந்தப்பக்கம் தான் நீங்கள் முதல் படிக்கிற வகுப்புகள்...'' என்று பபிக்கும் பாப்பாவுக்கும் காட்டினாள் வீணா. சில குழிகள் 'ரி' வடிவில் இருந்தன. சில 'எல்' வடிவில் இருந்தன. இன்னும் சில 'டபிள்யூ' வடிவில் அமைந்திருந்தன. ஒன்றிரண்டு மூடப்பட்ட குழிகளாயும் இருந்தன.

மைதானத்தின் நடுவில் விழுந்து வெடித்துச் சிதறும் ஷெல் துண்டுகளால் காயம் அடையும் மாணவர் எண்ணிக்கையை இத்தகைய குழிகள் மிகவும் குறைத்து விடும் என்று வீணாவிற்குப் புரிந்தது.

''நாங்களும் இப்பிடி வீட்டிலே கட்டாயம் வெட்ட வேணும் என்னம்மா''? என்றாள் பாப்பா.

பபிக்கு இவை இன்னும் தெளிவாகப் புரியாத வயது! வீட்டில் பதுங்கு குழி ஒன்று நிச்சயம் அமைக்கத்தான் வேண்டும். இப்போது ஒரு வாரங்களாய் இரவில் படும் 'ஷெல் அடி'ச்சித்திரவதையை இன்னும் தொடர்ந்து பல காலம் அநுபவிக்கமுடியாது.

ஆனால் பதுங்கு குழி வெட்டுவது யார்?





நேற்றும்கூட.... காரிருள உலகைக் கௌவிக் கொண்டவுடன் தொடங்கிய ஷெல் அடிகள் விடிய விடிய நடக்கும் பழைய கால நாட்டுக்கூத்துகள் போலவே இரவிரவாய்த் தொடர்ந்தன.

''அந்தக்காலத்திலே கீரிமலைச் சிவன்கோயில் மேற்கு வீதியிலை இரவிரவாக வசந்தன் கூத்து நடக்குமாம். முன்னுக்குச் சின்னச்சின்ன நடிகர்மாரெல்லாம் வந்து நடிக்கப் போகும்வரைக்கும் சனம் பாயைப் போட்டு நல்ல நித்திரை கொள்ளுமாம்''

''பெரிய நடிகர்கணேசையர் வாற காட்சி வந்தவுடனை அவருக்குச் சொல்லுவினமாம். அவர் அதுக்கும் பிறகு இராகஆலாபனை செய்து கொண்டு 'மேக் அப்' அறைக்குப் போவாராம். அவர் இராகம் பாடிக் கொண்டே இருக்க அவருக்கு 'மேக் அப்' நடக்குமாம், ஒரு அரை மணித்தியாலம் போக அவரின்ரை ஆலாபனையும் முடிய 'மேக் அப்' பும் முடியுமாம். அதுக்குப் பிறகு அவர் பெரியதொரு சத்தத்திலே ''வந்தேனே...'' என்டு பாடிக்கொண்டு மேடை அதிர வரச்சனமெல்லாம் முழிச்சிடுமாம். தேத்தண்ணி குடிக்கக் கடைக்குப் போனவையெல்லாம் திரும்பி வந்திடுவினமாம்...''

அம்மா வீணாவுக்கும் கூட இவள் சிறுகுழந்தையாய் இருக்கையில் இப்படிக் கதைகள் சொல்லியிருக்கிறாள்.

''இப்போது அதேமாதிரித் தூரத்தில் கேட்கும் மெல்லிய ஷெல் அடிகளுக்கெல்லாம் நித்திரை செய்துவிட்டு பக்கத்தில் ஒரு சத்தம் பெரிதாகக் கேட்டவுடன் துள்ளி எழுந்து குந்திக் கொள்ளும் பழக்கம் எங்களுக்கு வந்து விட்டது. இது முன்பு கூத்துப் பார்த்த

பழக்கந்தான். ஏனெனில் மனித செயற்பாடுகளுக்கும் பரம்பரை இயல்புகளுக்கும் நிறையத்தொடர்பு உண்டு'' இப்படியெல்லாம் விசித்திரமாக நினைத்துக் கொண்டாள் வீணு. வீணுசென்றவருடம் விளையாட்டுப் போட்டி நடைபெற்ற அந்தப்பெரிய மைதானத்தைப் பார்த்தாள்.

மைதானம் முழுவதும் மூங்கில் மரங்கள் நாட்டப் பட்டிருந்தன. இடையிடையே பெரிய பனங்குற்றிகளும் தென்னங்குற்றிகளும் செங்குத்தாக நிறுத்தி நாட்டப் பட்டிருந்தன். மேலே ஹெலியில் பறக்கும் போது ''யாழ்ப்பாணத்திலை இப்ப ஒரு பள்ளிக்கூடத்திலையும் மைதானம் இல்லாமல் செய்து போட்டாங்கள்...'' என்று அவர்கள் நினைப்பார்கள் என்று நினைக்க வீணுவுக்குச் சிரிப்பு வந்தது.

பொம்பர் விமான ஓட்டிகளும் 'ஹெலிசொப்டர். ஓட்டிகளும் தமக்குள் கதைப்பதை கீழே இருந்து 'ராப்' பண்ணி எஃப். எம் மீற்றரில் கேட்கலாமென்று சில மாணவர்கள் சொல்ல அவள் கேள்விப்பட்டாள். அப்படி ஒருநாள் கேட்டுப் பார்க்க வேண்டும். என்றும் நினைத்தாள்.

தம்பி கோபி இருந்தால் இவையெல்லாவற்றையும் உடனுக்குடன் செய்வான்.

இவ்வருடம் இந்த மைதானப் பிரச்சினையால் ஒரு பாடசாலையிலும் விளையாட்டுப் போட்டி நடைபெறாது என நினைத்தாள். உடற்பயிற்சிப் போட்டிகளும் இது வரை நடக்கவில்லை என்பது நினைவு வந்தது.

''போனவருடம் விளையாட்டுப் போட்டி நடக்கத் தானே இஞ்சை ஏதோ பயிற்சி நடக்கெண்டு நினைச்சுச் சுட்டவை. இந்த வருடம் ஒரு இடமும் விளையாட்டுப்





போட்டிநடக்கேல்லை எண்டால் எங்கட உடல் வலிமையை வளர்க்கிற கன விஷயங்களை நிப்பாட்டிப் போட்டம் எண்டதிலை அவைக்கும் ஒரு திருப்தி வரலாம்...''

''உண்மையாப் பெடியங்கள் பயிற்சி எடுக்கிற இடங்களிலை ஹெலி ஒருநாளும் சுட்டதாய்த் தெரியேல்லை. அவர்களுக்கென்ன வாண விளையாட்டு மாதிரி ஆரோ குடுத்த வெடியளை கண்டபடி சுட்டுத்தள்ள வேண்டியதுதானே...''

''மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் எண்டதுபோலை அவங்களுக்குக் கண்டதெல்லாம் பூதமாக்கிடக்கு இப்ப. றோட்டுகளிலை அம்புலன்ஸ் வண்டியளைக் கண்டா பெடியள்தான் காயப்பட்டுப் போறுங்கள் எண்டு நினைச்சு, கலைச்சுக்கலைச்சுச் சுட்டு பெற்றோல் பொம்பும்போட்டு எரிப்பினம்... ஏதோ யாழ்ப்பாணத்திலை வேறை ஒரு நோயாளிகளும் அம்புலன்சிலை போறதில்லை எண்ட மாதிரி...''

''ஆஸ்பத்திரி எதையும் கண்டா [அதுகும் எல்லா ஆஸ்பத்திரிக் கூரையிலும் இப்ப 'றெட்குறோஸ்' போடிருக்கிறதாலை பார்த்த உடனே ஆஸ்பத்திரி எண்டு வடிவாத்தெரியும்] அதுக்குள்ள காயப்பட்ட பொடியள் தான் படுத்திருக்கிறுங்கள் எண்டு நினைச்சு... நெருப்பு ஷெல்அடி நடக்கும். ஏதோ யாழ்ப்பாணத்திலை வேறை ஒருத்தருக்கும் வருத்தம் வாறதில்லை... வரக்கூடாது எண்ட மாதிரி...''

''கொழும்புக்குப் போறவாற வழியிலை உடம்பிலை காயம் வந்து மாறின அடையாளத்தோடை ஓராளைக் கண்டால் அவரின்ரை கதி அதோ கதி தான். இஞ்சை ஒருத்தருக்கும் முந்தி ஒருநாளும் ஒரு காயமும் வந்து

மாறியிருக்க முடியாது எண்ட மாதிரி...''

மேல்மாடியின் கீழ் தெற்குப் பக்கமாகக் கன்ரீனுக்கு அருகில் உள்ள வகுப்பறைக்கு அருகில் வந்தபோது வீணை தனக்குத் தானே சொல்லிக்கொண்டு வந்த சிந்தனை தொடர்ச் சங்கிலி அறுந்தது.

''இதுதான் நான்கடைசிவருடம் ஏ. எல். படிச்ச வகுப்பறை'' என்று பயிக்கும் பாப்பாவுக்கும் ஒரு வகுப்பறையைக் காட்டினுள்,

''அப்ப ஆர் உங்கடை கிளாஸ் ரீச்சர்?'' பாப்பா கேட்டாள்.

''அப்ப நாலுபேர் நாலுபாடம் படிப்பிச்சவை. அதில் ஃபிசிக்ஸ் படிப்பிச்சவர் நடராஜா மாஸ்ரர் எண்டு ஒருத்தர்... அவர்தான் கிளாஸ் ரீச்சர்...'' என்றுள் வீணை.

நடராஜா மாஸ்ரர் பற்றி மீதியாக மனதில் வந்த எண்ணங்களைப் பிள்ளைகளிடம் சொல்லவில்லை.

அப்போது எஸ்.எஸ். நவரத்தினம் தான் அதிபர் 'பிரின்சிப்பல்' என்ற சொல் குடாநாட்டில் சிறப்பாக அவரைத்தான் குறிக்கும். அந்த அளவுக்கு நிர்வாகத் திறமை மிக்கவர். பாடசாலை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தவர்.

''பிரின்சிப்பல்'' ஒருநாள் வகுப்பிற்குவந்தார். சோதனைக்கு இன்னும் சில வாரங்களே இருந்தன.

''எப்பிடி? எல்லாப் பாடமும் போர்ஷன் முடிஞ்சுதா? சோதினைக்கு எல்லாரும் ஆயத்தமோ?'' என்று கேட்டார்'





வீணைதான் அப்போது ''மொனிற்றர்.'' துடுக்கான பயந்த சுபாவமற்ற மாணவியுந்தான். அவள் துணிந்து எழுந்தாள்.

''எல்லாப் பாடமும் ஆயத்தம் சேர் ஃபிசிக்ஸ் தவிர...'' என்றுள்.

''ஏன் ஃபிசிக்ஸ் ஆயத்தமில்லை?'' அதிபர் ஆங்கிலத்தில் கேட்டார்.

''நடராஜா மாஸ்டர் போர்ஷன் முடிக்கேல்லை'..''

அதிபரின் முகம் திடீரென மாறியது.

''ஏன் முடிக்கேல்லை? இரண்டு வருஷமா என்ன செய்தனீங்கள்?''

அந்தக் காலத்தில் ''பிறைவேற்ரியூசன்'' எடுக்கும் வழக்கமும் இல்லை. எந்த ஒரு பாடத்திற்கும் மாணவர்கள் முற்றுகக் கல்லூரி ஆசிரியர்களை நம்பியே இருப்பர். அதிபரிடம் உண்மையைக் கூறினுல் அடுத்த வருட மாணவர்களுக்காவது விடிவு கிடைக்கும் என நம்பிய வீணை,

''அவர் அதிகமா வகுப்புக்கு வாறதில்லை. வந்தாலும் ஊர்ப்புதினம் கதைக்கிறதிலை நேரம் போயிடும்.'''' என்று சொல்லிவிட்டாள்.

அடுத்தநாள் நடராசா மாஸ்டர் உருத்திர மூர்த்தி அவதாரமெடுத்து - அவதாரமெடுத்தென்ன - உருத்திர மூர்த்தியாகவே மாறி வகுப்பிற்குள் வேகமாய் நுழைந்தார்.

''நான் வகுப்புக்கு வாறேல்லையெண்டு ஆர் பிரின்சிப்பலிட்டைச் சொன்னது?''

மாஸ்ரரின் உடல் முழுவதும் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. வீணு நன்முகவே பயந்து விட்டாள். பயத்தினுல் உடல் நடுங்கியது, வீணுவுக்கு மட்டுமல்ல! வகுப்பில் எல்லாருக்குந் தான். ஆனுல் ஒருவரும் வாய் திறக்கவில்லை. அவர் மீண்டும் உறுமினுர்.

''என்ன... ஆர் சொன்னது? எல்லாக் கழுதையளும் பேசாமல் இருந்தால் கண்டுபிடிக்க மாட்டன் எண்டு நினையாதையுங்கோ... எனக்கு ஆளைத்தெரியும். அந்தாள் உண்மை சொல்லுதோ எண்டு பார்க்கத் தான் கேக்கிறன்...''

அவரது கண்கள் கொவ்வைப்பழமாகச் சிவந்துவிட்டன! குடியினுல் வழமையாகவே சிவந்திருக்கும் கண்கள் இன்று குடியும், கோபமும் இணைந்துவிட்டால்...?

அதிபர் போய் இவரிடம் வீணுதான் சொன்னது என்று சொல்லிப் போட்டார் போலிருக்கிறதே விசர் அதிபர்!

அப்படித்தான் தற்செயலாக அவருக்கு இப்போது யார் என்று உண்மையில் தெரியாவிட்டாலும் வகுப்பு மாணவர்கள் ஒருவரும் ஒருபோதும் சொல்லிக் கொடுக்க மாட்டார்கள் என்பதற்குப் பூரண உத்தரவாதம் இல்லை.

ஆகவே வீணு பதுங்கிப் பதுங்கித் தயங்கித் தயங்கி மெதுவாக எழுந்தாள்.

''ஓகோ! நீதானு?... நான் நினைச்சனுன்... உனக்குத்தான் இவ்வளவு திமிர் இருக்கு எண்டு... அது சரியாப் போச்சு. ஏதோ பெரிய கெட்டிக்காறி எண்ட நினைப்பு அதாலை வந்தகொழுப்பு...''





அவர் ஏதோவெல்லாம் பேசினுர். அன்று அவர் அவளை அடித்திருந்தால் ஒருவேளை அது பற்றி இப்போது மறந்திருப்பாள். இது ஒருபோதும் மறக்க முடியாத வடுவாக மனதின் ஆழத்தில் பதிந்து விட்டது.

இதையெல்லாம் பபி,பாப்பாவிடம் கூறினுல்...?

ஒருநாள் கூறத்தான் வேண்டும். இப்படியும் ஆசிரியர்கள் இருந்தார்கள், இருக்கிறுர்கள், இருப்பார்கள் என்று அவர்கள் நிச்சயம் அறியத் தான் வேண்டும். ஆனுல்... இப்போது வேண்டாம். தக்க வயது வரட்டும்.

மீண்டும் ஒருமுறை விளையாட்டு மைதானத்தை மூவரும் சுற்றி வந்தனர்.

''இதுதான் பள்ளிக்கூடக் கோயில். இங்கை பூஜை பண்ணுகிற குருக்களுக்குத் தான் அண்டைக்கு ஷெல் விழுந்தது...''

வீணு ஒவ்வொன்றுகச் சொல்லிக்கொண்டு வந்தாள்.

திடீரென ஒருநினைவு!

# 8

அதிகாலையில் வசந்தகாலக்குயில் ஒன்று நீண்ட நேரமாகக் கூவுவதுகேட்டே கண்விழித்தாள் வீணா. அது ஏன் இவ்வளவு நேரமாய்க் கூவுகிறது? எதிர்ப் பாலைக்கவர்ந்திழுக்கவா? உடலில் எஞ்சிய சக்தியை வெளியிடவா? அல்லது தனது ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தை வழமைபோல உறுதிப்படுத்திக்கொள்ளவா? வெகுநேரம் இதைப்பற்றிச் சிந்தித்தபடியே பாயில் கிடந்தாள்.

இன்று வேலைக்குப் போவதில்லை என்ற முடிவினால் ஏற்பட்ட சோம்பல் என்றும் கூறலாம்.

அம்மாவைப்போல்... வெறும் அடிமை வாழ்வு வாழமுடிந்திருந்தால் எவ்வளவு இலகுவாக இருந்திருக்கும்! அந்த இலகுவான வாழ்வை ஏன் ஏற்றுக்கொள்ள உள்மனம் மறுக்கிறது?

இரவு நேரத்தில் காய்ந்துபோன துவாய் ஒன்று காற்றில் படபடவென ஆடும் சத்தம்கூட மனதில் வேதனை செய்கிறது.

விடிவே வேண்டும் என்று விடாப்பிடியாய் நிற்கும் சமுதாயம் இதைப்போன்ற பல கஷ்டங்களைத் தாங்கவேண்டியது





தான். ஆனால் இந்த வேதனை தாங்கமுடியாத எல்லைக்கு வந்துவிட்டால்...''

இதன் தாங்கக்கூடிய அதிஉயர்புள்ளி எங்கே?

அவள் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

முதல்நாள் இரவு கூட....

வீணாவின் மடியில் மெதுவாக உறங்கும்நிலைக்கு வந்திருந்த பபி ஷெல் சத்தம் ஒன்று கேட்டுத் துடித்துப் பதறி எழுந்து அழத்தொடங்கினாள்!

## 17 - 4 - 87

பதுங்குகுழி இன்னும் வெட்டவில்லை.

ஆகவே இருபிள்ளைகளையும் ஆதரவுடன் அழைத்துச் சென்று உணவூட்டிப் பின்னர் குசினியின் புகைக்கூட்டுக்குக் கீழே விறகு போடுவதற்காகக் கட்டப்பட்ட பிளாற்றின் கீழ் பாயைப்போட்டுப் படுக்கச்செய்தாள்.

''பபி இண்டைக்கு இரவு பாயிலை சிச்சிவிடாட்டா நாளைக்குக் காலமை ஐஞ்சு ஸ்ரிக்கர் வாங்கித்தருவேன்...'' என்று பபிக்கு உளவியல் ரீதியான உற்சாகம் கொடுத்து இருவரையும் அருகிலிருந்து பாட்டுப் பாடி நித்திரையாக்கினாள்.

கல்லூரிக்கு அவர்களைக் கூட்டிப்போன அன்று...

பாடசாலை மைதானத்தில் இரவு நேரத்தில் சில வேளை சி. ஐ. டி. உலாவுவது வழக்கமென்பதும், சில நாளுக்கு முன்னர்தான் அப்படி உலாவிய ஒருவனை மாணவர் பிடித்து உரியவர்களிடம் ஒப்படைத்தனர் என்பதும் திடீரென நினைவுவந்தது.

அகால நேரத்தில் அவசியமின்றிப் பாடசாலைச் சூழலில் அதிகநேரம் காணப்பட்டால், தன்னிலும்

யாரும் சந்தேகப்படக்கூடும் என்ற எண்ணம் திடீரெனத் தோன்றவே பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வீணா வீடுதிரும்பினாள்.

வீட்டிற்குவந்து உடைமாற்றிப் பிள்ளைகளுக்கு உணவும் கொடுத்துவிட்டு மீண்டும் தென்னஞ்சோலைக்கு அழைத்துச் சென்றாள்.

வாடைக்காற்று, தென்னைமரங்களை மோதி அடித்து மூச்சுத்திணறச் செய்து கொண்டிருந்தது.

''வாடைக்காற்றே! பொறு பொறு... உன் முற்றுகைக்குள் மூச்சுத்திணறும் மரங்களை ஒருநாள் தென்றல் வந்து தத்தெடுக்கும்...'' என்று பிள்ளைகளுக்கும் கேட்கும்படி கூறிக்கொண்டே மீண்டும் தென்னைகளின் கீழ் அமர்ந்தாள்.

மின்மினிப்பூச்சிகள் ஒரு சில தென்னஞ்சோலையைச் சுற்றித் திரிந்தன.

''அம்மா... என்னம்மா... மின்னுது... என்னம்மா?'' மடியில் அமர்ந்திருந்த பபி கேட்டான்.

அதா... அதுதான் மின்மினிப்பூச்சி...''

''அதுக்கு எங்காலை வெளிச்சம்...?''

''அது வாலிலை 'ரோச் லைற்' கட்டியிருக்குது'' பாப்பா இதைக் கூறிவிட்டுக் கைகொட்டிச் சிரித்தாள்.

வீணாவும் சேர்ந்து சிரித்தாள். பிறகு சொன்னாள்.

''இல்லை. அதின்ரை உடலிலை வெளிப்படுற சக்தியிலை ஒரு பகுதி வெளிச்சமா மாற்றப்படுகுது. அது இரவிலை இரைதேடுற பூச்சியெண்டபடியா... அதுக்கு இந்தவெளிச்சம் உதவியாயிருக்கு...''





''அப்ப எங்கடை உடம்பிலை ஏன் வெளிச்சம் வாறேல்லை?'' பாப்பாவின் கேள்வி நாலரை வயதுப் பிள்ளையின் கேள்வியாயினும் அவளுக்குக் கடினமாக இருந்தது.

''நாங்கள் இரவிலை இரை தேடுறவிலங்குகள் இல்லைத்தானே? அப்ப எங்களுக்கு வெளிச்சம்தேவையில்லை. எங்கட உடம்பிலை ஓரளவு சக்தி வெப்பமா வெளிவிடப்படுகுது...''

''...ம்...''

பாப்பா இந்தப் பதிலால் அதிகம் திருப்தியடைந்தவளாய்த் தோன்றவில்லை.

திடீரென்று பெரியதோர் ஷெல் அருகில் விழுந்து வெடித்தது போலக் கேட்டது. பாப்பா வந்து தாயை இறுக அணைத்துக்கொண்டாள். பபியின் கால்பட்ட இடம் குளிர்ந்தது போல் இருந்தது. பபியைத்தூக்கினாள் வீணா. அவன் சிறுநீர்கழித்திருந்தான்.

பபிக்குச் சிறுநீர்கழித்தலில் பூரணகட்டுப்பாடு வந்து பல மாதங்களின்பின் அன்றுதான் முதல்முறை அப்படி நடந்தது. அதன் பின் அதிகமாய் ஒவ்வொரு நாளும் இரவில் படுக்கை நனைக்கும் பிள்ளையாகவேஅவன் இருக்கிறான்! அவன் அப்படி இருப்பதற்கு அவனது உளநிலைப்பாதுகாப்பின்மையே காரணம் என்பது வீணாவுக்குப் புரியும்!

நாட்டிலே சிறியோர் முதல் பெரியோர்வரை எல்லாருக்குமே பாதுகாப்பின்மை உளச்சமநிலையைப் பெருமளவில் குழப்பிவிட்டிருக்கிறது. நாள் தோறும் காதில் விழும் இந்தப்பெரிய ஒலிகளே போதும். பபிக்கு அதை

விட மேலதிகமாக ஒன்று. குடும்பத்தில் தந்தை இல்லாததால் வந்த பாதுகாப்பின்மை. ஜீவன் இவற்றை எல்லாம் யோசித்திருக்கலாம்! ஜீவனுக்கு இவற்றைக் கட்டாயம் எழுதத்தான் வேண்டும்!

இரவு பத்து மணிக்கு மேல் ஷெல் சத்தங்கள் ஓரளவு ஓய்ந்துவிட்டன. அம்மாவும் குழந்தைகளும் ஆழ்ந்த நித்திரை. வீணாவால் உறங்க முடியவில்லை. இரவு கழிந்து இரவி எழும் நேரம் வரை எப்படிக் கழியப் போகிறது என்பதை நினைத்தபோது விசர் வரும் போல் இருந்தது.

பிள்ளைகளைக் காப்பாற்றும் பொறுப்பு, அந்த ''ரென்சன், தற்செயலாக ஒரு காயமேனும் ஏற்பட்டுவிட்டால்... தான் தனித்து என்ன செய்வது என்ற பதைப்பு.'' அதற்கு மேல் ஜீவனைப் பிரிந்து வாழும் தனிமை... எல்லாம் சேர்த்துத் தன்னையும் ஒரு ஒரு மன நோயாளி நிலைக்குத் தள்ளி விடுமோ என்று நினைத்த போது தாங்க முடியாத பெரும் பாரம் ஒன்று நெஞ்சை அழுத்துவது போல் இருந்தது.

சில மாதங்களுக்கு முன்பெல்லாம் சற்றுத் தூரத்தில் ஷெல் சத்தங்கள் கேட்கும் போது, அது விழுந்து வெடிக்கும் ஒலி மட்டுமே கேட்கும், இப்போது சில தினங்களாய்...,

அடுத்தடுத்து மூன்று ஷெல்கள் முகாமிலிருந்து புறப்படும் மெல்லிய சத்தமும், அவை மூன்றும் விழுந்து அடுத்தடுத்து வெடிக்கும் சத்தமும் பெரும் இடியோசை போல் மனிதரை நடுங்க வைக்கின்றன. 'ஆட்லரிஷெல்' என்று சொல்கிறார்கள்!





அவசரமாக இந்தக் கணத்தில் ஜீவன் தனக்குத் தேவைப் படுவது போல் ஒரு உணர்வு வீணாவுக்குள்!

இப்படி ஒரு உணர்வு ஜீவனுக்குள்ளும் ஏற்பட்டிருக்குமா? ஏற்பட்டிருந்தால் அவர் என்ன செய்வார்? தன்னைப் போலவே அந்த உணர்வை உணர்வாகவே மனதினுள் புதைத்துவிட்டுத் தன் கடமைகளைச் செய்வாரா? அல்லது...?

ஜீவன் போய் ஒன்றரை வருடமாகிறது! இரண்டு வருடத்துடன் முதலாவது ஒப்பந்தகாலம் முடியும். ஆனால்... அப்போது கூட அவன் வருவான் என்று இப்போது நம்பமுடியாதிருக்கிறது.

இரண்டு நாளுக்கு முன் வந்திருந்த ஜீவனின் கடிதத்தில்..., மேலும் தனது ஒப்பந்த காலத்தை நீடிக்க முடியுமென்றால், ஒரேயடியாக இன்னும் இரண்டு வருடம் உழைத்துக் கொண்டு வந்தால் . இரண்டு வீடு கட்டவும், பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுக்கவுமான பணம் சேர்ந்து விடுமென்றும், அதன் பின் தான் வந்து வாழ்வு முழுவதும் கவலையின்றி ஈசிச்செயரில் இருந்தே வாழ்வு நடத்தலாம் என்றும் எழுதப்பட்டிருந்தது.

அவனது அந்த முடிவை முற்றிலும் மாற்றி அமைக்கக் கூடியதாய், உயிரும் உளச்சமநிலையும் இழக்கப்பட்ட பின் ஒருவருக்குப் பணம் எந்த வகையிலும் உதவப் போவதில்லை என்ற உண்மையைத் தெளிவாகத் தனது கடிதத்தில் எழுத வேண்டும் என்று வீணா நினைத்தாள்.

அத்துடன் தனக்கு ஜீவனின் துணை இந்த இக்கட்டான நேரத்தில் அவசியமாகத் தேவைப்படுவதையும்

கூட மனம் திறந்து விரிவாக எழுத வேண்டும்.

இவற்றின் அடிப்படையில் அமையும் தனது கடிதம் ஜீவனை உடனே நாடு திரும்புமாறு வற்புறுத்துவதாய் இருக்க வேண்டும்.

மூன்று நாளுக்கு முன் ஒரு அந்திப் பொழுதில்... வீணாவும் பிள்ளைகளும் முற்றத்தில் இருந்த போது 'ஆட்லரி ஷெல்' வெடித்தது.

அம்மா வெளி விறாந்தையில் சேலைத்தலைப்பை விரித்து விட்டுப் படுத்திருந்தாள்.

''அம்மா நித்திரையே?'' ''ஓ... நித்திரை தான்... நல்ல நித்திரை! இந்தளவு ஷெல் அடிக்குள்ளை நித்திரை கொள்ள நான் என்ன ராட்சதப் பிறப்பெண்டெ நினைக்கிறியள்?'' என்று புறுபுறுத்துக் கொண்டே அம்மா எழுந்தாள்.

ஜீவன் வெளிநாடு போகாமல் வீணாவின் குடும்பமும் இனிமையாக வாழ்ந்து, அப்பாவும் இருந்து, தம்பி கோபியும் இருந்திருந்தால் அம்மா இப்படி மாறியிருக்க மாட்டாளோ?

பதுங்குகுழி ஒன்று பாதுகாப்புக்கு வெட்டவேண்டும் என்று பலநாள் நினைத்து அதை இன்றுவரை செய்ய முடியாமல் போனதன் இயலாமையை எண்ணி வீணா வெதும்பினாள். ஒரு ஆண் மகன் இல்லாத வீடு இப்படித்தான் இருக்கும் என்பதற்கு இந்த வீடு உதாரணமாக இருக்கிறதா?

ஊரில் அநேகமாக எல்லா வீடுகளிலும் பதுங்குகுழி வெட்டிவிட்டார்கள்.





''விளம்பரப் போஸ்டர்களில் அழகாகக் கவர்ச்சியாகத் தோற்றமளிப்பதற்கு மட்டும்தானா பெண் பயன்பட வேண்டும்?''

''ஒரு ஆணுக்கு வெறும் போகப் பொருளாக, வெறும் பிள்ளைபெறும் இயந்திரமாக மட்டும் தானா பெண் உபயோகமாக வேண்டும்?''

இவ்வாறெல்லாம் ''இறை உடைக்கும் குயில்கள்'' அமைப்பிலிருந்து செயற்பட்ட காலங்களில் அவள் விவாதித்ததுண்டு. இவற்றை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்த வேண்டும் என்று உரப்பாகச் சிந்தித்ததுண்டு.

ஆனால் இப்போது...?

இந்த வீட்டில் ஓர் ஆண் செய்ய வேண்டிய வேலைகள்,பெண் செய்ய வேண்டிய வேலைகள் எல்லாவற்றையுமே அவள் செய்யவேண்டி இருந்த போது, அது எவ்வளவு கடினமாக இருக்கிறது என்று நினைக்கையில் அவளுக்குச் சிரிப்பும் வந்தது.

நெஞ்சு தனக்குள்ளே புலம்பப் புகைக்கூட்டுக்கு வெளியே புழுதியில் படுத்துறங்கிய அந்த இரவில் மேலும் பல நினைவுகள் அவளுக்குள்ளே எழுந்தன.

உலகில் எழுந்த பல இலக்கியங்களில் ''இடிபஸ் த றெக்ஸ்'' என்ற கிறேக்க நாடகம் மிகச் சிறந்த அவலச்சுவை நாடகமாகக் கருதப்படுகிறது. அந்த நாடகத்தின் கதாநாயகனாக 'இடிபஸ்' தான் மனதார ஒரு தவறும் செய்யாத போதும் வாழ்வில் விடுவிக்க முடியாத சிக்கல்களுக்குள் அகப்பட்டு வருந்துவதாலேயே வாசகர் மனதில் அந்த அவலச்சுவை தோற்றுகிறது.

அப்படிப் பார்க்குமிடத்துத் தானும் ஒரு சிறந்த அவலச்சுவைப் பாத்திரம் என்று நினைத்தாள் வீணா.

எப்படியும் கூலியாட்களைப் பிடித்து ஒரு பதுங்கு குழி மறுநாள் அமைக்க வேண்டும். அதற்காக லீவு போட்டுவிட்டு நிற்போம்... என்றெல்லாம் நினைத்துக் கொண்டு, கண்ணீர்ப்பூக்கள் புழுதியை நனைத்த நிலையில் விடிகாலைப் பொழுதில் தான் சிறிது கண்ணயர்ந்திருந்தாள்.

இவற்றையெல்லாம் காலையில் மீண்டும் நினைவில் கொணர்ந்து படுக்கையில் புரண்டு கொண்டிருந்தபோது மீண்டும் ஷெல் அடி பயங்கரமாக ஆரம்பமாகியது.

முன் சந்திக் கந்தையர் கடையில் காய்கறி வாங்கச் சென்ற அம்மா விழுந்தடித்து ஓடிவந்தாள்.

''இப்ப அடிச்ச ஷெல் உதிலை ஆறுமுகத்தார் வீட்டுவளவிலை அல்லே விழுந்திருக்கு! நல்லகாலம்... ஆறுமுகத்தார் வீட்டுக்கும் கந்தசாமி வீட்டுக்கும் இடையிலை விழுந்ததாலை ஒருத்தருக்கும் காயம் ஏற்படேல்லை''

அம்மாவுக்குப் பெரிதாக மூச்சு வாங்கியது.

''அவையெல்லாம் துணிமணியளைக் கொஞ்சம் எடுத்துக்கொண்டு மேற்குப் பக்கம் ஓடினம்...''

வீணாவுக்கு என்னசெய்வது என்று புரியவில்லை. ஷெல் இவள் வீட்டில்தான் விழும் என்பதற்கான நிகழ்தகவு மிகவும் குறைவானதே என்று அறிவு சொல்லிற்று. ஆயினும்''

திருமணக் கோலத்துடன் - தாலிகட்டிய அரைமணி நேரத்திற்குள்ளேயே ஒரு மாப்பிள்ளை இறந்துவிட்ட





சம்பவமும் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த இருதய நோயாளிகள் ஷெல்பட்டு மரணித்த சம்பவமும் நிறைமாதக் கர்ப்பிணியான தாயின் வயிற்றுக்குள்ளே இருந்த குழந்தை ஷெல்பட்டுத்துடித்து தாயின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியேறிய சம்பவமும் நடந்திருக்கும் குடாநாட்டில்... உணர்வுபூர்வமாக 'எதுவும் நடக்காது' என்று நம்பியிருக்க முடியவில்லை. ஏதோ அகப்பட்டதை அள்ளிச், சில துணிமணிகளும் சிலநகைகளும் சிறிதளவு காசுமாக ஒரு பையில் போட்டுக் கொண்டு 'புறப்படுவோம்' எனநினைக்கையில்,

வாசலில் 'கேற்' திறக்கப்படும் ஒலி கேட்டது. எட்டிப் பார்த்தாள், அவளுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. தம்பி கோபி வந்து கொண்டிருந்தான்.

''அம்மா... அம்மோய்.. இஞ்சை வந்து பாருங்கோ... கோபி வாறான்...''

''இப்ப என்ரபேர் கோபி இல்லை. உங்கடை கோபி இந்த வீட்டாலை வெளிக்கிட்ட அண்டைக்கே போராளி 'கேசவன்' ஆக மாறிட்டான்.'' என்று, சொல்லிச் சிரித்துக் கொண்டே வந்த கோபியைப் படுத்திருந்த அம்மா எழுந்தோடிச் சென்று அணைத்துக் கொண்டாள்.

''என்ரை ராசா... ஏன் மோனை மூண்டு வரியமா எங்கடை நினைப்பில்லை?''

''நாங்கள் எவ்வளவு கயிட்டப் பட்டம் தெரியுமே? கொப்பர் இல்லை எண்டால், கொத்தானும் வெளிநாடு போட்டார். நீயும் எங்களுக்கு உதவாமல் போனாய் தம்பி...!'' தாயின் முறையீட்டை அமைதியாகக்கேட்ட

அவன் சொன்னான், ''கஷ்டத்தை கண்ணெதிரிலை வைச்சுக் கொண்டால் கண்ணையே மறைக்கும்... சற்றுத்தூர நிறுத்தினால் சின்னனாய்த் தெரியும்''

கடந்த மூன்று வருடங்கள் கோபியை நிறையவே மாற்றியிருக்கின்றன என்பதை அவன் உடல் மட்டுமல்ல இந்தப் பதிலும் தெளிவாக்கியது.

''இஞ்சை எல்லா வீடுகளிலும் பதுங்கு குழியள் வெட்டிட்டினம். எங்களுக்கு அது செய்யக்கூட ஒரு ஆம்பிளை இல்லை. நேற்றிரவு நடந்த பயங்கரச் ஷெல்லடியிலை நாங்கள் எல்லாம் செத்துப் போயிருப்பம் எண்டு பாக்கவே வந்தனி?''

வீணாவின் வெப்பியாரம் முழுவதும் அவனிடம் கொட்டப்பட்டது.





## 9

மரக்கிளைகள் முற்றத்தின்மேல் கைகோத்து ஆட்டம் போட்டதில் சருகுகள் கீழே உதிர்ந்தன.

வீணாவின் விழிகளைக் கோபியின் விழிகள் வேண்டுமென்றே தவிர்த்தன. தவிர்த்துக்கொண்டு அவன்கேட்டான். மெதுவான கேள்வி.

''அத்தானை ஏன் வெளிநாடு போகவிட்டனீங்கள்?''

''நீ எங்களைக் கேட்டுக்கொண்டே போனனி... அதைப்போலத்தான் அவரும். ஒவ்வொருத்தரும் தாங்கள் தாங்கள் நினைச்சது.''

இதற்குக் கோபி பதில் சொல்லவில்லை.

முற்றத்தில் கிடந்த ஒருசிறிய 'குரும்பட்டி' யைத் தூக்கிச் சுவரைநோக்கி எறிந்தான். அது சுவரிற்பட்டுத் தெறித்துப்பின் தனக்கேயுரிய ஜடத்தனத்துடன் திரும்பிவந்தது. அதைப்பார்த்து அவன் இதழ் விரியாமல் சிரித்தான். பிறகு சொன்னான்.

''சுவர் ஒரு ஜடப்பொருள். அதைநோக்கி நான் எறிஞ்ச குரும்பட்டியே என்னைநோக்கித் திரும்பிவருகுது. உயிருள்ள மனிசரை நோக்கித் தாங்கள் எவ்வளவு அதிகமாச் ஷெல் அடிக்கினமோ அவ்வளவுக்குத் தங்களைநோக்கி எதிர்ப்

பும் ஆவேசமும் அதிகரிக்கும் என்டதை அவங்கள் புரிஞ்சு கொள்ளாமல் இருக்கமுடியாது...''

பலநிலைகளிலும் அவனிடத்தில் தெளிவு ஏற்பட்டிருந்ததை வீணா அவதானித்தாள். முன்பெல்லாம் ஏ.எல். படிக்கும்போது... ஒருஅமைதியான - யாருடனும் அதிகம் கதைக்கத் தெரியாத... பயந்த சுபாவமுடைய 'பெடியன்'

சூழல் காரணிகள் ஒரு மனிதனை எவ்வளவு தூரம் மாற்றியமைத்துவிடுகின்றன. நீலக்கோடு போட்ட சாரமும் பிளேன் நீலநிறத்தில் சேட்டும் போட்டிருந்தான். வியட்னாமிய சீன அரங்குகளில் நீலம் ஆணவைக்குறிக்கப் பாவிக்கப்படும் நிறம் என்பது மிகப்பொருத்தமாகவோ அல்லது சற்றேனும் பொருத்தமின்றியோ வீணாவுக்கு நினைவுவந்தது.

''இப்ப எங்களுக்கு அரசியல் தேவையில்லை. அவங்களைப்பற்றியும் கவலையில்லை. நாங்கள் சாகப்போறம். உன்னாலை அதுக்கு என்ன செய்யமுடியும் எண்டு சொல்லு'' அம்மா அவசரப்படுத்தினாள்.

''சரி சரி. நான் இண்டைக்கு வேறைசில பெடியளையும் கூட்டிவந்து உங்களுக்கு ஒரு குழி வெட்டித்தாறன்''

''சரி. உள்ளைவந்து இரு. முட்டைக்கோப்பி போட்டுத்தாறன். உன்ரைபாடுகள் எப்பிடி?''

வீணா இப்போதுதான் அவனைப்பற்றிச் சிந்தித்தாள்.

மனிதர் யாவருக்கும் பொதுவான சுயநல இயல்பும் உயிர்காக்கும் தன்மையும் முன்னுக்குத் தலை நீட்டினாலும் சிலநிமிடங்களில் அம்மாவும் தாய்ப்பாசம் கொண்டாள்.





''இந்தளவு நாளும் சாப்பாடு துணிமணி நித்திரை அதுகள் என்னமாதிரி மோனை? நல்ல சாப்பாடு கருவினமோ?''

அவன் மீண்டும் சிரித்தான்.

''நல்ல சாப்பாடு. நல்ல உடற்பயிற்சி. என்ரை உடம்பு நல்லாய்த்தான் இருக்கு... அதோடை என்ரை மனதிலையும் ஒருமாற்றம் ஏற்பட்டிருக்கு... நான் முந்தி இஞ்சை இருக்கேக்கை பாக்கிறமாதிரி இப்ப அவ்வளவு துணுக்கம் பாக்கிறேலை. மனுசன் சாப்பிடுறத்துக்கு வாழிறதில்லை. வாழிறதுக்காகத்தானே சாப்பிடுறம்...''

அவன் சொல்வதை அரைகுறையாகக் காதில் வாங்கிக் கொண்டே அம்மா எழுந்து சமைக்கச் சென்றாள்.

ஷெல் அடியினால் ஏற்பட்ட பயம் வெளியேறும் எண்ணம் ஆகியவை எப்படி மறைந்தன என்று சொல்லமுடியாது.

சில வீடுகள் தள்ளி அமைந்திருந்த தோட்டக் காணிகளில் இருந்துவந்த குளிர்காற்று குபீரென்று அவர்களிற்பட்டது.

கோபி வீட்டை விட்டுப் போகும் போது பபியும் பாப்பாவும் மிகச்சிறிய குழந்தைகள்.

''இது ஆர் தெரியுமே? கோபி மாமா...'' என்று அவர்களை அழைத்து வந்து காட்டினாள் வீணா.

அவர்களால் அவனுடன் திடீரென ஒன்றிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் அவனை விட்டுவிலகி தமது விளையாட்டில் ஈடுபட,

''நீ இப்ப எந்தக் காம்பிலே இருக்கிறாய்? என்ன வேலையள் செய்யிறாய்?'' என்று கேட்டாள் வீணா.

''இப்ப இஞ்சை கிட்டடியிலை தான் இருக்கிறன். போனகிழமை இரண்டு 'காம்ப்' அடிச்சதுக்கு நான் தான் வீட் பண்ணிப் போனனான்...''

தான் இருக்கும் இடத்தைச் சரியாகக் குறிப்பிடாது அவனது கவனத்தைக் கவனித்த நிலையில் அவன் செய்த வேலையை நினைக்க வீணாவுக்கு மெய் சிலிர்த்தது.

பலரை உயிருடன் சிறை பிடித்த ஒரு சாதனை வரலாற்று நிகழ்வுக்கும் இருபத்தைந்துக்கும் மேற்பட்டோரை நேரடிப் போரில் கொன்று குவித்த இன்னொரு நிகழ்வுக்கும் தலைமை தாங்கிச் சென்றிருக்கும் கோபி... இல்லை கேசவன் அவனை நினைக்கையில் ஒரு மகிழ்வாகத்தான் இருந்தது.

ஜீவன் கூடப் பணந்தான் பெரிதென்று இப்படி வெளிநாட்டில் போய் மறைந்து இருப்பதை விட இப்படி ஒன்றைச் செய்துவிட்டு வந்து தன்னிடம் சொல்லியிருந்தால் தன்மனம் மிகவும் நிறைந்து போயிருக்குமே என்று அவள் எண்ணத் தவறவில்லை.

கோபிக்கு முன்னே ஒப்பிட்டுப் பார்க்கையில் ஜீவன் மிகக் கட்டையாகக் கொச்சைப் பட்டுப் போனவனாக... எவ்வளவு பணம் அனுப்பிய போதிலும்... ஏதோ ஒரு வகையில் தாழ்ந்து போய் விட்டவனாக ஒரு தோற்றம்!

அக்காவின் சாந்தமான உரையாடல் கோபியின் மனதுக்கு மிக இதமாக இருந்தது. தனது





செயற்பாடுகள் சமூகத்தினால் மட்டுமல்ல, தனது குடும்பத்தினாலும் மனதுக்குள்ளே பாராட்டப் படுகின்றன என்று தெரிந்த போது மிக இயல்பாக மனத்தடையற்ற முறையில் அவன் சம்பவங்களை விபரிக்கத் தொடங்கினான். வீணா மிக ஆர்வமாய்க் கேட்டாள்!

ஒரு சிறுகதையிலோ, நாவலிலோ அல்லது நாடகத்திலோகூடச் சில பகுதிகள் தெளிவாகப் புரியாமல் இருக்க வேண்டும். புரியாமலிருக்கும் அந்தப் பகுதி தான் படிக்கிறவரின் அறிவுக்கேற்ப அவரின் கற்பனையைத் தூண்டும் என்று இலக்கியவாதிகள் சொல்வார்கள்.

வீணா மிக ஆர்வமாகக் கேட்ட கேள்வி ஒன்றுக்கு,

''எங்கடை மனத்துணிவு தான் காரணம். வேறை ஒண்டுமில்லை'' என்றான் கோபி. அவளுக்குத் தெளிவாகப் புரியவில்லை. அதுபற்றி மீண்டும் கேட்பதற்கிடையில் அம்மா முட்டைக் கோப்பி கொணர்ந்து கொடுத்தாள்.

இப்போது சற்றுத் தொலைவில் இன்னொரு ஷெல் சத்தம் கேட்டது. அந்தச் ஷெல்லினால் அதிகம் பாதிக்கப்படாதவள் போல, ஏதோ ஒரு துணிவு திடீரென வந்து நிறைந்து விட்டவள் போல வீணா தொடர்ந்து கதை கேட்டாள்.

விளையாடிக் கொண்டிருந்த பபியும் பாப்பாவும் அப்போது இங்கு வந்து மாமாவைச் சுற்றி அமர்ந்து கொண்டே அவன் கழுத்தில் தொங்கும் கறுப்புக் கயிற்றை விடாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கதை சொல்லிக் கொண்டிருந்தவன் திடீரென்று

எழுந்து எங்கோ போகிறான். தம்பியின் பேச்சிலும் செயலிலும் நடத்தையிலும்கூடப் பல பகுதிகள் தனக்குத் தெளிவாகப்புரியாமல் இருப்பது வீணாவுக்குப் புரிந்தது. ஆனால் அப்படிப் புரியாமல் இருப்பதே ஒரு மகிழ்வையும் தந்தது.

''எங்கை போறாய் தம்பி?'' என்று வீணாவோ அம்மாவோ கேட்கவில்லை. கேட்க முடியவில்லை!

ஏதோ தேவை இருப்பதால் தான் போகிறான் என்பதை நிச்சயமாக உணர்த்தியது ஒரு உள்ளுணர்வு!

முன்பு போல அவன் நிச்சயமாய் வாசிகசாலைக்கு முன்னே போய் நின்று ஊர் வம்பு பேசமாட்டான்.

சந்தி மதிலில் போய்க் குந்திக்கொண்டு அந்த வழியாகப் போய்வரும் பெண்களைப் பார்த்து ஏதும் 'கொமென்ற்' அடிக்க மாட்டான்!

ஆகவே அவனை ''எங்கை போறாய்?'' என்று கேட்கவேண்டியது அவசியம் இல்லை.

வளர்ந்து விட்டதன் காரணமாய், படித்துவிட்டதன் காரணமாய் முரண்பாடுகளின் குவியலாய் மாறிப் போய் விட்ட ஜீவனுக்கும், இவனுக்கும் எவ்வளவு வித்தியாசம் என்று எண்ணிப் பார்த்தாள் வீணா.

இவன் பல்கலைக்கழகம் புகவில்லை என்று தான் கவலைப்பட்டதும், பல்கலைக்கழகம் புகக்கூடிய திறமையுடன் படிக்கவில்லை என்று அம்மா அவனைத் திட்டியதும் வீண் என்பது போல் மனதுக்குள் உணர்ந்தாள்.

''படி...படி...'' என்ற அம்மாவின் கரைச்சல் தாங்





காமலே அவன் வீட்டை விட்டு போறான் என்று அப்பொழுது நினைத்ததுண்டு. ஆனால் இப்போது பார்த்தால்...!

பல்கலைக்கழகம் போய் படித்துக் கொட்டிப் பட்டம் பெற்ற அவளும் ஜீவனும் என்ன கொட்டிக் கிழித்து விட்டார்கள்?

கோபி ஒருவேளை மரணித்தாலும்கூட அது இந்த மண்ணில் மதிப்புள்ள மரணமாகும். வரலாறு அவனைத் தன் ஏட்டில் பொறிக்கும், அவள் ஷெல் பட்டு இறந்தால்...? ஒரு புழுகூட அதைப்பற்றி நினைக்காது!

திருமணம் முடித்துப் பிள்ளைகளும் பிறந்து விட்டதால் ஏற்பட்ட சில கஷ்டங்கள் காரணமாய்தான் 'சிறை உடைக்கும் குயில்கள்' அமைப்பில் இருந்து விலகி விட்டது தவறோ என்று மயங்கினாள்.

சூரியன் நல்ல நெருப்புக் கோளமாய் மேற்கில் மறைந்து சில நிமிடங்களின் பின் மீண்டும் வந்தான் கோபி.

இப்போது தன்னுடன் ஐந்து வாலிபர்களையும் அழைத்து வந்திருந்தான். வந்தவர்களைத் தாய்க்கோ வீணாவுக்கோ அறிமுகம் செய்து வைக்கவில்லை. அது அவசியமில்லை என்பது போல...!

அவர்கள் அனைவரும் கோபியுடன் தங்கள்வீடு போலவே மிகச் சுதந்திரமாய் வளவுக்குள் நுழைந்தனர். தமக்குள் ஏதோ கதைத்துத் தீர்மானித்து, இரண்டு மாமரங்கள் அடர்த்தியாய் வளர்ந்து நின்ற வீட்டின் மேற்குப்புறப் பகுதிக்குச் சென்றனர்.

வீட்டின் சுவர் இடிந்து விழுந்தாலும் அந்த இடம்

வரை வராது என்பதை உறுதி செய்து கொண்டபின்னர் அதில் "ரி" வடிவில் ஒரு குழி அமைக்கக் கோடு போட்டனர். மண்வெட்டியை எடுத்துக்கொண்டுவந்து விரைவில் வேலையை ஆரம்பித்து விட்டனர்.

அம்மா கோப்பி கொண்டு போய்க் கொடுத்தபோது அம்மாவின் கைவிரல் படும் உணவுகளைப் பெரிதும் விரும்பியவன்போல... அம்மாவின் கைகளைச் சேர்த்துப் பிடித்துக் கோப்பியை வாங்கிக் குடித்தான் கோபி. அம்மா கண்கள் பனிக்கத் திரும்பி வந்தாள்.

சற்று நேரத்தில் அங்கு வந்த விஜு சொன்னாள். "நீ அங்கையும் எத்தினையோ கஷ்டமான வேலையள் செய்து களைச்சிருப்பாய். இஞ்சையும் வந்து ஏன் இப்பிடிக் கஷ்டப்படுறாய்...? அம்மா ஏதோ கவலையிலை சொல்லிட்டா... நான் ஆரையும் பிடிச்சுக் கூலிகுடுத்து வெட்டிப்பன். நீ எப்பன் ஆறுதல் எடன்..."

களைப்பு, களைப்பில்லை என்பவற்றை எல்லாம் யார் நிர்மானிப்பதென்பதுபோல் அவன் முறுவலித்தான். தொடர்ந்து வேலை செய்வதை நிறுத்தாமலே நண்பர்களுக்குச் சொன்னான்.

"கிட்டடியிலைநடந்தஇரண்டு பெரிய தாக்குதல்பற்றித்தான் அக்கா சொல்லுறா...'

இதனைக் கேட்டவுடன் நண்பர்களும் அதுபற்றி அறிய ஆவல் கொண்டனர்.

கோபி விபரித்த சம்பவங்கள் பலவற்றைக் கேட்க விஜுவுக்கு மயிர்கூச்செறிந்தது!

இத்தனைக்கும் நடுவில் நிமிர்ந்து நிற்கும் தைரியம் இவனுக்கு எப்படி வந்தது? உயிரைப் பாதுகாக்கும்





கடைசி முயற்சியில் இதயத்துடிப்பு வேகம்கூடி, சுவாச வேகம் கூடி, சுலபத்தில் நம்ப முடியாத ஒரு வலிமை யாருக்கும் வரலாம் என்பது விஞ்ஞானிகள் கண்ட உண்மை.

இன்று அத்தகைய ஒருநிலை எமது சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கிறதா?

எமக்கெல்லாம் எமது அரசே மரணதண்டனை வழங்கிவிட்டது. திகதி தான் நிர்ணயிக்கப்படவில்லை" என்ற நிலையில் பலருக்கு ஒரு அசாத்தியத் துணிவும் வலிமையும் வந்துதான் இருக்கின்றன!

திடீரென அம்மா குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"என்னம்மா?"

"இல்லை இவ்வளவு நாளும் உயிரைக் குடுத்த பெடியங்களிலை இவனும் 'ஒருத்தனா இருந்திருந்தால்... எண்டு நினைச்சிட்டன்..."

"எந்தக் கணத்திலையும் அப்படி ஒரு சம்பவம் எனக்கும் நடக்கலாம். நான் அதுக்குப் பயப்பிடேல்லை..."

கோபி சிரித்தான்! அவனால் சிரிக்க முடிகிறது!

வாலிபர் வாயில் சிகரெற்றும் வனிதையர் வாயில் விடுப்புமாகத் திரிந்த தமிழர் கூட்டம்... இன்று...!

எல்லார் வாயிலும் இந்த வீரக்கதைகள்!

இவர்கள் வாழ்வில் மந்த மாருதம் வீசவில்லை என்று எப்படிச் சொல்லலாம்? இந்த நிறைவு ஒன்றே இவர்களுக்குப் பெரும் மந்த மாருதமாய் இருக்கும்.

இவன் இந்த மயிர்க்கூச்செறியும் சம்பவங்களை விபரிக்

கையில் இனிய நற்பேரொளி எங்கும் பரந்தது போன்ற மகிழ்வு இவளுக்குள்ளேயே ஏற்படுகையில் அவனுக்குள் எவ்வளவு திருப்தியாய் இருக்கும்?

அந்தத் திருப்தியை உணர்ந்தவர்களால் மட்டுமே அதைரசிக்க முடியும்! மகாத்மாகாந்தியின் உள்ளத்தில் - பாரதியின் உள்ளத்தில் - ஏபிரகாம்லிங்கனின் உள்ளத்தில்... ஏற்பட்டிருக்கக்கூடிய நிறைவு போல...!

குழியின் ஆழம் ஐந்தடிக்கு மேற்பட்டுவிட்டது. வேகமான வேலைதான்!

மாமரங்களைத் தழுவி வந்த காற்றை நிறையவே சுவாசித்துக்கொண்டு அவர்கள் மண்வெட்டிகளை வைத்துவிட்டுக்குந்தியிருந்து ஓய்வெடுக்கையில் வீணு கேட்டாள்.

''தம்பியவை... எல்லாரும் வந்துசாப்பிட்டிட்டுப் பிறகுமிச்சத்தைப் பாருங்கோ'' தமிழ் மண் ஒட்டிக் கொண்ட கை, கால்களைக் கழுவிக் கொண்டு வந்து எல்லாரும் சாப்பிட அமர்ந்தார்கள்.

கண்ணீர்ப் பூக்கள் தம்பியின் சாப்பாட்டினை மெதுவாக நனைத்ததை வீணு கவனித்தாள்.

இந்த நிறைவான மகிழ்விலும் அவன் கண்ணீர் சிந்துகிறன்! செயற்பாட்டில் வீரம் தோன்றி விட்டாலும் மனம் முன்போலவே மென்மையாக இருக்கிறதா?

இழந்த தன் தோழர்களை நினைத்தானு?

அம்மாவின் கை பட்ட உணவை எத்தனை வருடம் கழித்து இன்று உண்பதை நினைத்தானு? அல்லது,

ஆண்துணை இன்றிப் பயந்து அக்காவும் அம்மாவும்





அகழியில் வாழ்க்கையில் தான் கூட இருக்க முடியாமல் போனதை நினைத்தானு?

எதை நினைத்தான் என்று வீணு கேட்கவில்லை.

''அத்தானைக் கெதியா வரச் சொல்லி எழுதப்போறன். இந்தநிலையிலை எங்களை தனிய இருக்கமுடியாது...''

தம்பியைப் பார்த்து மெதுவாகச் சொன்னுள்.

''அத்தானைப் போலை நல்லாப் படிச்சவை, அறிவு ஜீவிகள் இப்ப எங்களுக்கு அவசியமாத் தேவை. அவை வெளிநாட்டிலை இருந்தா ஒருவேளை தனிப்பட உங்களை குடும்பத்தின்ரை பொருளாதாரப் பிரச்சினை தீரலாம். ஆனல் சமுதாயப் பிரச்சினையள் பெருகும்... சமுதாயப் பிரச்சினையோடை இருந்தால்... அதுக்குள்ளை எந்தத் தனி மனுசனும் சந்தோஷமா வாழமுடியாது. ஆனபடியால் கட்டாயம் அத்தானை வரச்சொல்லிஎழுது...''

சிறிது தாமதித்தவன் தொடர்ந்து சொன்னுன்.

''எழுது, ஆனல் அத்தான் கட்டாயம் வருவர் எண்டு நம்பியிருக்காதை! வெளிநாட்டிலை வாழ்ந்து பழகினவைக்கு இஞ்சை வாறது கஷ்டம். ஆனபடியா நீ உன்ரை மனதிலை தைரியத்தை வளர்த்துக்கொள். அப்பதான் பிள்ளையளும் பயப்பிடாமல் இருக்கும்.''

அவன் தெளிவாய்க் கூறிக்கொண்டே கைகழுவ எழுந்து சென்றுன். பக்கத்து வீட்டுக் கிழவியின் 'டொக் டொக்' எனும் வெற்றிலை உரல் சத்தம் அந்த இரவின் மௌனத்தை அழகாக்கிக் கொண்டிருந்தது.

## 10

தூங்க முடியாத வியர்வையாக இருக்கிறதென்று வீட்டின் வெளி விறாந்தையில் படுத்திருந்தாள் வீணா.

மரங்களைப் பார்க்கக் காற்று வீசுவது போல்தான் இருந்தது. ஆனால் காற்று அவளது உடலில் படவில்லை.

'சோபை இழந்து போன என்முகத்தில் விழிக்காமல், எனக்குச்சொல்லாமல் என்னுடன் கதையாமல் போக விரும்புகிறது காற்றும்' என எண்ணினாள்.

கடந்த ஒரு வார காலமாக அவள் வேலைக்கும் செல்லவில்லை. மெடிக்கல் அல்லாத 'மெடிக்கல் லீவில்' நிற்கிறாள்.

சென்றவாரத்தில் ஒருநாள் இவள் வேலைக்குப் போகவென்று வெளிக்கிட்டு ஆயத்தமாக நிற்கையில் தான் வானில் ஹெலிச்சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தாள்.

ஹெலியைத் தொடர்ந்து உயரத்தில் முகில்களுக்குமேலே ஒரு பொம்பர்... பிறகு இன்னொன்று... அதனைத் தொடர்ந்து மற்றொன்று... இறுதியாக இன்னொரு ஹெலி...!





எல்லாம் தெற்கு நோக்கி ஊர்வலம் போல் சென்றன. தெற்குப்புற வானில் வட்டமாய்ச் சுற்றி வந்தன. அவள் பார்த்துக் கொண்டு நிற்கவே பொம்மர்களில் ஒன்று திடீரெனக் கீழிறங்கி வந்தது. காது பிளக்கும் சத்தம்!

''ஓ பொம்மர் குண்டு போடுறான்'' அதை உணரவே அவளுக்குச் சில விநாடிகள் எடுத்தது போலிருந்தது.

பபி பாப்பாவை அழைத்துக்கொண்டு பதுங்கு குழிக்குப் போனாள். அம்மாவும் பின்னால் ஓடி வந்து விட்டாள்!

தம்பி கோபி அமைத்துத் தந்த பதுங்கு குழியில் ஒரு மணி நேரத்திற்கு மேல் இருக்க நேர்ந்தது.

சிலநாள்களுக்கு முன் அவன் வந்து இதைச் செய்து தந்திருக்காவிட்டால்... சத்தங்களைக் கேட்டே உயிர்பிரிந்திருக்கும்!

குழியினுள்ளே இறங்குவது ஐந்து படிகள்! படிகள் உள்ள பக்கத்தில் இரண்டு அடி தூர இடைவெளி மட்டும் விட்டு மிகுதியைத் தென்னங் குற்றி அடுக்கி மூடியிருக்கிறார்கள்.

அன்று...!

பக்கத்து வெட்டைக் காணியில் நீண்ட காலம் காய்க்காது நின்ற ஐந்தாறு தென்னைகள் படபட வென்று வெட்டி வீழ்த்தப் பட்டதும், துண்டு போடப் பட்டதும் கயிறு உரல் உலக்கை இவற்றைப் பாவித்து மிக இலகுவான முறையில் தறித்த குற்றிகளைக்

குழிக்கு அருகே தூக்கி வந்ததும், விஞ்ஞானப் பட்டதாரி பட்டம் பெற்ற தனக்குப் புரியாத நெம்புகோல் தத்துவங்கள் எல்லாம் வேலையை எளிதாக்கல் என்ற தேவைக்காக அவர்களின் கைகளில் தவழ்ந்து விளையாடியதும்... எல்லாம் அவனுக்கு விறுவிறென்று நினைவு வந்தன.

குழிவெட்டி வெளியே போடப் பட்டிருந்த மண்ணை உரப்பைகளில் நிரப்பிக் கட்டித் தென்னங்குற்றிகளுக்கு மேல் மூன்று மூடை அகலத்திற்கு அடுக்கியிருக்கிறார்கள். வெட்டி விழுத்திய தென்னோலைகளில் கிடுகு பின்னி அக்கிடுகுகளால் மண்மூடைகளை ஒழுங்காக மறைத்துக் கூரை போட்டிருக்கிறார்கள்.

பெருமழை பெய்தாலும் அந்த மழைநீர் மண் மூடைக்குமேல் விழாது வழிந்து ஓடக்கூடிய முறையில் அந்தக் கிடுகுக்கூரை அமைக்கப் பட்டிருக்கிறது.

அன்றிரவு வேலைகள் முற்றாக முடிந்தபோது இரவு பன்னிரண்டு மணிக்குமேல் இருக்கலாம். நண்பர்கள் தேநீர் அருந்திவிட்டுத் நம்பியிடம் விடைபெற்றுப் போன பின்னர் தம்பிக்கு ஒரு கட்டில் அமைத்துக்கொடுத்தாள்வீணா,

கட்டில், மெத்தை, தலையணை இதெல்லாம் எனக்குத் தேவையில்லை. வெறும் மண்ணிலை படுத்தாலும் நல்லா நித்திரை வரும்'' என்று கூறிச் சிரித்தவன் ஏறிப்படுத்துக்கொண்டான்.

அவனுடைய கட்டிலுக்குக் கீழே நிலத்தில் வீணாவும்பிள்ளைகளும்... கட்டில் கால்மாட்டில் விரிக்கப்பட்ட இன்னொரு பாயில் அம்மா!





''அத்தான் இதுவரைக்கும் எவ்வளவு காசு அனுப்பிப் போட்டார்?'' திடீரென்று கேட்டான் கோபி,

''இரண்டு லட்சம் இருக்கும்...''

''அந்தக் காசை என்ன செய்யப்போறாய்?''

''இப்ப பாங்கிலை இருக்கு. எடுக்கிறது கஷ்டம். எடுக்கக் கூடியதா வர... எடுத்துத் தம்பசிட்டிக்காணிக்கை ஒரு வீடுகட்டலாமெண்டு யோசிக்கிறன்...''

''தம்பசிட்டி அவ்வளவுபாதுகாப்பான இடமில்லை. அவங்கள் பொம்மராலை 'அற்றாக்' பண்ணத்தொடங்கினம்... எந்த வீடு உடையும் எது தப்பும் எண்டு சொல்லேலாது...''

''அப்ப என்ன செய்யச்சொல்கிறாய்?''

''இப்ப வீடுகட்ட வேண்டாம். கொஞ்சக் காசு பாங்கிலை இருக்கட்டும், கொஞ்சத்தைப் பவுணாய் மாத்தி நிலத்துக்குக் கீழை புதைச்சு வை. ஒருவேளை ஒரு காலத்திலை கிண்டி எடுக்கலாம்... இன்னும் கொஞ்சத்தை யாருக்கும் கடனுக்குடு... சிலவேளை அதுதான் ஒரு அவசர நேரத்திலை உதவும். இன்னும் கொஞ்சத்தை...''—தயங்கினான்.

''சொல்லன்...''

''எங்கடை ஆக்கள் பவுண் கேட்டு வரேக்கை... தாராளமாய்க்குடு... நாங்கள் நல்ல முறையிலை அதைப் பாவிப்பம்... நீங்கள் குடுக்கிற ஒவ்வொரு சதமும் எங்கடை விடிவை விரைவுபடுத்தும்...''

வீணா பேசாமல் இருந்தாள். அவனது வாயில் திடீரென ஒரு கூர்மை வந்திருப்பதுபோல் உணர்ந்தாள்.

அவனது ஆலோசனையை அவள் முற்ருக ஏற்றுக் கொள்ளவில்லை என்று அவன் நினைத்திருக்கலாம். கதையை வேறுதிசைக்கு மாற்றினுன்.

'எரிபொருள் தட்டுப்பாடு உங்களை எவ்வளவுபா திக்குது?''

''எங்களுக்கு அதாலை அவ்வளவு பிரச்சினை இல்லை மண்ணெண்ணை அடுப்பு இப்ப நான் பாவிக்கிறேல்லை. ஆனு... விறகின்ரை விலையும் கூடிட்டுது... கமக்காரர் தான் இறைப்புக்குச் சரியாகக் கஷ்டப் படினம். மூலை வீட்டு மூத்தர் மாமா கத்தரிக்கு இறைக்க முடியாமல் நிக்கிருர்.''

''நாங்கள் சக்தி விரயத்தைக் கூடிய அளவு குறைக்க வேணும். உமிஅடுப்பு... மரத்தூள் அடுப்பு எண்டு திறன்கூடின அடுப்புகளைப் பாவிக்க வேணும்... ஆடு மாட்டுக் கழிவுகளிலை இருந்து பெருமளவிலை உயிர்வாயு செய்ய வேணும்... அதிலிருந்தே 'கறண்டும்' எடுக்கலாம்...''

நித்திரையின்றிச் சிவந்த கண்களும் சுட்டிய விரலுமாய் அவனது திட்டங்கள் பெரிதாக இருந்தன.

தான் எரிந்து நாட்டைக் குளிர்விக்க வேண்டும் என்று நினைப்பவன் என்ன சொல்கிருன் என்று பார்க்க விரும்பி வீணு வேண்டுமென்றே சொன்னுள்.

''அதெல்லாம் சரி உனக்கும் வயதாகுது அம்மாவும் தான்சாகமுதல் உனக்கும் நல்ல விஷயம் பாக்க வேணும் எண்டு விரும்புரு...''

அந்த நடுநிசியில் அவன் வாய்விட்டுப் பெரிதாகச்





சிரித்தான். ''எங்கடை தேச வானிலை நேசமேகங்கள் கருக் கொள்ள மறக்குது. என்ன செய்ய?'' என்ருன்.

பிறகு தொடர்ந்து சொன்னுன்.

''எங்களுக்கு விடுதலை வந்தாப் பிறகு நான் உயிரோடை இருந்தால் எல்லாம் பாப்பம்... இல்லாட்டி இந்தத் தமிழ் மண்ணை நான் விரும்பித் திருமணம் செய்து அவளோடை சங்கமித்து விட்டதாய் நினைச்சு நீங்கள் சந்தோஷப் படவேண்டியதுதான்.''

கண்களில் அந்த அருமையான 'ரீன்ஏஜ்' வெட்டலும், சிரிப்புமாய்க் கூறியவன் சிறிது நேரத்தில் நித்திரையாகிப்போனுன்.

மேலும் பல்வேறுபட்ட சிந்தனைகளின் பின் நித்திரையாகிப் போன வீணு விழிக்கும் போது நன்ருகவே விடிந்திருந்தது. பபியும், பாப்பாவும், அம்மாவும் கூட இன்னும் எழுந்திருக்கவில்லை.

தம்பியின் கட்டிலை அவசரமாய்ப் பார்த்தாள் வீணு.

அது வெறுமையாக இருந்தது.

ஆனுலும் அவன் அமைத்துக்கொடுத்து விட்டுப் போன பதுங்குகுழி...!

இப்போது ஐந்துநாளாய் அதற்குள்ளேயே பொழுதின் பெரும்பகுதி கழிந்துபோய்விடுகிறது.

வெளியில் இருந்தால்கூட... வானத்தையே பார்த்துக்கொண்டு எப்போது 'பொம்மர்' தோன்றிக் காட்சி கொடுக்கும் என எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டு...!

முதல்நாள் பொம்மர் போட்ட குண்டு மூன்ருவது வீட்டில் செல்லத்துரையின் மூன்று வயது மகளை மூளை சிதறி இறக்கவைத்த கொடுமை !

அந்தப் பயத்தில் நேற்று வானத்தில் பொம்மர் தோன்றியதைக் கண்டவுடனேயே இருதய நோயாளியான கருணாகரர் மயங்கிவிழுந்து இறந்த நினைவு மனதில் பூதமாய் உருக்கொள்கிறது.

கந்தையா, சுப்பிரமணியம், யோகநாதன் பலரின் வீடுகள் தரைமட்டம்!

அவர்கள் எல்லாம் இவளின் குடும்பம்போலவே எந்நேரமும் பதுங்குகுழியில் இருந்ததில் உயிர் தப்பினர். இந்த நிலையில் இவள் எப்படி வேலைக்குப் போக முடியும்? ஹாஷ்யம், சிருங்காரம், அச்சம், அருவருப்பு, வெகுளி, வீரம், அற்புதம், சாந்தம், அழுகை என வாழ்வின் சுவைகள் ஒன்பது என்பர்.

தமிழ்மண்ணில் இன்று இவை அச்சம் அழுகை என இரண்டாகக் குறைந்து விட்டனவோ?

ஜீவனிடமிருந்து நீண்டநாட்களாய்க் கடிதம் வரவில்லை. யாழ்ப்பாணத்தில் ஐந்து நாட்கள் தொடர்ந்து விமானத்தாக்குதல் நடைபெறுவது அவனுக்குத் தெரிந்திருக்குமோ இல்லையோ? தெரிந்திருந்தால் அவன் என்ன உணர்வைப் பெற்றிருப்பான்?

## 26-4-87

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் விமானத்தாக்குதல் நடைபெற்றதாய் பி. பி. ஸி. அறிவித்ததைக் கேட்டபடியே படுத்திருந்தான் ஜீவன்.

போராளிகளின் தளங்கள் மீதே குண்டுகள் போடப்பட்டதாய் வானொலிச் செய்தி கூறியபோதிலும், போராளிகளின் வாழிடங்கள் பொதுமக்கள் வாழிடங்





களில்இருந்து பிரிக்கமுடியாதிருக்கும் என்பதும் போடப்படும் குண்டுகள் பொதுமக்களின் வீடுகளைக் கட்டாயம் தாக்கும் என்பதும் ஜீவனுக்குத் தெரியும். விமானத் தாக்குதல் நடைபெற்றதாய் அறிவிக்கப்பட்ட கிராமங்களில் அவனது கிராமத்தின் பெயரும் சொல்லப்பட்டபோது முற்றுப்பெறாத முதல் காதல் ஒன்று ஏற்படுத்தும் வேதனை போல் விபரிக்க முடியாததோர் வேதனை அவனுக்குள் எழுந்தது.

சிறிய குழந்தைகள் இருவர், வயதான தாய், இவர்களுடன் வீணா எவ்வளவு கஷ்டப்படுகிறாளோ?

தான் இங்கே வந்து அமைதியாகப் படுத்திருக்கும் குரூரம் தனக்கே பயமாய் இருப்பது போல் ஒரு உணர்வு!

பதுங்கு குழியாவது அமைத்தார்களோ இல்லையோ? கட்டாயம் பதுங்கு குழி அமைத்திருப்பார்கள் - எதிர்பார்ப்புகள் இன்னும் காத்திருந்தன. நம்பிக்கைகள் முற்றுகச் சாகவில்லை.

அடுத்த கணமே அந்த நம்பிக்கைகள் கடல் நுரைக் குமிழிகளாக அழிந்து போகும் நினைப்பு;

ஒருவேளை இதுவரையில் அவர்களுக்கு ஏதும் நடந்திருக்குமோ? இப்படி நினைத்த போது அவனுக்குள் ஏற்பட்டிருந்த வேதனை ஒரு பட படப்பாய் மாறியது.

பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த மோகனைத்தட்டி எழுப்பினான்.

''கிரேக்க நாடகம் ஒண்டிலை அகமெம்னன் எண்ட அரசன் தனது நாட்டின்ரை வெற்றிக்காகத் தன்ரை மகளைக்

களப்பலி குடுக்கிறுன். அவன் போர் முடிஞ்சு நாடு திரும்பேக்கை அவன்ரை மனைவி என்ன செய்யிறுன் தெரியுமே?''

திடீரென்று ஜீவன் இவ்வாறு கதைக்கத் தொடங்கவே மோகனுக்கு நித்திரை விசரில் ஒன்றும் விளங்கமல் இருந்திருக்கும் என்றாலும் சமாளித்துக்கொண்டு அவன் சொன்னான்.

''தெரியும். மனைவி அகமெம்னனைக் கொன்று விடுறுள்.''

''அதிலை அகமெம்னன் செய்தது பிழையோ... அல்லாட்டி மனைவி செய்தது பிழையோ... நீ என்ன நினைக்கிறுய் மோகன்?''

''நீ ஏன் இப்ப திடீரெண்டு இப்பிடி ஒரு ஆராய்ச்சியிலை இறங்கி நிக்கிறுய்?''

''இல்லை அந்த அகமெம்னனுக்கு நடந்ததைப் போலை... நாங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போகேக்கை, எங்கடை மனிசிமாரே எங்களைக் கொலை செய்தாலும் செய்வினம் எண்டு நினைச்சன்...''

''ஏண்டாப்பா...? உன்ரை சிந்தனையள் இண்டைக்கு வித்தியாசமாய் இருக்கு?''

''யாழ்ப்பாணத்திலை ஐஞ்சு நாள் தொடர்ந்து விமானத்தாக்குதல் நடக்குதாம்... எங்கடை ஊரிலையும் குண்டு போட்டிருக்கிறுங்கள். அதுகள் அங்கை என்ன கஷ்டப்படுதுகளோ தெரியாது. எல்லாம் முடிஞ்சாப் பிறகு நாங்கள் அங்கை போனல்... எங்களைப் பாக்கக் கோபம் வருமோ இல்லையோ?''





நீ சும்மா தேவையில்லாத விஷயத்துக்கெல்லாம் கவலைப்படு... நாங்கள் என்ன இஞ்சை சும்மாவே இருக்கிறம்? கஷ்டப் பட்டு உழைக்கிறம், காசு அனுப்புறந்தானே! இருக்கிறவரைக்கும் சந்தோஷமாயிருக்க வேணும்... ஒரு கிளாஸ் தரட்டே... நிம்மதியா இருக்கும்...''

''ஐயோஎனக்குவேண்டாம். நீ களவு வேலையள் செய்து வீணு அம்பிடப்போறுய்...''.

''உனக்கு எதைத்தான் அநுபவிக்கத் தெரியும்? பவானிகூட உன்னைத்தான் முதலிலை கூப்பிட்டாள், நீஏதோ பயந்து நடுங்கிப் பின்வாங்கிட்டாய், நான் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்றன்...''

''நீ உண்மையிலை பவானின்ரை சகோதரன் இல்லையெண்டு தெரிய வந்தால் என்ன செய்வியோ எனக்குத் தெரியாது...''

''எங்களுக்கு மூளையைக் கடவுள் ஏன்டா தந்தவர்? தேவையான இடத்திலை கவனமாய்ப் பாவிக்கத் தானே...?''

''எனக்கு உதெல்லாம் சரிவராது... வீணு என்னை உடனை வரச் சொல்லி எழுதினதுக்கு நான் பதில்எழுதேல்லை. அதுக்குப்பிறகு அவளும் எழுதேல்லை... எனக்கும் 'ரென்சனுய்' இருக்கு... இவங்கள் போக விடாங்கள். என்ன செய்வம் சொல்லு...''

''சும்மா விசர்க்கதை கதையாதை. யாழ்ப்பாணத்திலை பொம்மர் குண்டுபோட்டு அங்கை எல்லாரும் சாகினமே? ஆரும் ஒரு பத்து இருபதுபேர் செத்திருப்பினம். அது உன்ரை வீடாயே இருக்கப்போகுது? வந்த

நாங்கள் ஓரளவு உழைச்சுக்கொண்டு போவம்...அதுக் குள்ளை அந்தரப்பட்டு...''

''அவையெல்லாம் செத்திட்டினமெண்டால்... நாங் கள் கொண்டு போற காசு என்னத்துக்கு?''.

''சரி ஒரு கதைக்கு...அவைசாகினம் எண்டே வைப்பம்...அதுக்காக நாங்களும் வில்லங்கமாய்ப் போய்ச் சாகவேணுமோ? எத்தனை சனம் அங்கை வெளி நாடுவரத் துடிக்குது... தெரியுமோ?''

''அவைசாக நாங்கள் சாகாமயிருந்து என்ன செய் யிறது?''

''என்ன செய்யிறதோ? விசரா,புருஷன் செத்தா.. பெண்சாதிஉடன்கட்டை ஏறிறதுகூடப்போன நூற்றாண் டிலை, தற்செயலாய்த்தான் அவை செத்திட்டா.. வேறை கலியாணம் செய்யேலாதே...?''

இதற்குமேல் ஜீவனால் தொடரமுடியவில்லை. மனத் திற்கு ஆறுதலாய் இருக்குமென்று மோகனுடன் கதைக் கப் போய் அவன் மனதை மிகவும் குழப்பி...!

மோகனைக்கூடாதவன்என்று முற்றாக ஒதுக்க முடி யாது!நல்ல,நேர்மையான நண்பன், துன்பத்தில் உடனே உதவக்கூடிய மனம்! ஆனால் அவன் வாழ்க்கையைப் பார்க்கும் கோணம் வேறு!

எப்போதும் மகிழ்வாகவே இருப்பான்!

சிறிய விடயங்கள் அவன் மனநிலையைக் குழப்பு வதில்லை!

சூழலோடு விரைவில் ஒன்றி விடுவான்!





சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் முகத்தைக் குந் திக்கொண்டு படுத்திருந்த ஜீவன்.

''எனக்கு மனம் அமைதிப்படுதில்லை. எங்கடை நாடகத்திலை நீயும், நானும் வாறகாட்சியை ஒருக்காச் செய்வமே?'' என்றான்.

''அதிலை அண்டைக்கு 'றியேசல்லை' என்ரை நடிப்பு எப்பிடி?''.

''நீ கொஞ்சம் 'ஓவர் அக்ரிங்' தான், நடிகன் மேடையிலை ஒரு பொய்மையைத்தான் உருவாக்கிறான். ஆனால் அந்தப் பொய்யிலை ஒரு நம்பத்தக்க தன்மை இருக்கவேணும்...''

''சரி... நான் கொஞ்சம் நச்சுரலாச் செய்யிறன். இப்ப... உன்ரை மனநிலை நாடகம் நடிக்கிறதாலை மாறும் எண்டு நான் நினைக்கேல்லை. கொஞ்ச நேரம் சந்தோஷமாய்ப் படுப்பம்...''

தனது இடத்திலிருந்து எழுந்த ஜீவனை அணைத்துக் கொண்டான் மோகன்.

இன்னும் சில மணித்துளிகளில் விடிவு இன்னும் சில மணித்துளிகளில் விடிவு...என்று மணிக்குமணி எதிர்பார்த்திருந்த மக்கள் அந்த விடிவைக் கண்டுவிட்டார்கள்!

"வட கரையின் முத்துமணல் வருவோரைக் கவரும்" என்று ஒரு கவிஞர் பாடினார். சில வருடங்களின் பின் மீண்டும் கீரிமலைச் சிவன் கோவிலின் அருகில் அமைந்த கடற்கரையில் அந்த முத்து மணலின்மீது சுதந்திரமாக அமர்ந்திருக்க முடிந்திருக்கிற நினைவு அவளுக்குள் பெரியதோர் மகிழ்வை ஏற்படுத்தினாலும், அந்த மகிழ்வை முற்றாக அனுபவிக்க முடியாத நிலையில் அவள் மனம் தவிக்கிறது.

## 11

## 17 - 12 - 90

கோவிலைச் சுற்றிவர உள்ள மரஞ்செடிகளெல்லாம் குளித்து முழுகிப் பூத்துக் குலுங்கிப் புதுமைக்கோலம் காட்டுகின்றன. அந்த நிலை தமிழ் மக்களிடத்திலும் பலரிடத்தில் காணப்படுகிறது.

முழத்துக்கொன்றாய் நிறுவப்பட்டிருந்த முகாங்களெல்லாம் அகன்றுவிட்டன. "இரவில் தலையில் ஷெல்விழும். பகலில் பொம்பர் வந்து குண்டு போடும்" என்ற பயங்க





ளிலிருந்து மக்கள் விடுபட்டுவிட்டார்கள். 'அவ்ரோ' எறிந்த குண்டுகளால் எரிந்துபோன கட்டிடங்கள் பல புதுப்பிக்கப்பட்டுவிட்டன. ஆனால்...

ஜீவன் வந்து பலாலி விமான நிலையத்தில் இறங்கிய நாள் வீணாவின் நினைவில் பசுமையாய் நிழலாடுகிறது! அவன் வருகிறான் என்றதும் அவளுக்கு ஏற்பட்டிருந்த மன விரிசல்களெல்லாம் அகன்று விடுகின்றன. எத்தனை மகிழ்வுடன் பபியும் பாப்பாவும் அவளும் விமானநிலையம் சென்று ஜீவனை ஆரத்தழுவி அரவணைத்துக் கூட்டி வந்தனர்!

அவன் அவளுக்கு மிக அவசியமாய்த் தேவைப்பட்ட, வாழ்வின் மிகச் சிக்கலான — மிகத் துன்பமான புள்ளிகளில் எல்லாம் அவன் இல்லாவிட்டாலும்கூட அவள் எப்படியோ சமாளித்துவிட்டாள். பபியும் பாப்பாவும்கூட அவள் எதிர்பார்த்ததைவிட விரைவிலேயே அவனுடன் இணைந்துகொண்டனர்.

ஜீவன் கொண்டுவந்த ரொபி, சொக்லேற், பிஸ்கட், மணிக்கூடு, உடைப் பொதிகளில் அவர்களுக்குப் பரம திருப்தி. சும்மா சொல்லக்கூடாது...அவன் கொண்டுவந்த பணத்தில் வீணாவுக்கும் திருப்திதான்.

"நாங்கள் முந்தி நடிச்ச ஒரு நாடகத்திலை... நாடகம் தொடங்கிறபோது... மேடையிலை ஒரு மரம் வளரத்தொடங்குது... நாடகம் முடிய அது ஒரு பெரிய மரமாய் மேடை முழுதும் பரந்து நிக்குது.... அதைப் போலை நான் சவூதிக்குப் போகேக்கை... வளரத் தொடங்கின - சுதந்திரமரம் இண்டைக்கு நான் திரும்பி வரேக்கை...பெரிய மரமாய் வளந்து பூத்துக் குலுங்கி நிக்கிறதைப் பாக்க எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி

தெரியுமே?'' என்று ஜீவனும் நிறைந்திருந்தான்.

ஜீவனுடைய குறைபாடுகளும்...அவன் கடிதங்களினால் ஏற்பட்ட மனக்குறைகளும் வீணாவின் மனதிலிருந்து முற்றாக மறைந்துவிடுகின்றன. 'அவன் வந்துவிட்டான்' என்ற நிறைவு பெரிய பூதமாய் மற்றக் குறைகளை எல்லாம் விழுங்கிவிடுகிறது.

இந்த நிறைவு அந்தக் குடும்பத்தில் இரண்டு வாரங்கள் நீடிக்கிறது.

இரண்டுவார முடிவில்...ஒரு சனிக்கிழமை இரவு...

ஜீவனுக்குத் திடீரென்று காய்ச்சல் வருகிறது. வழக்கம்போல இரண்டுநாள் பனடோல் போட்டுக்கொண்டு படுத்தும் காய்ச்சல் இறங்காதுபோகவே அவர்களின் குடும்ப வைத்தியரான சிதம்பரநாதன் டொக்டரைச் சந்திக்கிறான். ''அவருக்கு வெளிநாட்டிலை எக்செஸ்ஸன் இருந்திருக்கும். அதாலை உடம்பு 'வீக்' ஆயிட்டுது. இனி சில வருஷங்கள் கழிச்சு வந்திருக்கிறதாலை... கிளைமேற்சேஞ். அதாலை ஃப்ளூ வந்திருக்கு... பயப்பிட ஒண்டுமில்லை...'' என்று கூறி மீண்டும் பனடோலும் அன்ரிபயோற்றிக்கும் இருமல் கலவையும் கொடுக்கிறார். ஓரிரு நாள் காய்ச்சல் விட்டிருக்கிறது. பழைய நண்பர்களின் வீடுகளுக்குப் போயும் வருகிறான். கலகலப்பாக இருக்கிறான்.

மீண்டும் ஒரு வாரம் போக மறுபடியும் காய்ச்சல் வருகிறது. இம்முறை காய்ச்சலுடன் வயிற்றோட்டமும் இருக்கிறது. 'ரைபோயிட்டாக' இருக்குமோவென்று வீணா நினைக்கிறாள். அப்படியொன்றும் இல்லை என்று டொக்டர் சிதம்பரநாதன் சொல்லிவிடுகிறார்.

அதன்பின் தனக்கு அடிக்கடி மூச்சடைப்பும் களைப்





பும் ஏற்படுவதாய் ஜீவன் கூறுகிறான். இரவில் மின்விசிறி வேகமாய்ச் சுழன்றுகொண்டிருக்கும்போதும், எழுந்திருந்து தனக்கு அதிகமாய் வியர்ப்பதாக ஜீவன் சொல்வது இவளுக்கு விளங்கமுடியாத புதிராக இருக்கிறது.

சவூதியில் இருந்து வந்த இந்த ஒன்றரை மாதத்தில் உடல் மிக நன்றாக மெலிந்து போயிருக்கிறது. இப்போது இரண்டு நாளாய் காதின் கீழ்ப்புறத்திலும் அக்குளிலும் காணப்படும் நிணநீர்க் கணுக்கள் வீங்கி வேதனை கொடுப்பதாய்ச் சொல்கிறான்.

''அப்ப...நாளைக்குப் பெரியாஸ்பத்திரியிலை கொண்டு போய்க் காட்டுவம். என்னப்பா?''

''ம்...:'' அவன் பெருஞ்சிந்தனையோடு பேசாதிருக்கிறான். பிறகு, ''நான் உழைச்ச காசு பபியையும் பாப்பாவையும் கஷ்டமில்லாமல் வளத்துப் படிப்பிச்சுக் கலியாணம் செய்துகுடுக்கக் காணுமே?''

என்று கேட்கிறான். உதட்டைக் கடித்து உணர்ச்சியை விழுங்கிக்கொள்கிறான். அந்தக் கேள்வியின் அர்த்தம் புரியாமல் அவள் அவனை விழித்துப் பார்க்கிறாள்.

''நான் இல்லாட்டிலும்...இவ்வளவு நாளும் சமாளிச்சமாதிரி நீங்கள் சமாளிப்பீங்கள்தானே என்ன?''

அவன் ஏன் இப்படிக் குத்தலாகக் கேட்கிறான்?

தான் இல்லாத வருடங்களில் வீணாவின் தனிமையைச் சந்தேகிக்கிறானோ?

''நீங்கள் இல்லாமல் நான் எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டேன் என்டு எத்தனையோ தரம் உங்களுக்கு

எழுதியிருக்கிறன். சொல்லியுமிருக்கிறன். இரவிரவா அவங்கள் ஷெல் அடிச்ச நாட்களிலை...பகல்பகலாக அவங்கள் குண்டு போட்ட நாட்களிலை உங்களை எனக்கு அவசியம் தேவைப்பட்டுது...''

மார்கழி மாதத்துப் பனிச்சாரல் உடலை ஊசியாய்த் தைக்கிறது.

''வந்தது வந்திட்டன். இனி ஒரு மிக்க இருந்து பல்லைக் கடிச்சுக்கொண்டு உழைச்சுக்கொண்டு போவம் எண்டு தான் இருந்தனான்... இப்ப உழைச்சது மட்டும் தான் மிச்சம்...வேறை ஒண்டுமில்லை...''

அவனின் குரல் விரக்தி நிரம்பி வழிகிறது.

''அப்பா...கப்பல்...அழகான கப்பல்...!''

தூரத்தில் வரும் வள்ளங்களைக் காட்டினான் பபி. அவளது விழிகள் துள்ளித் துள்ளிப் பாய்ந்தன. ஜீவன் பபியைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டான். அதிலும் ஒரு தயக்கம் இருப்பதுபோலத் தெரிகிறது.

சூரியக் குஞ்சுகள் பல சுழன்று ஓடுவதுபோலத் தூயமணல்மீது இராவணன் மீசை வித்துக்கள் சில ஓடித்திரிகின்றன. அவற்றைத் துரத்திக்கொண்டு பாப்பா ஓடுகிறாள்.

மணலோரக் கரையில் அவள் கால்கள் அமிழ்ந்து மிதக்கின்றன. ஆழ்கடல்கூட அமைதியாக இருக்கிறது. 'ஆமிக்காறன், நேவிக்காறன்' எல்லாம் வெளிக்கிட்டதில் இருந்து கடலுக்கும் நிம்மதி. பீரங்கிச் சத்தங்கள் இல்லை. அந்த அமைதியைப்பெற வீணாவுக்கு ஏன் முடியவில்லை?

உப்புக்கடலில் ஊறிய காற்றை அதிக நேரம்





சுவாசிப்பதும் ஜீவனின் உடல் நிலைக்குக் கெடுதியாகலாம் என்று கருதி விரைவில் கடற்கரையைவிட்டு எழுந்துவிடுகிறது அக்குடும்பம்!

## 26 - 12 - 90

வைத்தியச் சோதனையின் முடிவை எதிர்பார்த்து ஜீவனின் கட்டிலருகே நிற்கிறாள் வீணா.

படுக்கையில் சோர்ந்து கிடக்கும் ஜீவனுக்கு நடுக்கம், கடுமையான வயிற்றோட்டம், புலம்பல், மறதி எல்லாம் உருவாகி இருக்கின்றன. அவனுக்கு ''எலிஜா...'' குருதிச்சோதனை செய்யப்படுகிறது.

'டொக்டர்' ஜீவனின் கட்டில் அருகில் வரும்போதே அவரது முகம் சரியாக இல்லை. ஜீவனுடன் எதுவுமே கதைக்காமலே வீணாவை அழைத்துப்போய்ச் சற்றுத் தூரத்தில் வைத்துக்கொண்டு மிக மெதுவாகச் சொல்கிறார்.

''உங்கடை மிஸ்டருக்கு 'எயிட்ஸ்' ஆக இருக்கலாம் எண்டு நான் 'சஸ்பெக்ட்' பண்ணினனான். எலிஜா ரெஸ்ற் அதை உறுதிப்படுத்திறமாதிரி இருக்கு...''

அவர் சொன்னது உண்மைதான் என்று மூளையில் பதிக்கவே வீணாவுக்கு நீண்ட நேரம் எடுத்தது.

மூளையில் பதிந்தவுடன் வயிறு கல் விழுந்தாற் போலக் கனக்கிறது!

'டொக்டர்' அடுத்து இன்னொரு கேள்வியும் கேட்டார்.

''அவர் சவூதியிலை இருந்து வந்து எவ்வளவு காலம்?''

''இரண்டு மாதம் இருக்கும்...''

உங்களையும் நாங்கள் எலிஜா சோதனைக்கு உட்படுத்திறது அவசியம் எண்டு நினைக்கிறீங்களா?''

அவர் நாகரிகமான முறையில் கேட்டாலும் அவரது கேள்வியின் அர்த்தம் வீணுவுக்குப் புரிந்தது.

''எனக்கு அவரிட்டை இருந்து...எயிட்ஸ் கிருமி தொற்றியிருக்கலாம். ஆனா நான் நிச்சயமா ஒரு காவியாக இருக்கமாட்டன். ஆகவே நீங்கள் என்னைப் பற்றிப் பயப்பிடத் தேவையில்லை...'' என்றாள் வீணு.

''சரி பார்த்துச் செய்யலாம்'' என்று கூறிவிட்டு அவர் அகன்றபின் வீணு ஜீவனின் கட்டிலுக்கு அருகில் வந்தாள்.

நிதர்சன உலகின் விகாரங்கள் அவளுக்குள்ளே பெருவலியைத் தந்துகொண்டிருந்தன.

''இரவு நேரத்திலை கணவன் கூத்தாடுறதுக்கு வசதியா-மனைவி...வீடுகளிலை போய்ச் சேலை வாங்கி வந்து குடுப்பாள்'' என்று பழைய காலக் கூத்துப் பற்றி இவள் நாடகப்பட்டறை வகுப்பில் படித்த துண்டு.

அதேபோலவே தானும் ஜீவனின் ஆட்டத்திற்கு வசதியாய் அவனைச் சவூதிக்கு அனுப்பினேனோ என்று நினைக்கிறாள்.

''நீங்கள் சவூதியிலை வீட்டையும் வேலைத் தலத்தையும்விட வேற இடங்களுக்கும் போனியளோ?''





சுய இரக்கத்தைத் துடைத்தவுடன் ஆத்திரமாய்ப் பிறிட்ட கோபம் எவ்வளவோ மறைத்தும் குரலில் தொனிக்கத்தான் செய்கிறது.

''போவன்...'' மெதுவான குரலில் பதில் கொடுத்த ஜீவன் இவள் ஏன் கேட்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டவன்போல் அவளை நேருக்குநேர் பார்க்காது தலையைக் குனிந்துகொள்கிறான்.

''எத்தினை பெண்களோடை தொடர்பு வைச்சிருந்தீங்கள்?''

கேட்கக்கூடாது என்று நினைத்தாலும் அவளால் கேட்காதிருக்க முடியவில்லை.

''ஒருத்தரோடையும் இல்லை...''

அவன் கீழே பார்த்தபடியே கூறுகிறான்.

அவளுக்குள்ளே பெருஞ்சினம் மூண்டது. விழிகளில் அனல் மழை பெய்தது.

''இவ்வளவும் நடந்தபிறகு...உங்களை வருத்தும் 'எயிட்ஸ்' எண்டும் தெரிஞ்சபிறகு ஏன் பொய்சொல்லுறீங்கள்?''

அவள் குரல் சற்று உயர்ந்திருக்கிறது. ஆஸ்பத்திரி என்பதையும் மறந்து!

''இல்லை வீணு. என்னை நம்பு. நான் எந்தப் பெண்ணோடையும் தொடர்பு வைச்சிருக்கேல்லை... சத்தியமாத்தான் சொல்லுறன்...ஆனால்எனக்கு எயிட்ஸ் எண்டது ஒருவேளை உண்மையாயிருக்கலாம்''

''என்ன விசர்க்கதை? தொடர்பில்லை என்றியள் பிறகு எயிட்ஸ் ஆக இருக்கலாம் எண்டும் சொல்லுறியள்?''

அவள் கண்கள் நிறையக் குளம் கட்டி நிற்கிறது.

''பவானி எண்டொரு ஹவுஸ் மெயிட்டோடை என்ரை அறை நண்பன் மோகன் சிநேகிதமாயிருந்தான்...''

தொடர்ந்து சொல்ல முடியாமல் வார்த்தைகளை விழுங்கிக்கொள்கிறான் ஜீவன். அவளதுவிழிகள் அவனைத் துகிலுரிந்து பார்ப்பதுபோல்...

''எயிட்ஸ்'' நோயின் 'எச். ஐ. வி.' வைரசு தன்னினச்சேர்க்கைமூலம் பரவுதலை இவள் முன்னர் பத்திரிகைகளில் வாசித்திருக்கிறாள்.

''நீங்கள் கொணந்த பெருஞ்செல்வத்தை எனக்கும் தந்திருப்பியள் எண்டு டொக்டர் என்னையும் சோதிக்க வேணும் எண்டு சொல்லுறார். இதைவிட அவமானம் வேறை என்ன இருக்கு?''

அவளது குரல் அமானுஷிகத் தன்மையுடன் தழுதழுத்தது. அவனை நீங்கள் என்று பன்மையில் அழைப்பதுகூட மிகை என்று தோன்றியது.

''என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ வீணா...'' முனகியபடியே திரும்பிப்படுத்துக் கண்களை மூடிக்கொள்கிறான் அவன்.

சக்தி வாய்ந்த சிந்தனைகள் 'வோட் பிக்சர்' போல் இருக்கும் என்று சொல்வார்கள். வாழ்வில் எல்லாமே முடிந்துவிட்டதுபோன்ற இந்தக் கணத்தில் பழைய நினைவுகள் பல அப்படித்தான் வீணாவுக்குள் எழுகின்றன. தேக்கி வைத்திருந்த நினைவுக் கங்கை மீறிப் புறப்பட்டு நெஞ்சமெல்லாம் பரவுகிறாள்!





மனிதனின் நாகரிகம் மொழி. மொழியின் நாகரிகம் கவிதை!

அவன் வீணாவுக்கு அருகில் நின்று நாடகப் பட்டறை வகுப்பில் ஈடுபடும்போது...இடையில் தான் ஏதும் கவிதை சொல்வான். இவள் அதைத் திருப்பிச் சொல்வாள். பிறகு இவளைப் புதிதாய் ஒரு கவிதை சொல்லும்படி கேட்பான்.

அப்போது அவள் சொன்ன கவிதை ஒன்று;

''மலையிலே துள்ளும் நதி மங்கை

சமவெளிக் கணவனை அடைந்தபின்

நடையிலே எத்தனை மாற்றங்கள்?''

இப்போது இந்தக் கட்டிலில் உரித்தகோழிபோல் படுத்திருக்கும் ஜீவனுக்கு...நடையில் எத்தனை மாற்றங்கள்!

நம்பிக்கையின் சிதைவுகளுக்கிடையில் இருந்துதான் மனிதஞானம் பிறக்கிறதா? எல்லா நம்பிக்கைகளும் சிதைந்த நிலையில் அவனும் அவளும்!

பபி, பாப்பாவின் எதிர்காலம்...? எங்கும் ஒரே இருளாக இருக்கிறது.

அவளால் அவனை முற்றாக வெறுக்கவும் முடியவில்லை. ஏன்?

மனங்களின் இரகசிய வேதனைகளைப் புறக்கண்களால் காணமுடியாது என்று சொல்வார்கள். ஆனால் இந்தப் படுக்கையில் ஜீவனின் வேதனை பல சமயங்களில் அவன் முகத்தில் தெரியவே செய்தது.

''மோகனோடை நான் பழகாமல் இருந்திருக்கலாம்.

மோகன் இடையிலை ஒருக்கா சாம்பியாவுக்கும் போய் வந்தவன்...''

மனதுக்குத்தானே சொல்லிக்கொள்பவன்போல் முணுமுணுத்தான் ஒருமுறை.

தவறு ஒன்றைச் செய்துவிட்டுத் தவறு என்று ஏற்றுக்கொள்வது ஜீவனுக்கு வழக்கமில்லை. தான் செய்தது சரி என்றும் மற்றவரே பிழை என்றும் நிரு பிப்பதே பெரும்பாலும் அவன் வழக்கம். அது குடும் பத்தின் கடைசிப் பிள்ளையாக வளர்ந்த குணம்.

கோபம் வந்தால் உடனே பலமாகக் கத்துவான்.

''நீங்கள் ஏன் இப்பிடிக் கத்திறியள்? என்று கேட் டால்கூட,

''நான் கத்துவன். நீ விரும்பினால் கத்தாத ஆம் பிளை ஒராளைப் பிடிச்சிருக்கலாம்'' என்று மீண்டும் கத்துவானே ஒழியத் தன் தவறை உணர்ந்துகொள்ள மாட்டான்.

இப்போதும்கூட நேர்ந்த தவறை அவள்மீது சுமத்தியிருக்கலாம்

''நான் போறபோதே நீயும் என்னோடை வந்தி ருக்கலாம். வந்திருந்தால் இப்பிடி ஒண்டும் நடந்திருக் காது. கொம்பனியும் ஒரு வீடு தந்திருக்கும்...'' என்று சொல்லியிருக்கலாம்.

ஆனால் அவன் அப்படி ஒன்றும் சொல்லாமல் ''என்னை மன்னிச்சிடுங்கோ வீணா'' என்று சொல்லி விட்டுச் சோர்ந்து கிடப்பது... இவளை அவன்மீது அனு தாபம் கொள்ளவைத்தது.





எந்தஒரு சிறு விடயத்தை எடுத்துக்கொண்டாலும் அதைச் சரியாகச் செய்துமுடிக்க நினைக்கும் பண்பு வீணாவுடையது. அது குடும்பத்தில் மூத்த பிள்ளையாக வளர்ந்த பண்பாக இருக்கலாம். தன்னைப்போலவே கணவனும் பிள்ளைகளும் இருக்கவேண்டுமென அவள் எதிர்பார்த்தாள். அப்படி அமையாதபோது அவள் பெரும் ஏமாற்றம் அடைவதுண்டு.

இது மிகப் பெரிய ஏமாற்றமாய்...இறுதி ஏமாற்ற மாய்...! வாழ்வில் ஒழுக்கம் பேணுதல் என்ற சட்டம் வீணாவிடம் கண்டிப்பாய் அமைந்திருந்தது. அது ஏன் ஜீவனிடம் அமையாமல் போயிற்று?

குறுகியகால நட்புக்களைத் தேடிக்கொள்ள அவ ளால் ஒருபோதும் முடிந்ததில்லை. அவளது நண்பர்கள் எல்லாம் நீண்டகால நண்பர்களாகவே இருந்தார்கள். அப்படியான நண்பர்கள் நட்புக்குத் துரோகம் செய்ய மாட்டார்கள் - கல்யாணிபோல...பூரணிபோல...

ஜீவன் திடீரென உண்டாக்கிக்கொள்ளும் நட்பும் - பிறகு கவலையின்றி அவர்களைப் பிரியும் இயல்பும்... கடைசியில் அவனுக்கே காலனாகிவிட்டனவே!

எல்லாம் ஒரு 'கண்ணாம்பூச்சி' நாடகம்போல் இருந்தது வீணாவுக்கு!

வீணையை நம்பி வாழ்விலே ஒரு பொறுப்பைத் தரலாம். அதைச் சரியாக நிறைவேற்றும் பொறுப்புணர்ச்சி கட்டாயம் அவளிடம் அனளிடம் இருக்கும்.

உண்மையில் வாழ்வை மிக 'சீரியஸ்' ஆக எடுத்துக் கொண்டு ஓய்வு கொள்ளப் பிரச்சினைப்படுவதே இவளின் வாழ்வுப் பண்பாக இருந்து வந்தது.

எதிலும் நிச்சயமற்ற தன்மையை அவள் விரும்பியதில்லை. எதைச் செய்யப்போகிறோம். எப்போது செய்யப் போகிறோம் என்பதில் நிச்சயத்தை அவள் எப்போதும் விரும்பியதுண்டு.

எந்த ஒரு விடயத்திலும் பொறுப்பெடுத்துக் கொள்பவள் இவளாக இருக்க விலகிக்கொள்பவனாக ஜீவன் இருந்ததுண்டு.

## 30 - 2 - 91

இறுதியில் வாழ்வின் முழுப் பாரத்தையும் அவள் மீது கொட்டிச் சுமத்திவிட்டுத் தான் விலகிக்கொள்பவன்போல மரணப்படுக்கையில் இருக்கிறான். இன்னும் ஓரிரு நாள்களில் எல்லோருமே எதிர்பார்த்திருக்கும் அந்த மரணம் நிகழ்ந்துவிடலாம்; புழுத்துடிப்பாக அவளின் உள்ளம் துடித்தது;

**12**





மலர்ந்து மணம் வீசும் சோஷலிச தமிழ் ஈழத்தை- வர்க்கபேதமற்ற அதன் செம்மையான வாழ்வை- வேலை இல்லாப்பிரச்சினை என்பதே தலை காட்டாத அதன் செழிப்பை - பெரிய தொழில்களுக்கும் சிறிய தொழில்களுக்கும் பெருமளவு சம்பளபேதம் அற்ற அதன் உயர்வை - எல்லாம் பார்த்துக் களிக்கும் வாய்ப்பு ஜீவனுக்குக் கிடைக்காமல் போகப்போறது. இதுதான் ஒழுக்கக்கேட்டுக்கு அவன் கொடுத்த விலை.

வீணையின் கண்களில் குளம்! கண்களைமூடிக்கொண்டு ஜீவனின் கட்டிலுக்குப் பக்கத்தில் இவள் அமர்ந்திருக்கையில் கோபி வந்தான்.

புதிய பூமியில் அவன் 'மீதேன்' உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றில் முகாமையாளராய் இருக்கிறான்.

வரும்போதே ''சுக்தி வரச் சகதி எண்டால் எட்டி அடி வைப்பதெங்கே?'' என்று சொல்லிக் கொண்டு வந்தான்.

இவள் ஒன்றும் புரியாமல் தலையை நிமிர்த்தி விழித்தாள். அவனே விளக்கமளித்தான்.

''எந்த வீட்டிலை பாத்தாலும் வெளிநாட்டாலை வந்து நிக்குதுகள். இதுகள் எல்லாம் போராட்டம் நடக்கிற காலத்திலை தங்கடை உயிர் பவுண் - மற்றவையின்ரை உயிர்கிள்ளுக்கீரை எண்டு நினைச்சுக்கொண்டு வெளிநாடுகளுக்கு ஓடித்தப்பினதுகள். அங்கை போய்ப் பணக்கார அகதிகளாய் இருந்ததுகள். இஞ்சை நாங்கள் எத்தினை ஆயிரம் உயிரைப் பலி குடுத்து அவங்களை முகாம்களை விட்டுக் கலைச்சு அவங்களே அரசுக்கு எதிராச் சதி செய்து எத்தனை கஷ்டப்பட்டுச் சுதந்திரம்

வாங்கினுப் பிறகு மொசு மொசுவெண்டு வந்து இறங்கி நிக்குதுகள்...''

''அதிலை உனக்கு என்ன நட்டம்?''

''என்ன நட்டமோ? சும்மா வந்தாலும் காரியமில்லை. 'எயிட்ஸ்' எண்டொரு பெரிய செல்வத்தையும் கொண்டெல்லே வரினம்!''

அவன் நக்கலாப் பதிலளித்தான்.

அவர்தான் மரணதண்டனை விதிக்கப்பட்ட நோயாளியாய்ப் படுத்திட்டார். பிறகு நீ ஏன் குத்திக் காட்டிறுய்?''

''அவள் அழத் தயாராக இருந்தாள்போலிருந்தது. இன்னும் சில மணித்தியாலங்களில் பிரிந்துவிடப்போகும் ஜீவனின் உயிரில் கருணை கொள்வது ஒரு பெண்ணின் இயல்பு என்றே கூறலாம்.

''இவையள் ஒருத்தரையும் இனி நாட்டுக்கையே வரவிடக்கூடாது. இவை வந்து இஞ்சை மண்டையைப் போடுறது. மட்டுமில்லை. அடுத்த பரம்பரைக்குமெல்லே இதைக் கொடுத்திட்டுப் போயினம்...''

கோபியின் மனதில் ஜீவனுக்காக ஒரு துளிதானும் ஈரம் உண்டாகவில்லை. உண்டாகவேண்டும் என்று எதிர்பார்க்கவும் முடியாதுதான்.

கோபி இதைச் சொன்னபோதுதான் இவளுக்குத் திடீரென்று நினைவு வந்தது. தனக்கு இறுதியாக மாதச் சுகயீனம் ஏற்பட்டு நாற்பது நாள் கடந்துவிட்டது என்பது! ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்குமாக அலைந்து திரிந்ததில் அவள் இதுவரை அதுபற்றிச் சிந்திக்கவேயில்லை. அப்படியானல்...?





வீணவுக்கும் எயிட்ஸ் தொற்றியிருக்கலாம் என்பது மட்டுமல்ல...அவளது வயிற்றில் தோன்றியிருக்கும் குழந்தையும் பிறக்கும்போதே எயிட்ஸ் உடன் பிறக்கக் கூடும் என்பதற்கு ஐம்பதிற்கு ஐம்பதுவீதச் சந்தர்ப்பமுண்டு.

இதை நினைத்தபோது அவளுக்குத் திடீரென்று தீயை மிதித்ததுபோல் இருந்தது. முகத் தசை கோணி உதடு நடுங்கிற்று. குரல் உடைந்து வந்த அழுகையை இப்போது அடக்க முடியாமலே போய்விட்டது.

இங்கே நடக்கும் எந்தவிதமான சங்கதிகளுக்கும் தனக்கும் எந்தவித தொடர்பும் இல்லாததுபோன்ற ஒரு நிலையில் ஜீவன் கட்டிலில் கிடந்தான்.

''நீ இண்டைக்கு வேலைக்குப் போகேல்லையா?''

வீணு, கோபியைக் கேட்கிறுள் அழுதுகொண்டே.

''இல்லை. அத்தானுக்குக் கடுமை எண்டு அம்மா ராத்திரி வந்து சொன்னு...அதுதான் ஒருக்கால் பாப்பம் எண்டு வந்தனுன்...''

இவன் இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் பபியும், பாப்பாவும், அம்மாவும் ஆஸ்பத்திரியினுள் நுழைந்தனர்.

அம்மாவைக் கண்டவுடன் ஓடிச்சென்று கட்டியணைத்து வீரிட்டுக் குளறி அழுகிறுள் வீணு.

ஜீவனின் இறுதி நிமிடம் நெருங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்த அழுகை அது என்றுதான் அம்மா நினைத்திருப்பாள்.

'எயிட்ஸ்' உடன் ஒரு உயிர் தனக்குள்ளும் உரு

வாகியிருப்பதை உணர்ந்த ஒரு பெரும் சோகம் அது என்பது அம்மாவுக்குப் புரிந்திருக்காது.

ஆம். அது நினைக்க முடியாத பெருஞ்சோகம்தான்! தாங்கள் செய்த தவறினால் தாங்கள் தண்டிக்கப்பட்டு அனுபவிப்பது மட்டுமல்ல...ஒரு தவறும் செய்யாத, ஒரு பாவமும் அறியாத குழந்தை ஒன்றுக்குப் பிறக்கும்போதே தண்டனை கொடுப்பது...மனச்சாட்சி உள்ள எவராலும் தாங்கமுடியாத பெரும் சோகம்!

சோபோ கிளிசின் கிரேக்க நாடகங்களைவிட அதிக அவலச்சுவை கொண்ட நாடகம்!

அம்மாவும், பபியும், பாப்பாவும் வந்து கட்டிலுக்கருகில் ஜீவனின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில்,

அவனது முகத்தில் திடீரென ஒரு மந்தகாசம் தோன்றுவதுபோல் இருக்கிறது.

எங்கோ வெகு தொலைவில் ஆர்ப்பரித்த கடல் ஒன்று கரையிலே மோதி உதிர்வதுபோன்ற சத்தம் வீணுவுக்குள் கேட்கிறது,

அமீபா என்ற உலகின் முதல் உயிர் இனப்பெருக்கம் செய்யும்போது, இரு கூற்றுப் பிளவு முறையிலேயே இனப்பெருக்கம் செய்தது. அப்போது 'இறப்பு' என்பது இருக்கவில்லை. ஒவ்வொரு உயிரும் இரண்டாகப் பிரிவதும் பிறகு அது வளர்வதுமாகவே இருந்தது. உலகம் அப்படியே இருந்திருக்கலாம்!

அதன்பின் 'செக்ஸ்' ஆரம்பமாயிற்று. எப்போது 'செக்ஸ்' உம், ஆண் பெண் வேறுபாடும் புணர்ச்சியும்





ஆரம்பமாயிற்றோ...அன்றுதான் இறப்பும் ஆரம்பமாயிற்று. புணர்ச்சி காரணமாக எப்போது புதிய உயிர் உண்டாயிற்றோ அப்போதே தாய், தந்தை என்ற பழைய உயிர்கள் இறப்பதும் அவசியமாயிற்று.

இத்தகைய கூர்ப்பு நடைபெறுமலே விட்டிருக்கலாம் என்று மட்டும் வீணு நினைத்தாள்.

அத்தானின் இறப்பைப் பார்த்துக்கொண்டு நின்ற சோபி,

''பொம்மர் குண்டு வீச்சும், ஷெல் அடியும், ஹெலித்தாக்குதலும், பெற்ரோல் குண்டு வீச்சும், எரிப்பும் முடிஞ்சு சுதந்திரம் வந்த உடனே நாங்கள் பெருமழை பெய்து விட்டிட்டுது எண்டுதான் நினைச்சம்... ஆனல் இப்பதான் தெரியுது...பெரிய மழைக்குள்ள நனையலாம். ஒண்டும் செய்யாது...ஆனல் அந்த மழைக்குப்பிறகு வாற தூவானத்தைப்பற்றி நாங்கள் மிச்சம் கவனமாய் இருந்திருக்கவேணும். தூவானத்திலே நனைஞ்சால் கட்டாயம் நோய் வரும். தடுக்கேலாது.''

என்று தனக்குத்தானே சொல்பவன்போல் சொல்லிக்கொண்டு ஆஸ்பத்திரியைவிட்டு அகன்றன்.

சடலத்தை வீடு கொண்டுசெல்வதற்கான ஆயத்தங்கள் செய்யவே அவன் செல்கிறன் என்பது வீணுவுக்குப் புரிந்தது.

தான் தவறு செய்யத் தொடங்கிய முதல்நாள் மனச்சாட்சி மிகப் பலவீனமாகத் தன்னுள் ஒலித்தது என்றும் அது தனக்கே அடையாளம் தெரியாத மிகச்

சன்னமான குரலாக இருந்ததென்றும் முதல்நாள் இரவு இவளிடம் ஜீவன் கூறியது அவள் மனதில் மீண்டும் வந்து எதிரொலிக்கிறது.

சவூதிக்குப் போவதற்கு முன்னர்கூட...இவளுடன் வாழ்க்கையில்...திடீரென்று உடை மாற்றிக்கொண்டு சைக்கிளையும் எடுத்துக்கொண்டு வெளியே போவான். எங்கே போகிறான் என்பது வீணுவுக்குத் தெரிந்திருக்காது. ''எங்கே போகிறேன்?'' என்று சொல்லிக்கொள்வது அவன் வழக்கமில்லை. அதுபோலவே இறுதியில் ''எங்கே போகிறேன்?'' என்று சொல்லாமலே போய் விட்டான்.

''அப்பா செத்துப் போயிட்டாரா அம்மா?''

ஏதோ விளங்கியும் விளங்காத நிலையில் பாப்பா இவளிடம் வந்து மெதுவாகக் கேட்டாள்.

''இல்லை. அப்பா நித்திரை என்னம்மா?'' என்றாள் பபி.

அவர்கள் இருவரையும் நெஞ்சத்தோடு அணைத்துக் கொண்டே, ''நான் இருக்கிறன், அம்மம்மா இருக்கிறா... கோபி மாமா இருக்கிறார்...'' என்று அவள் மறைமுகமான பதிலாகக் கூறியபோது, அவளது கால்கள்கூடத்தான் துணிமாதிரித் துவண்டன.

வீட்டிலே தற்செயலாக ஒரு அட்டை காணப்பட்டால் அதை வீட்டிற்கு வெளியே நூறு மீற்றர் தூரத்திற்குமேல் தட்டிக்கொண்டே போவான் ஜீவன். அவ்வளவு அருவருப்பு அந்த அட்டைமீது, ''அட்டை அழகு குறைந்த உயிர். சரிதான். ஆனால் அதில் அரு





வருப்பதற்கு என்ன இருக்கிறது?''என்று கேட்பாள் வீணு. அப்படியானவன்-இறுதி நேரத்தில் சமுதாயம் முழுவதாலும் அருவருத்து ஒதுக்கப்படும் நிலைக்கு வந்து விட்டாரே!

கோபியோடு கூடவந்த மினிவான் சாரதி இவன் எயிட்ஸ் நோயாளி என்று தெரிந்தவுடன்...அவனைத் தொட்டுத் தூக்கக்கூடத் தயக்கம் காட்டியபோது வீணு இவ்வாறு நினைத்தாள்.

''சறுக்குப்பாறை எண்டது வழுக்கிக்கொண்டே இருக்கும். விழாமல் இருக்கவேணுமெண்டால் மிக அதிகப்படியான கவனம் தேவை. இல்லாட்டி விழுந்தெழும்பவேண்டியதுதான். அப்படிப்பட்ட ஒரு சறுக்குப் பாறைதான் இந்த வெளிநாட்டுப்பயணம்...''

பக்கத்துக் கட்டிலில் இதய நோய்க்காக அநுமதிக்கப்பட்டிருந்த ஆசிரியர் இவ்வாறு யாரிடமோ சொல்வது கேட்கிறது.

சவூதியில் இருந்து வந்த பிறகுகூட...காய்ச்சல் வருவதற்குமுன்...பொருள்களை எடுத்து இடம்மாற்றி வைத்தல் அவனது ஒரு இயல்பு!

ஹாலின் நடுவில் இருக்கும் ரீப்போவின் வடக்குப் பக்க மூலையில்தான் வீணு எப்போதும் பூச்சாடி வைப்பாள். ஒரு பொருளுக்கு இடம் ஒதுக்கப்பட்டால் இறுதிவரை அந்தப் பொருள் அந்த இடத்திலேயே இருக்கவேண்டும், வீணுவுக்கு மிக அவசிய தேவை ஏற்பட்டால் ஒழிய...அப்பொருளின் இடத்தை மாற்ற மாட்டாள்.

ஆனால்... ஜீவன் வந்த மறுநாளே...அந்தப் பூச் சாடி அலுமாரிக்குமேல் ஏறி நின்றது. அடுத்தநாள் ரீப்போவின் தெற்குப் பக்கத்தில் குந்தியிருந்தது. செருப்போ பத்திரிகையோ நெருப்புப்பெட்டியோ ஜீவனின்பாவனையில் உள்ள பொருள்கள் யாவும் ஒருநாள் ஒரு இடத்தில் வீற்றிருக்கும். இறுதியில்...தனது உடலையும் இடம்மாற்றி வைத்ததன் விளைவு இது! அடுத்த பிறவி என்று ஒன்று இருந்து...அதில் இவை எல்லாம் நினைவு வந்தால்...நிச்சயமாய்ப் பொருள்களை அடிக்கடி இடம்மாற்றி வைப்பவர்களுடன் பழகக்கூடாது. அவர்களை ஒருபோதும் காதலிக்கக்கூடாது. என்று விரக்தியுடன் நினைக்கிறாள் வீணா.

மேடை நாடகங்களில் இந்தச் சமுதாயத்தை வியாக்கியானம் செய்த வேளைகளில் இது "சுயநலங்களும் சுரண்டல்களும் நிறைந்த அகழி" என்று ஜீவன் கூறியதுண்டு. இன்று அந்தச் சமுதாயமே அப்படித் தன்னை வர்ணித்தவனைப் பார்த்துச் சிரிக்கும் நிலை ஆகி விட்டது.

பிள்ளைகளுக்குப் பெரிதாய் பிறந்தநாள் கொண்டாட்டங்களைச் செய்யமுடியவில்லை என்று விரக்தி அடைந்து சவூதிக்குச் சென்றவன் திரும்பி வந்து...

"இந்தமுறை பபியின்ரை பேர்த்டேக்கு...இந்த இது...,செய்யவேணும்...என்றான்."

அவனது கதைகளில் 'இந்த இது...' என்பது அடிக்கடி வரும். அதை வீணா நகைச்சுவையுடன் கூறி ரசிப்பதுண்டு.





"இந்த இது...என்டால்...எந்த எது...?" அவள் சிரித்துக்கொண்டே கேட்டாள்

அப்போது அவனும் சிரித்துக்கொண்டே ஒன்றும் பேசாமல் எழுந்து சென்றுவிட்டான்.

பபிக்கு ஏதோ செய்யவேணும்' என்று நினைத்தானே ஒழிய 'என்ன செய்யவேணும்' என்பதில் அவன் நிச்சயமாகவில்லை என்பதை அச்சம்பவம் வீணாவுக்கு உணர்த்தியது.

எதிலுமே நிச்சயமற்ற சிந்தனை கொண்டிருந்த அவன் வாழ்வு...நிச்சயமற்ற வாழ்வாய் நிம்மதியின்றி இளமையில் முடிந்து போயிற்று.

வீணா நெடுமரமாய் நெடிது நின்றாள்.

கட்டிலில் படுத்திருந்தாள் வீணா. சொந்த ஊரில் இருந்து பதினைந்து மைல் தொலைவில் உள்ள ஒரு ஊரில்...உள்ளே இருந்த கட்டிலில் காற்று வருகிறது. ஆனாலும் இறுக்கமாயிருந்தது.

உடம்பெல்லாம் ஒரே அலுப்பாய்க் களை கட்டியிருந்தது. 'கால் தசைகள் 'விண்விண்' என வலித்தன.

காரணம் தெரியாமல் ஒரு அச்சம் மாத்திரமல்ல சுய இரக்கமும்கூட அவளுக்குள் வந்திருந்தது.

கட்டிலில் படுத்திருந்தபடியே மேற்கையும் கிழக்கையும் பார்த்தாள் பார்த்துக்கொண்டே சிரித்தாள். மேற்குப் புறம் பபி, கிழக்குப்புறம் பாப்பா அவளை அணைத்தபடி...!

## 8 - 6 - 87

## 13

கடந்த இரவு விசித்திரமான இரவு? நித்திரையின்றிக் கழித்துவிட்ட பல இரவுகளில் ஒன்றுதான்! ஆனாலும் வித்தியாசமானது. புதிய இடத்தில் பயங்கரச்சத்தங்கள்ள துவும் கேட்கவில்லை - ஆனால் பயங்கரச்சிந்தனைகள்..அவள் விரும்பாமலே வந்துபோன சிந்தனைகள்!





தொண்ணூறும் தொண்ணூற்றேராய் ஆண்டுகள் பற்றித் தன்மனதில் இப்படியாக வந்துபோன சிந்தனைகள்கூட...சுயஇரக்கத்தின் வெளிப்பாடே என்று நினைத்தாள்.

பவானி, மோகன் ஆகியோரைப் பற்றிச் சென்ற கடிதத்தில் ஜீவன் எழுதிய சில விரும்பத்தகாத விடயங்கள் தன் சிந்தனையை எப்படிக் குழப்பியிருக்கிறது என்று வியந்தாள்.

கடந்த சில மாதங்களில் வெய்யிலில் காய்ந்த வாழைப்பழத்தோல்போல் உடம்பு ஆகிவிட்டது. உடம்பின் தோற்றம்கூட உளவியல் காரணிகளால் எவ்வளவு பாதிக்கப்பட்டுவிடுகிறது.

"கணவன் வெளிநாட்டில் மாதந்தோறும் இலட்சக் கணக்கில் உழைக்கிறார்" என்ற விம்பத்தினால் மட்டும் என்ன பயன்?

வயதுபோன அம்மாவையும் இரண்டு பச்சைக் குழந்தைகளையும் கொண்டு சொந்த வீட்டைவிட்டு அகதியாக ஓடிவரும்படி ஆகிவிட்டது!

வழக்கமாக ஒளி ஈட்டிகளை எய்து எய்து உதிக்கும் சூரியன் நேற்று ஷெல் குண்டுகளை எறிந்து எறிந்து உதித்தான். அவளது ஊரில் இருக்கும் மக்களைக் காலை ஒன்பது மணிக்குள் வெளியேறிக் குறிப்பிட்ட கோயில்களுக்கு சென்றுவிடும்படி யாழ்ப்பாண வானொலி அடிக்கொரு தடவை அறிவிப்புச் செய்தது.

காற்றுக்கு நறுமணம் பூசி அனுப்பும் முற்றத்துப் பவளமல்லிகைப் பூக்கள் நேற்றுக் காலை வெடிமருந்து மணம் பூசி அனுப்பின..

பனியில் முகம் கழுவி மலர்ச்சியில் சிரிக்கும் பூக்கள் எல்லாம் நேற்றுப் பீப்பாக்குண்டு நெருப்பில் முகம் கழுவிக் கருகி அழுதன.

தம்பி கோபி அமைத்துத் தந்த பதுங்கு குழிகூடப் பயனற்றுப் போய்விட்டது இறுதியில்.

''குழியிலை இருக்கிறவையைக் கண்டா அதுக்குள்ளேயே குழி தோண்டிப்போடுவங்கள் படுபாவியள் .''

''அவை சொல்லுற கோயிலுக்கை போயிருந்தா... அந்தக் கோயிலுக்கும் குண்டு போடுவங்கள்...''

வடமராட்சியின் முன் அநுபவங்களைக்கொண்டு வீணாவின் ஊர்மக்கள் பொதுவில் செய்துகொண்ட முடிவுகள் இவை.

எட்டு மணிக்கு முன்னரே ஊர் வெறிச்சோடிவிட்டது. வானொலி அறிவிப்பினால் காதுகள் இரண்டும் காயங்களாக...இதயத்தில் கொஞ்சம் ரத்தம் சொட்ட... ஒரு குழந்தை நடக்க மறு குழந்தையைத் தூக்கிக்கொண்டு...பின்னர் சிறிது தூரம் மறுகுழந்தை ஓடி ஓடி நடக்க ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு... அடைவிடமோ முடிவிடமோ தெரியாமல் நடந்தாள் வீணா.

நகைகளும் கைச்செலவுக்கு வைத்திருந்த சிறிதளவு பணமும் ஒவ்வொரு மாற்றுடுப்புக்களும் மட்டுமே எடுத்துக்கொண்டாள்!

வீதி நிறைய மனிதர்கள் பிதுங்கிவழிந்துகொண்டிருந்தார்கள். வான்கள், பஸ்கள் எதுவும் ஓடவில்லை. ஆங்காங்கு அருமையாக ஓடிய ஓரிரு தனிப்பட்ட





வாகனங்களில் சிறிலங்காவின் புத்திரர்களும் புத்திரிகளும் புளியாக மாறியிருந்தார்கள். சைக்கிள்களில் சிலசமயம் நால்வர்...சில சமயம் ஐவர்!

தொலைவில் நாய்கள் பல குரைக்கின்றன. யாரையோ கூட்டாகத்திட்டுவது போல் இருக்கிறது. திட்டட்டும்... நன்றாக! திட்டவேண்டியவர்கள் எல்லாரையும் திட்டட்டும்! ஜீவனையும் கூடத்தான்! தெருவெல்லாம் மனிதர்கள் ஏதேதோ பேசிக்கொண்டு போகிறார்கள் - பேசுகிறார்கள் - திட்டுகிறார்கள் - அழுகிறார்கள் - சபிக்கிறார்கள்.

எல்லாம் வீணாவின் காதில் விழுவதுபோல் இருக்கிறது. ஆனால் ஒன்றும் விழவில்லை.

உள்ளுக்குள்ளே இருந்து ஒரு வீணா கேட்டாள்.

''இப்போது நீ எங்கை போறாய்?''

வெளியே நடந்துகொண்டிருந்த வீணா சொன்னாள்.

''பதினைஞ்சு மைல் தள்ளி என்ரை பழைய சிநேகிதி ஒருத்தி இருக்கிறாள் அங்கை போவம்...''

''அவ்வளவு தூரமும் நடந்தோ?''

''வேறை வழி...?''

''உன்ரை ஜீவன் இப்ப சவூதியிலை தனிவாகனத்திலை வேலைக்குப் போவர். இஞ்சை நீ...''

உள்ளேயிருந்த வீணா புறுபுறுத்துக்கொண்டிருந்தாள். வெளியே நடந்துகொண்டிருந்த வீணா மௌனமாய் நடந்தாள்.

அவள் தனியாகவல்லை! நொடிப்பொழுதில் கலைந்து சிதைந்த ஊர்முழுதும் நடந்துகொண்டேயிருந்தது.

நடந்து, நடந்து, நடந்து,... கால் ஓயும்வரை நடந்து... தூரத்துக் கிளையில் குரல் நீட்டிக் குரல்நீட்டிக் கூவுகிற குயிலின் குரலில் அவளது சிந்தனை தடைப்படுகிறது.

பபி விழித்துக் கொண்டாள்.

''அம்மா... வீட்டை போவம்...''

குழந்தைகள் புதிய இடத்தில் இசைவாக்கம் பெறுவது கடினந்தான் என்று வீணு நினைத்தாள்.

''போக ஏலாது பபி. எங்கடை வீட்டுப்பக்கம் எல்லாம் நேற்றுப் பின்னேரம் அவங்கள் வந்திட்டாங்களாம். வீடு இருக்கோ இல்லையோ தெரியாது...''

''அப்ப இனி நாங்கள் இஞ்சையே இருக்கிறது?''

இந்தக் கேள்வியைப் பாப்பா கேட்ட பின்தான், பாப்பாவும் விழிப்பு என்று தெரிந்தது.

''அம்மா எனக்குப் பால்?'' பபியின் அடுத்த கேள்வி. படுக்கையிலிருந்து எழுந்தவுடனேயே பால் குடிப்பது வீட்டில் பபியின் பழக்கம். அகதிகள் என்பதன் அர்த்தம் அவர்களுக்குப் புரியுமா?

''இஞ்சை பால் இல்லை. அம்மா பிளேன்ரீ தாறன் குடியுங்கோ...''

''எனக்குப் பாலதான் வேணும்...''

''நல்ல குஞ்சு பிளேன்ரீ குடியுங்கோ...''





''எனக்கு ஒண்டும் வேண்டாம் போ...''

மறுபுறம் திரும்பிப் படுத்தாள் பபி. வீணுவுக்கு நெஞ்சம் சுட்டது.

நேற்று முழுவதும் நடந்து நடந்து களைத்துப் போன குழந்தைகள்! இன்று அவர்களுக்குப் பால் கூடக் கொடுக்க முடியாத நிலையில் உள்ள வீணு! வெளிநாட்டில் லட்சம் லட்சமாய் உழைக்கிற ஜீவன்! இவர்கள் எல்லாம் ஒரு குடும்பம்!

அவள் வந்து சேர்ந்திருக்கும் புதிய ஊரின் சந்தி- அந்தச் சந்தி முழுநாளும் இருள் உறையக் காரணமாய் இருக்கும் வாகை - அந்த வாகைமரத்தோடு ஒட்டியபடி இவளது பழைய சினேகிதி பூரணியின் வீடு.

பூரணி புதிதாக வாங்கியிருக்கும் அந்த வீட்டில் பூரணியும் அவளது நான்கு வயது மகனுந்தான் அந்த வீட்டில் வீணுவுக்கு எல்லா வசதியும் இருந்தது. ஆனாலும்... சொந்த வீட்டின் சுதந்திரம், நிம்மதி...?

''என்ரை பிள்ளையளுக்குப் பால் வேணும்'' எண்டு எப்படிப் பூரணியைக் கேட்பது?

சைக்கிளில் எதிர் எதிராக வந்த இருவர் வாகை மரத்தின் கீழ் நின்று கதைப்பது கேட்டது. முன் வீட்டு முத்தர் மாமாவின் மகன் ஒருவன் என்று தெரிந்து வீணு வெளியே வந்தாள்.

''என்ன தம்பி எங்கடை ஊர்ப்பக்கம் என்னவாம் புதினம்?''

''நான் இப்ப அங்கதான் போயிட்டுவாறன். அங்கை என்ன, ஊருக்குள்ள இறங்கேலாது... நெருப்

புச் ஷெல்லடி நடக்குது. காலமை ஆடு, மாடு பார்க்கப் போன மூண்டு பேர் சரியாம்...''

''இவை ஒருக்கா வெளிக்கிட்டு வந்தாப் பிறகேன் போறனவை? கண்டறியாத ஆடும் மாடும்...''

'உங்கடை வீட்டிலையும் ஒரு ஷெல் விழுந்ததாக் கதைச்சினம். உண்மை, பொய் தெரியாது. நான் போய்ப் பாக்கேல்லை...''

சந்தி இருள் உறையக் காரணமாய் இருக்கும் அந்த வாகை மரத்தின்கீழ் நெஞ்சைப் பிடுங்குகிற இருண்ட ஏக்கம் - சூன்யத்தில் வாழ்வதுபோன்ற உணர்வு திடீரென! உள்ளே ஓடினாள்.

''அம்மா...எங்கடை வீட்டிலை ஷெல் விழுந்திட்டுதெண்டு மூத்தர் மாமா மகன் சொல்லுறான். நான் ஒருக்காப் போய்ப் பாத்திட்டு வரட்டே?''

என்ன செய்வதென்று தெரியாத அந்தர உணர்வு மனதினுள்.

''உனக்கென்ன விசரே? நடந்துபோகப்போறியே திரும்பி...'' அம்மா இரைந்தாள்.

''மூத்தர் மாமான்ரை மகனைக் கேப்பம். சைக்கிளை ஒருக்காக் கொண்டுபோகச்சொல்லி...''

இவர்கள் கதைத்த ஒலியினை வாங்கிக்கொண்டு பூரணி வெளியே வந்தாள்.

''ஏதோ நல்ல காலம்! நீங்கள் உயிருக்குச் சேதமில்லாமல் குழந்தையளோடை வந்து சேந்தது... இனி...போறது போகட்டும். மிஞ்சிறது மிஞ்சட்டும்... அங்கை போய் வாங்கிக்கட்டவேண்டாம்..,''





என்று சொல்லிக்கொண்டே கையில்கொண்டு வந்த தேநீரை வீணாவிடம் கொடுத்தாள்.

''உனக்குத்தான் நான் பெரிய கஷ்டம் தாறன்...''

''எனக்கொரு கஷ்டமும் இல்லை. நீ இஞ்சை வந்ததிலை எனக்குச் சந்தோஷமெல்லோ. நானும் மகனும் தனிய...மொட்டுமொட்டெண்டு இருக்கிற வீடு. இப்ப பள்ளிக்கூடமும் நடக்கிறேல்லை. நீ இதை உன்ரை வீடு மாதிரியே நினைச்சுக்கொள். கொஞ்சநாளைக்கு இரன்...''

நிறைந்து வந்த சிரிப்பைப் புன்சிரிப்பாக அழுத்திக் கொண்டு கூறிய பூரணியின் சொற்கள் வீணாவின் புண்பட்ட மனதுக்குப் பெருத்த ஆறுதலைத் தந்தன.

''பன்மை, தள்ளி வைக்கும் பேச்சு..,ஒண்டும் இல்லாமல் நீ முந்தியைப் போலை 'நீ' எண்டு சொல்றதே ஒரு நிறைவாய் இருக்கு...''

பபி தேநீரை வாங்கிக் குடித்தாள். குடிக்கும் போது தற்செயலாய் சிறிதளவு நிலத்தில் ஊற்றுப் பட்டுவிட்டது. 'சொந்த வீடு' என்றால் வீணா அதைப் பற்றிக் கவலையே படுவதில்லை. ஆனால் இது பூரணியின் புது வீடு... புது நிலம். தேநீர்க்கறை. பழந்துணி எடுத்து நனைத்துத் துடைக்கவேண்டியிருந்தது. பூரணி, ''அது பரவாயில்லை'' என்று சொன்னாலும்கூட....அந்நியம் அந்நியந்தான். சொந்தம் சொந்தந்தான்.

பூரணியின் மகனுடன் பபியும், பாப்பாவும் விளையாடப் போய்விட்டனர். குழந்தைகள் ஒன்றிக்கொள்வதும் விரைவில்! சண்டை பிடிப்பதும் விரைவில்!

''வீட்டிலை ஷெல் விழுந்ததைப்பற்றிக் கனக்க யோசிக்காதை வீணா! ஜீவன் வந்தாப்பிறகு புதுவீடு கட்டிறதுதானே!''

''.........''

பூரணியைப் பார்க்காத பார்வையுடன் வீணா இருந்தாள்.

''ஜீவன் எப்ப வருவார்?...''

''நான்உடனை வரச்சொல்லி இரண்டு கடிதம் போட்டிட்டன்'..''

''காயிதங்கள் இப்ப வாறதும் இல்லையாக்கும். இனித் துப்பரவா வராது''

''எனக்குள்ளை ஏதோ வரக்கூடாத கற்பனையளும் வருது பூரணி...''

தன் இளமைக்காலச் சிநேகிதியுடன் மனம் திறந்து பேசினாள் வீணா. 'எயிட்ஸ்' பற்றிய தன் பயத்தையும், பயத்திற்கான காரணங்களையும்கூடக் கூறினாள்.

''நீ ஏன் அப்பிடி எல்லாம் வீணாகப் பயப்படுறாய்? அப்பிடி ஒண்டும் நடவாது...''

''நானும் ஜீவனும் மனதாலை நிறையத் தூரம் விலகிப் போயிட்டம். நெஞ்சம் மட்டும் கலக்கிற கலவி இனி எங்கடை வாழ்க்கையிலை சாத்தியமில்லைப்போலத் தெரியுது...''

பூரணிக்கு வீணாவை இளமையிலையே தெரியும். இப்போதுதான் 'கோப்பி' குடித்ததுபோல் எப்போதும்





ஒரு உற்சாகம் ஒரு அமளியுடன் காணப்படுகிற ஒருத்தி. இன்று...?

''உனக்கு நடக்கக்கூடும் எண்டு நீ பயப்படுகிறதிலை ஆகக் கெடுதியானதை ஏற்றுக்கொள் மனதாலை... வீடு இல்லையெண்டு நினைச்சுக்கொள். ஜீவன் இனி வரமாட்டார் எண்டே நினைச்சுக்கொள், உன்மனம் 'வோஸ்ற்றை அக்செப்ற்' பண்ணிட்டால் பிறகு எது நடந்தாலும் சந்தோஷந்தான். உளவியல் ரீதியாகச் சக்தியைச் சேமிக்கிற முறை இதுதான்...''

வீணாவைத் தோளில் பிடித்து ஆதரவுடன் குசினிக்கு அழைத்துச்சென்றாள் பூரணி.

உண்மை நட்பின் மென்மையான வருடல் தோளில் மட்டுமல்ல வீணாவின் உள்ளத்திலும் விழுந்தது.

'வாழ்க்கை என்றது ஊஞ்சலிலை உட்கார்ந்து ஊஞ்சல் ஆடுவதல்ல. புயலுக்கு நடுவிலை படகைச் செலுத்திறது மாதிரியானது எண்டு காண்டேகர் சொல்லிறார்...உனக்குத் தெரியுந்தானே...''

''தத்துவங்கள் வாசிக்க நல்லாத்தான் இருக்கும். வாழ்க்கையிலை வரேக்கை...'' என்று இழுத்தாள் வீணா.

''இரண்டு பேருமாகச் சேர்ந்து சமைப்பம்.. இந்தா, இந்தத் தேங்காயைத் திருவு...''

குசினிக்குள் அழைத்துச் சென்று தேங்காயும் துருவு பலகையும் கொடுத்தாள் பூரணி.

''என்னால உனக்கு எவ்வளவு கரைச்சல்...''

''சும்மா திருப்பித் திருப்பிச் சொல்லாதை. நான் என்னுடைய மகனுக்காகச் சந்தோஷமா வாறேல்லையா? நீயும் உன்ரை இரண்டு பிள்ளையளுக்குமாகச் சந்தோஷமா இருக்கவேணும்... முறிஞ்ச குடும்பத்திலை. பிரிஞ்ச குடும்பத்திலை, மனஒற்றுமை இல்லாத குடும்பத்திலை வளர்ந்த நெறிபிறழ்ந்த பிள்ளையளா அவையள் வளர இடம் குடுக்கப்படாது...''

பபியும் பாப்பாவும் எங்கே என்று பார்த்தாள் வீணா. எங்கிருந்தோ வெள்ளை மணல் அள்ளிக்கொண்டு வந்து கொட்டி, மணல் வீடு கட்டி விளையாடிக்கொண்டு விளையாட்டின் நடுவே மூன்று குழந்தைகளும் பெரிதாகச் சிரிப்பது கேட்கிறது.

அந்த மாதிரிச் சிரிப்புக்காகவே சிரிக்கிற சிரிப்பைப் பார்த்து எத்தனை நாளாயிற்று?

தேங்காய் துருவத் தொடங்கினாள் வீணா.





''அடுத்து நடைபெற இருக்கும் நிகழ்ச்சி தடை தாண்டி ஓட்டம். இங்கே பல்வேறு தடைகள் மைதானத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்தத் தடைகளைப் போட்டியாளர்கள் ஒவ்வொன்றாய்த்தாண்டி ஓடவேண்டும். மனத் தைரியத்துடன் எல்லாத் தடைகளையும் தாண்டி முதலில் ஓடுபவர் வெற்றி பெற்றவராகக்கருதப்படுவார்...''

சகோதர அறிவிப்பாளர் வரதன் இவ்வாறு அறிவித்தார்.

## 17-9-87

## 14

முதலாவது தடையாக ஒரு பலூன் இருக்கிறது. அதனை ஊதி உடைக்க வேண்டும். ஒருவரும் குறுக்கு வழிகளைக் கையாள முடியாது. ஊசியால் குத்தி உடைக்க முடியாது. கையால் நெரித்து உடைக்க முடியாது. ஊதியே உடைக்க வேண்டும்.''

''அடுத்து கோதுமை மாவினுள்ளே ஒரு இனிப்பு மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதனை ஊதி எடுத்து உண்ணவேண்டும். கைகளைப் பின்னே கட்டிக்கொள்ள வேண்டும்''

''அதன்பிறகு அடுத்த மேசையில் வைக்கப்பட்டுள்ள ஊசியில் நூலைக் கோத்து வைக்கவேண்டும். அவசரமும் பதற்றமும் உள்ளவர்கள் இந்த தடையைத் தாண்ட முடியாது. நிதானமும் கவனமும் உள்ளவர்களே இதனை விரைவில் தாண்டுவர்...''

''இறுதியாக அங்கே வைக்கப்பட்டுள்ள சாக்கினுள்ளே கால் விட்டு நடந்து பேற்றுக்கோட்டை அடைதல் வேண்டும்...''

இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றும் இலக்கங்கள் இருபத்தாறு. நூற்றுப்பன்னிரண்டு, இருநூற்றுநாற்பத்தேழு, அறுபத்து மூன்று, ஐந்து...''

அறிவிப்பாளராகக் கடமையாற்றும் வீணை இந்த வருடத்தில் இந்தக் கல்லூரியில் இப்படி ஒரு விளையாட்டுப் போட்டியை நடத்தமுடியும் என்று கனவிலும் கருதவில்லை.

பூரணி வீட்டில் ஏறத்தாழ ஒரு மாதம் தங்கியிருக்கவேண்டி ஏற்பட்டுவிட்டது. பூரணி அடிக்கடி சொல்லிவந்ததுபோல் வாழ்வில் நடைபெறக்கூடிய மிக மோசமான விடயங்களை மனம் ஏற்றுக்கொண்டு விட்டது. இனிமேல் எது நடந்தாலும் மகிழ்வுதான்.

சக்திச் சேமிப்பதான். சக்திச் செலவு இல்லை.

அத்தகைய ஒரு மகிழ்வு கடந்தவாரம் ஏற்பட்டது.

ஆண் காகம் ஒன்று நெல்லிமரக் கிளையில் அமர்ந்து பெட்டைத் தலையைப் பிரியமாய்க் கோதுவதை இவள்





பார்த்துக்கொண்டிருந்த ஒரு காலைப்பொழுதில் ஜீவனின் கடிதம் வந்தது.

இங்கு நடைபெற்ற நிகழ்வுகளை எல்லாம் வானொலி மூலம் கேட்டுத்தான் அதிர்ச்சியடைந்ததாய்க் குறிப்பிட்டிருந்த அவன் தான் விரைவில் நாடு திரும்புவதற்கான ஆயத்தங்களைச் செய்து வருவதாயும் எழுதியிருந்தான்.

ஜீவன் வந்தா ...எங்களுக்குள்ளை என்ன பிரச்சனையள் வந்தாலும் நான் 'அட்ஜஸ்ற்' பண்ணிப்போகவேணும். நான் குடும்பத்திலை மூத்த பிள்ளையாப் பிறந்தனான். அவர் கடைசிப் பிள்ளையாப் பிறந்தவர். ஆனபடியா நான் ஒரு தாய்போலை பொறுப்போடை இருந்து அவரை என்ரை மூத்தபிள்ளை போலை பாத்துக் கொள்ளவேணும். அவர் எங்களை விட்டிட்டு இனி ஒரு இடமும் போகவிடப்படாது. குடும்பம் முறிஞ்சு போகக் கடைசிவரையும் விடப்படாது...''

தடை தாண்டி ஓட்டங்கள் முடிந்து நனூறு மீற்றர் ஓட்டங்கள் ஆரம்பமாகின்றன. அதில் ஆரம்பத்தில் வேகமாக ஓடியவர்கள் இறுதியில் பிந்திக்கொள்ள ஆரம்பத்தில் நிதானமாகக் களைப்பின்றி ஓடியவர்கள் இறுதியில் வெற்றி பெறுகிறார்கள்.

தன்னுடைய வாழ்வும் இடையில் தொய்ந்துபோயிருந்தாலும் இறுதியில் தான் வெற்றிபெறக்கூடும் என்ற நம்பிக்கை வீணைவுக்குள் துளிர் விடுகிறது.

பூரணி வீட்டில் இருந்த காலத்தில் ஒரு நாள் மாலை முற்றத்தில் அமர்ந்திருக்கையில் பூரணி சொன்னாள்.

''நீ ஜீவனோடை வெளிநாட்டுக்குப் போயிருக்க லாம். போயிருந்தா ஒரு பிரச்சினையும் வந்திருக்காது''

''போயிருக்கலாம் எண்டுதான் நானும் சிலவேளை நினைக்கிறனான் - ஆனால் இப்ப என்ரை நினைப்பு முற்றாக மாறிவிட்டுது உனக்குத் தெரியுமே... எங்களோடை படிச்ச சரோ...சரோவின்ரை அப்பா தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊத்திக் கொளுத்தினவர் அவற்றை பிள்ளையள் எல்லாம் வெளிநாட்டிலை நல்லா இருக்குதுகள். அதற்குப்பிறகு அப்பாவைப் பக்கத்திலை இருந்து கவனிக்கவேணும் எண்ட நினைப்பும் வந்திட்டுது. எல்லாம் நன்மைக்குத்தான் நடக்கிறது. நாங் இல்லாட்டி அம்மா இந்தப் பிரச்சினைக்கு என்ன செய்திருப்பா... சொல்லு...''

இப்போது நாலு தர நூறு மீற்றர் அஞ்சல் ஓட்டங்கள் ஆரம்பமாகின்றன. ஓட்டவீரர்களுக்கிடையில் குறுந்தடிகள் மாற்றம் செய்யப்படும்போது ஒருவர் குறுந்தடியை நிலத்தில் போட்டு விடுகிறார். அவர் திரும்பிவந்து, அந்தத்தடியை எடுத்துக்கொண்டு போவதற்கிடையில் மற்ற மூன்று இல்லங்களும் அவரை முந்தி விடுகின்றன.

இதைக்கண்டு தத்தமது இல்லங்களின் உள்ளே அமர்ந்திருந்த மாணவர்கள் எல்லாம் தம்மை மறந்து இல்லங்களை விட்டுவெளியேறுகிறார்கள். மைதானத்தின் ஓடுபாதைகளுக்கு அருகில் வந்து கைதட்டி ஆரவாரம் செய்து உற்சாகம் கொடுக்கிறார்கள்.

''கம் ஒன்... கம்ஒன்.. றன் ஃ பாஸ்டர்...'' என்று ஒரே குதூகலச் சத்தம்! தன்னைச் சுற்றியுள்ள உலகம் முழுவதுமே நம்பிக்கையுடன் இருப்பதாய் வீணாவுக்குத் தோன்றுகிறது.





தொடர்ந்து பழைய மாணவர் ஓட்டம் ஆரம்பமாகிறது.

''நீங்கள்போய் நிகழ்ச்சியிலை பங்குபற்றுங்கோ... நான் அறிவிக்கிறன்...

வீணாவை மைதானத்திற்கு அனுப்பி விடுகிறார் சக அறிவிப்பாளர் வரதன்.

''அடுத்து நடைபெற இருக்கும் நிகழ்ச்சி பழைய மாணவர் ஓட்டம். பழைய மாணவர்கள் கட்டிளமைப் பருவத்தைத் தாண்டியவர்கள். தனிவாழ்வு ஒன்றை அமைத்துக் கொண்டவர்கள், அல்லது விரைவில் அமைக்க இருப்பவர்கள். அவர்களுக்குச் சமநிலையும் மிக அவசியம். ஆகவே பழைய மாணவர்களே, உங்களுக்கு ஒரு சோடாப் போத்தல் நீர் நிரம்பிய நிலையில் தரப்படும் நீங்கள் அதைத் தலையில் வைத்துக்கொண்டு நடந்து செல்லவேண்டும்.''

''ஆம் ஆண்கள் யோசிக்கவேண்டாம், உங்களுக்கும் அதே போட்டிதான்! பெண்களைவிட உங்களுக்குத்தான் இந்தச் சமநிலை மிகவும் முக்கியமானது.''

''போத்தல் இடைவழியில் விழுந்துவிட்டால் அந்த வீரன் அல்லது வீராங்கனை மீண்டும் ஆரம்ப ஸ்தானத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும்...''

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பல பழைய மாணவர்கள் போத்தல்களுடன் ஆரம்ப ஸ்தானத்தில் நிற்கிறார்கள்.

தொடக்குநர் விசிலை ஊதுகிறார்.

வீணா மிக மெதுவாகவே நடக்கிறாள். அவளுக்கு முன்னே பலர் வேகமாகப் போகிறார்கள் வேகமாகப்

போனவர்கள் பலர் ஒவ்வொருவராகப் போத்தலை விழுத்திக்கொண்டு திரும்பி வருகிறார்கள். வீணா தொடர்ந்து மிக மெதுவாகவே நடக்கிறாள்.

இப்போது அவளுக்கு முன்னே செல்வோரின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது.

பேற்றுக்கோடு அண்மிக்கிறது. வீணாவுக்கு முன்னே சென்றுகொண்டிருந்த பெண்ணும் திரும்பிவிட்டாள்.

ஆம்! பழைய மாணவருக்கான ஓட்டத்தில் வீணா முதலிடம் பெற்றதாக வரதன் அறிவிக்கிறார். பபியும் பாப்பாவும் அம்மம்மாவுக்கு அருகில் இருந்து,

''அம்மாவுக்கு பிறைஸ் குடுப்பினமோ?'' என்று கேட்கிறார்கள்.

''குடுப்பினம்; வீட்டைபோய் வாங்கிப் பாப்பம்...'' என்று அம்மம்மா சொல்ல அவர்கள் மனம் நிறைந்து சிரிக்கிறார்கள்.

அன்றைய மெய்வல்லுநர் போட்டியின் இறுதி நிகழ்ச்சியான கயிறு இழுத்தலுக்கான அறிவிப்புச் செய்யப்படுகின்றது.

கயிறு இழுத்தலில் பங்கு பெறும் இரு இல்லங்களும் வெளியேவந்து கயிற்றைப் பிடித்துக்கொள்கிறார்கள்.

சமபருமன் உள்ள இருவிசைகள், ஒரு புள்ளியில் எதிர்த்திசைகளில் பிரயோகிக்கப்படும்போது அப்பொருள் சமநிலையில் இருக்கும். ஒருவிசையின் பருமன் அதிகரிக்கும்போது பொருள் அத்திசையில் நகரும்





என்ற பௌதிகவியல் உண்மையை எடுத்துக் காட்டும் நிகழ்வு!

கயிறு இழுத்தலில் பங்கு பெறும் இரு இல்லங்களும் முதலில் தேவர்களும் அசுரர்களுமாய்த் தோன்றுகிறார்கள் வீணாவுக்கு.

பின்னர் அறமும் மறமுமாகத் தோன்றுகிறார்கள்.

அடக்கப்பட்ட மக்களும் கொடுங்கோல் அரசுமாய்த் தோன்றுகிறார்கள்.

அவள் தேவர்களாய் கற்பனை செய்த இல்லத்தின் பக்கமே கயிறு மெதுவாக அசைந்து செல்லுகிறது.

அறமே வெற்றிபெறுகிறது.

இறுதியில் பிரதமவிருந்தினர் அவர்களின் பாரியார் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்குகிறார்.

வீணா பரிசுபெறும்போது பபியும் பாப்பாவும் அருகில் நின்று சிரிக்கிறார்கள்.

''அம்மா கெட்டிக்காரி...''

# பின்னிணைப்பு

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர்

## கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின்,

முதன்மை விருந்தினர் உரையில் இருந்து

கல்வி, கலை, இலக்கியம் என்பன பண்பாட்டு வளர்ச்சிக்கான பயன் மிகு சாதனங்களாகும். அவை மனித உள்ளத்தை விரிவு படுத்துவதோடு மனித நேயம் எனப்படும் உயரிய பண்பை வளர்ப்பவை. எனவே இத்துறைகளில் பணியாற்றுபவர்கள் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வோர் ஆகிறார்கள். இவர்களுட் பலர் மேற்படி துறைகளில் ஒன்றை மட்டும் கவனத்திற் கொள்பவர்கள். சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் ஈடுபாடு கொள்பவர்கள். இன்று இங்கு தம . இலக்கிய வெளியீடுகளை நிகழ்த்தும் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் ஒரு ஆசிரியை என்ற வகையிலும், நாடகத் துறையில் ஈடுபாடு கொண்டிருப்பவர் என்ற வகையிலும், மேற்கூறிய கல்வி, கலை, இலக்கியம் எனப்படும் முத்துறைகளிலும்பண்பாட்டுப்பங்களிப்புச் செய்து வருபவராகிறார். அத்தகையவரின் இலக்கியத் துறைப் பணி சார்ந்த இன்றைய இந் நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களைக் கடந்த ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக — அவர் செல்வி கோகிலா சிவசுப்பிரமணியம் ஆகத் திகழ்ந்த காலத்திலிருந்து — அவதானித்து வந்துள்ளேன். மகாஜனக் கல்லூரியின் உயர் வகுப்பு மாணவியாகத் திகழ்ந்த காலப் பகுதியில் நாடக நடிகையாக மேடைகளில் தோற்றம் தந்தவர் அவர். இலங்கைக் கலைக் கழக நாடகப் போட்டிகளில் மகாஜன முதலிடங்களைப் பெற்றுத் திகழ்ந்த அக்காலப் பகுதியில் அவ் வெற்றிகளுக்குக் காரணகர்த்தாக்களாகத் திகழ்ந்தவர்களில் செல்வி கோகிலாவும் ஒருவர்.

கல்லூரி வாழ்க்கையின் பின்னர், பல்கலைக்கழகத்திலே மருத்துவத் துறையில் அவர் பயின்ற வேளையில் புனை கதைத்துறையில் அடியெடுத்து வைக்கத் தொடங்கியிருந்தார். பின்னர் ஆசிரியப் பணியில் ஈடுபட்ட காலப் பகுதியில் இருந்து தொடர்ந்து புனை கதைகள் படைத்து வரும் இவர், இன்றைய ஈழத்தின் முதல் வரிசைப்படைப்பாளிகளுள் ஒருவராகக் கருதத் தகும் தகுதியை ஈட்டிக் கொண்டுள்ளார். ஏற்கெனவே மூன்று சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ள அவர், இன்று இந்த ஒரே மேடையில் நாவலும் சிறுகதைத் தொகுதியுமாக இரு நூல்களை வெளியிட்டுச் சாதனை புரிகிறார்

........................................ எழுத்துத் துறையில் ஈடுபட விழையும் ஒருவர் முதலில் சிறுகதை எழுதி, அதன் மூலம் பெற்ற அநுபவத்தால் நாவல் படைக்க முயல்வது வழக்கம். கோகிலா மகேந்திரன் அவர்களும் முதலில் சிறுகதைத் துறையில் கவனம் செலுத்தி அதில் பெற்ற அநுபவ முதிர்வால் நாவல் படைப்பதில் ஈடுபாடு காட்டியுள்ளார். இவ்விரு புனைகதைத் துறைகள் மூலமும் இவர் எமது சமகால சமுதாயத்தின் பல்வகைப் பிரச்சினைகளுக்கும் எழுத்துருவம் தர முயன்றுள்ளார். அவை தொடர்பான தனது அநுபவங்கள், உணர்வோட்டங்கள் என்பவற்றை எமக்கு உணர்த்த முயன்றுள்ளார். இம்முயற்சியில் அவர் குறிப்பிடத்தக்க வெற்றியும் பெற்றுள்ளார் என்றே கூறலாம்... ........—ஈழத்துப் பெண் எழுத்தாளர் வரிசையிலே கோகிலா அவர்கள் தமக்கெனத் தனிப் பண்புகளுடன் வேறுபட்டுத் திகழ்வதை அவரது படைப்புகள் எமக்குப் புலப்படுத்தி நிற்கின்றன, குறிப்பாகச் சமூகநிகழ்ச்சிகளையும் அவற்றினடியாக நிகழும் உணர்ச்சி முனைப்புக்களையும் சித்திரிப்பதைவிட, அவற்றுக்கு அடிப்படையான உளவியற் காரணிகளை விமர்சிப்பதே கோகிலாவை ஏனையவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் முக்கிய அம்சமாகும். நோய் தீர்க்கும் மருத்துவர் ஒருவர் நோயாளியைப் பகுப்பாய்வு செய்து, நோயின் மூலத்தை இனங்காண முயல்வதுபோலக் கோகிலா அவர்கள் சமூக நோய்

களுக்கான காரணிகளை உளவியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்பவராக அமைகிறார் ……… …
………………மருத்துவத் துறையில் இவர் பெற்ற ஆரம்பக் கல்வியும், அவர் தாமே ஈட்டிக்கொண்ட உளவியல் அறிவும் அவரது இவ்வகை நோக்குகளுக்கு. நோய் தீர்க்கும் மருத்துவர் நிலையிலான பார்வைக்கு மிகவும் துணை புரிந்துள்ளன …………………………
……… …நவீன இலக்கியப் படைப்பிலே முதன்மை பெறும் அம்சங்களில் ஒன்று சமூக மாந்தரின் பேச்சு மொழி வழக்கு. கதை மாந்தரை உள்ளபடியே நாம் தரிசிப்பதற்கு இப்பேச்சு மொழி நடை மிக அவசிய மானது. கோகிலா அவர்களுக்கு எமது பிரதேசப் பேச்சு மொழி மிகவும் கை வந்துள்ளது. அவரது எல்லாப் படைப்புகளிலும் ஆசிரியர் கூற்றாக அமையும் இடங்களைத் தவிர உரையாடல் பகுதிகளில் கதை மாந்தரின் சமூக, கல்வித் தரங்களுக்கு ஏற்பப் பேச்சு மொழி நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளது ………………………
………………… தரமான படைப்புக்களைத் தந்து வரும் கோகிலா அவர்கள் கடந்த பத்தாண்டுக் காலப் பகுதியில் இடைவிடாது எழுதி வருபவர் என்ற வகையிலும் தனிக் கவனத்துக்கு உரியவர் ஆகிறார். ஈழத்துப் பெண் எழுத்தாளர்களிலே மிகவும் அதிகம் எழுதியவர் என்று கூட அவரைக் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது. எனினும் இது ஆய்வு பூர்வமாக நிறுவப்பட வேண்டிய தொன்றாகும். ஆனால், சுயமாக நூல்களை வெளியிடுவோர்களில் அவர் முதல் வரிசையில் நிற்கிறார் என்பதில் ஐயமில்லை. எழுதுவதில் மட்டுமல்லாமல் அதனை விலைப் படுத்துவதிலும் அவர் சாதனை புரிந்துள்ளார். … …
…………………………ஈழத்து இலக்கியத்திற்கும் அதனூடாக எமது பண்பாட்டுக்கும் அவரது தொடர்ந்த பணி புதிய வளங்களைச் சேர்க்கும் என நம்புவோம்.

*(கோகிலா மகேந்திரனின் துயிலும் ஒரு நாள் கலையும் நாவல், பிரசவங்கள் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை.)*

*18-05-1986.*

